www.tamilarangam.net

# களத்தில்

> இந்த உலகில் அநீதியும்அடிமைத்தனமும் இருக்கும்வரை சுதந்திரத்தை இழந்து வாழும் மக்கள் இருக்கும்வரை விடுதலைப் போராட்டங்களும் இருக்கத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாத வரலாற்று நியதி.
>
> - தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2027 கடகம் 24 (07.08. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60 p

- கிளிநொச்சி நோக்கிய 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கை -

## தவறான வழியில் பிழையான அடித்தளம்

'ஓயாத அலைகள்' எனும் குறியீட்டுப் பெயருடன் 18-07-96 இல் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலில், சிறிலங்கா இராணுவம், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முகாமைப் புலிகளிடம் முற்றாகப் பறிகொடுத்ததுடன், 1500 க்கும் மேற்பட்ட படையினரையும் இழந்துள்ளது. முல்லைத்தீவில் பெற்ற தோல்வியால், தென் இலங்கையில் எழுந்துள்ள நெருக்கடி நிலையைத் தணிக்கும் நோக்குடன் சிறிலங்கா அரசு ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி நோக்கிய படை நகர்த்தலை தொடங்கியுள்ளது. 28-07-96 அன்று காலை ஆட்டிலறி எறிகணைகளை ஏவியவண்ணம் ஆனையிறவு முகாமிலிருந்து டாங்கிகள், கவசவாகனங்கள், சகிதம் விமானப் படையின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இப் படை நகர்த்தல் பொதுமக்களைப் பழிவாங்கும் நோக்கில் அமைந்துள்ளது. ஏற்கெனவே திட்டமிடப்பட்ட இராணுவ நடவடிக்கையாக இது இருந்தபோதிலும், காலப்பொருத்தமற்ற சூழ்நிலையில் தொடங்கப்பட்ட இந்த [illegible]ணுவ நடவடிக்கை ஆய்வாளர்கள் மத்தியில் பல சந்தேகங்களையும் மீ[illegible] [illegible]விகளையும் எழுப்பியுள்ளது.

இவ் இராணுவ நடவடிக்கை ஏன் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறித்து இராணுவ ஆய்வாளர்களிடம் பல பதில்கள் இருந்தபோதும், இதற்கு முறையான ஓர் பதிலும் உண்டு. அதாவது, முல்லைத்தீவுப் படைத்தளத்தில் இராணுவத்திற்கு ஏற்பட்ட படுதோல்வியை மறைக்கவும் அரசியற் காரணங்களுக்காகவும் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதென்பதே அதுவாகும். 'சண்டே ரைம்ஸ்' இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் இராணுவ நடவடிக்கை குறித்து, "அரசியற் காரணங்களுக்காக ஆனையிறவிலிருந்து 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. முல்லைத்தீவில் இருந்த படையினருக்கு என்ன நடந்தது என்று தெரியாத புதிராக உள்ள நிலையில் இன்னுமொரு படைநடவடிக்கை தேவையா? இது எவ்வளவு தூரம் பலனளிக்கும் என்பது கேள்வியாகவே உள்ளது" எனக் கூறியுள்ளார். மேலும், இவ்இராணுவ நடவடிக்கை நோக்கத்தில் இராணுவ அனுகூலம் என்பதைவிட, அரசியல் அனுகூலமே பெரிதாக உள்ளமை வெளிப்படையானது. அத்தோடு, இராணுவ அனுகூலம் ஒரு சில பெறப்படினும் அதனை இராணுவத்தினால் தக்க வைக்க முடியுமா என்பதுவும் சந்தேகமே. இதனைப் பலரும் சுட்டிக்காட்டவும் தவறவில்லை. முல்லைத்தீவுப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## பரந்தனில் கடும் சண்டை

### ✳ 100 கும் மேற்பட்ட படையினர் பலி

### ✳ 5 டாங்கிகள் தாக்கியழிப்பு

**04.08.96** அன்று, பரந்தனில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் நோக்குடன் முன்னேற முயற்சித்தனர். அதிகாலை நேரம் பெருமெடுப்புடன் விமான, ஆட்டிலறி மற்றும் டாங்கிகளின் உதவியுடன் நகர ஆரம்பித்த வேளையில், அவர்களை எதிர்கொண்ட புலிவீரர்கள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இரு பகுதியினருக்கும் இடையில் கடும் மோதல் தொடங்கியது. புலிகளின்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## சர்வதேசக் குற்றச் செயல்களில் சிறிலங்கா அரசு

### ✳ 200,000 மக்கள் இடம்பெயர்வு ✳ மக்களுக்கு உணவை வழங்கவும் மறுப்பு

கிளிநொச்சியைக் கைப்பற்றும் நோக்குடன் சிறிலங்காப் படையினரால் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கையால் மீண்டும் ஓர் அவலம் தமிழ் மண்ணில் ஏற்பட்டுள்ளது. முல்லை மண்ணில் தமக்கு ஏற்பட்ட படுதோல்விக்குப் பழிவாங்கும்முகமாக, ஆனையிறவில் இருந்து இடைவிடாத கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டபடி, சிறிலங்காப் படையினர் பரந்தன் நோக்கி முன்னேறினர். இதன்போது, சண்டை நடைபெறும் பகுதிக்கு அப்பால் அதாவது, கிளிநொச்சி நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மக்களைக் கொல்லும் நோக்குடன் சிறிலங்கா விமானப் படையினர், 'கிபீர்', 'சுப்பசொனிக்', 'புக்காரா' தாக்குதல் விமானங்கள் மூலம், தப்பிஓடும் மக்களை இலக்கு வைத்துத் தாக்குதல்களை நடாத்துகின்றன. இது 'ஓர் பழிவாங்கல் தாக்குதல்' என்பதனை இவ்வாறான மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

இத் தாக்குதல்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள யாழ்.குடாநாட்டில் இருந்து [illegible]டம்பெயர்ந்து கிளிநொச்சியில் வாழ்ந்த மக்களும் ஏற்கெனவே கிளிநொச்சியில் வாழ்ந்த மக்களுமாக 200,000க்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். காட்டுப் பகுதிகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் மக்கள் தஞ்சம் அடைந்துள்ளனர். சிறிலங்காப் படைகளின் தரைநகர்வு விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்புக்களைச் சந்தித்துள்ள வேளையில் விமானக்குண்டுவீச்சு, எறிகணை வீச்சுக்கள் உக்கிரமடைந்து மக்களை மேலும் அச்சத்துக்குள்ளாக்கி வருகின்றன.

### தொண்டர் நிறுவனங்களும் இடம்பெயர்வு

சர்வதேச போர் நியதிகளை மீறி சிறிலங்கா நடத்தும் இக் குற்றச் செயல்களால் கிளிநொச்சி நகரத்தில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மல்லாவிக்கும் மற்றும் பிரான்சிய எல்லைகளற்ற மருத்துவத் தொண்டர் நிறுவனம் (M.S.F.) மடுவுக்கும், ஒக்ஸ்பாம், ஐ.நா அகதிகள் ஆணையாளர் அலுவலகம் கனகராயன்குளத்திற்கும் இடம்பெயர்ந்துள்ளன. மக்களும் தொண்டர் நிறுவனங்களும் இடம்பெயர்ந்த நிலையில் கிளிநொச்சிப் பகுதி வெறிச்சோடிப்போய் இருக்கின்றது. கிளிநொச்சி வைத்தியசாலையும் செயலற்றுப்போய் உள்ளது. அத்துடன், கிளிநொச்சி வைத்தியசாலை ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகளாலேயே தாக்கப்பட்டு பலத்த சேதமடைந்துள்ளதாகவும் பல வெளிநோயாளர் பிரிவினர்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

### ரூவண்டா, சோமாலியாவை விட

## மக்களின் உள்ளக இடப்பெயர்வு சிறிலங்காவிலேயே மிக அதிகம்

### - ஐ.நா அகதிகள் ஆணையாளர் தகவல்

ரூவாண்டாவை விட, சோமாலியாவை விட சிறிலங்காவிலேயே உள்ளக இடப்பெயர்வுற்ற மக்களின் தொகை அதிகமாக உள்ளது என்ற உண்மையை ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

ரூவாண்டாவில் 500,000 மக்களும் சோமாலியாவில் 300,000 மக்களும் உள்ளக இடப்பெயர்வு அடைந்துள்ளனர். ஆனால் சிறிலங்காவில் இவ்வாண்டின் முதற்காலாண்டு

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல்கள்: ஐந்து தினங்களில் மேஜர் உட்பட 37 படையினர் பலி

## போராளிகள் தரப்பில் இழப்பில்லை

**28.07.96** அன்று மிகவும் பலப்படுத்தப்பட்டிருந்த ஆனையிறவு முகாமுக்குள் வடதிசை மூலமாக முன்னணிக் காவலரண்களை ஊடறுத்து தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் 10 படையினரைக் கொன்றுவிட்டு வெற்றியுடன் தளம் திரும்பியுள்ளனர்.

இதே தினத்தில் தென்மராட்சி மறவன்புலோ எனும் கிராமத்தைச் சுற்றிவளைத்து, தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட சிறிலங்காப் படையின் ஓர் அணி விடுதலைப் புலிகளின் பதுங்கித் தாக்குதலுக்கு இலக்கானது. சிறிது நேரத் தாக்குதலில் 10 படையினர் அவ்விடத்திலேயே பலியாக மீதி இராணுவத்தினர் படுகாயங்களுக்குள்ளாகி ஓட்டமெடுத்தனர். பல ஆயுதங்கள், ரவைகள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

27.07.96 அன்று, மிருசுவிலில் சுமார் 500 ஆளணிப் பலத்துடன் தேடியழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட முயன்ற படையினர் மீது புலிவீரர்கள் நடாத்திய தாக்குதலில் 3 படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட, இருவர் படுகாயமடைந்தனர்.

இதேதினம் வரணிக் கிராமத்தை முற்றுகையிட்டு சோதனை நடாத்தி கிராம மக்களுக்குத் தொல்லை கொடுக்க முனைந்த இராணுவ அணி ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலில் 3 படையினர் பலியானதுடன் மேலும் மூவர் கடுங்காயமடைந்தனர்.

தொடர்ந்து இதேதினத்தில் வடமராட்சி புலோலிப் பகுதியில் பொதுமக்களை சோதனை செய்து துன்புறுத்தலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது புலிவீரர்கள் நடாத்திய தாக்குதலில் மேஜர் பகீர் எனும் சிறிலங்காப் படை அதிகாரியும், 2 படையினரும் அழிக்கப்பட்டனர். ஒட்டுமொத்தமாக இரு தினங்களுக்குள் ஒரு அதிகாரி உட்பட 29 இராணுவத்தினரை யாழ். குடாநாட்டிற்குள் சிறிலங்காப் படை இழந்துள்ளது.

### திருமலை, அனுராதபுரத்திலும் தாக்குதல்

இதேவேளை 27.07.96 அன்று திருகோணமலை புல்மோட்டைப் பகுதியில் புலிவீரர்கள், நடாத்திய அதிரடியில் 2 படையினர் கொல்லப்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர். இதே தினத்தில் அனுராதபுரப் பகுதியிலும் ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் 3 படையினர் கொல்லப்பட்டு 16க்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

31.07.96 அன்று சிங்களக் குடியேற்றக் கிராமான 'கெக்கெடுவேவ' எனும் பகுதியில் உள்ள முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் கண்ணிவெடித் தாக்குதலுக்குள்ளாகி மூவர் உயிரிழந்ததுடன் ஏனையோர் காயங்களுடன் ஓடித் தப்பித்துக் கொண்டனர். சில ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இக்கிராமம் தமிழ்க் கிராமமாக இருந்து பின்னர் சிங்களக் குடியேற்றக் கிராமமாக மாற்றப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இத் தாக்குதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதங்களும் ஏற்பட வில்லை என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும். ✷

## -கிளிநொச்சி நோக்கிய 'சத்ஜெய" இராணுவ...

மேற்கொண்ட 'ஓயாத அலைகள்" படை நடவடிக்கையானது, விடுதலைப் புலிகளுக்கு ஒரு மாபெரும் வெற்றியை மட்டும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. யாழ் குடாநாட்டு ஆக்கிரமிப்புக்குப் பின்னர் சிறிலங்கா அரசு, உலக ரீதியில் ஏற்படுத்தியுள்ள பெரும்மாயை ஒன்றையும் முற்றாகக் கலையச் செய்துள்ளது. ஆனால், இராணுவ வெற்றியினால் உருவாக்கப்பட்டிருந்த அந்த மாயை, சந்திரிகாவினால் தனியாக இராணுவ வெற்றியாக மட்டும் கொள்ளப்படவில்லை. அத்தோடு, அரசியல் ரீதியாகவும் தமிழ் அரசியலுக்கான அடித்தளமாகவும், அரசின் சகல பிரச்சினைகளுக்குமான நிவாரணியாகவுமே கொள்ளப்பட்டது. ஆனால், இராணுவத்தின் மாயை விடுதலைப் புலிகளால் முல்லைத்தீவில் தகர்த்தெறியப்பட்டது. அதனுடன் இணைந்திருந்த அரசியல் அனுகூலங்களும் கூடவே கலைக்கப்பட்டுவிட்டன. ஒரு வகையில் பார்க்கப்போனால், இராணுவத் தளபதிகள்கூடத் தமது இராணுவ இலக்கு முற்றாக முறியடிக்கப்பட்டுள்ளது என்று வெளியே சொல்லா நிலையில், சந்திரிகா அரசோ அரசியல் – இராணுவ இலக்குகள் எட்டப்பட்டதாகச் சொல்கின்றது. இதனைச் சிங்களவர்கள் கூட நம்பவில்லை.

இதனால், முல்லைத்தீவுத் தாக்குதல் மூலம் சந்திரிகா அரசு அடைந்த இராணுவத் தோல்வியானது அதற்குப் பெரும் அரசியல் தோல்வியாக மாறிவிடும். இந்த நிலையில், தோல்வியை மூடிமறைத்துவிடுவதற்காகக் கிளிநொச்சி நோக்கி, இராணுவம் பெரும் படை நடவடிக்கையை மேற்கொண்டது. தோல்வி கண்ட தமது அரசியல் நோக்கத்தினை இதன்மூலம் ஈடுகட்டலாம் என அரசு எண்ணுகிறது. ஆனால், இந்த இராணுவ நடவடிக்கையானது சந்திரிகா அரசின் அரசியற் தோல்வியை ஒருபோதும் ஈடுகட்டாது. ஏனெனில், ஒருபுறம் முல்லைத்தீவில் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள படுதோல்வியை இத்தாக்குதலினால் ஏற்படப்போகும் வெற்றி ஈடுகட்டமாட்டாதென்பது, 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையினால் கிளிநொச்சியை மீட்கமுடியுமா? மீட்கப்படுமா? அது தக்கவைக்கப்படுமா? என்பதும் சந்தேகத்துக்குரிய தொன்றேயாகும்.

யாழ். குடாநாடு மீது பாரிய படையெடுப்புக்கள் நடத்தப்பட்டபோது இராணுவத் தரப்பில் ஒரு பகுதியினரும், இராணுவ ஆய்வாளர்களும் இதுபோன்று பலமான கேள்விகளை எழுப்பினர். ஆனால் அரசு அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. பாரிய படையெடுப்புக்களைத் தொடர்ந்து மேற்கொண்டது. ஆனால் இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக இடம்பெற்றதாக அரசு கூறிக்கொண்டாலும், அதனைத் தற்பொழுது தக்க வைப்பதற்கு அரசு பெரும் பிரயத்தனம் செய்யவேண்டியுள்ளது. இதற்கெனப் பெரும் எண்ணிக்கையிலான படையினரை இழக்கவும் முன்வந்துள்ளது. இந்தநிலையில் தனது பிழையான அணுகுமுறையில் அமைந்த அரசியற் பலத்தைக் காத்துக்கொள்ள மீண்டும் ஒரு பிழையான அணுகுமுறையையே சந்திரிகா அரசு நாடுகின்றது.

ஆனால், இராணுவ வெற்றி ஒன்றினால் இன ப்பிரச்சினைக்கான அரசியல் நோக்கை எட்ட முனைவதும், அதனை அரசிய லுக்குத் தளமாகப் பயன்படுத்த முயல்வதும் எப்போதும் வெற்றி பெறப்போவதில்லை. ✷

## விமான, எறிகணை வீச்சினால் மக்கள் பலி, பலர் படுகாயம்

சிறிலங்காப் படைகள் முல்லைத் தளப் படுதோல்விக்குப் பின்னர் பழிவாங்கல் தாக்குதல்களை மக்கள் மீது நடத்திவருகின்றனர். கடந்த யூலை 24ம் திகதி, மல்லாவியில் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் 7 மக்கள் கொல்லப்பட்டனர். ஆறுபேர் தலத்திலேயும், வீரப்பு கண்ணியசீலன் எனும் 50 வயது முதியவர் மல்லாவி மருத்துவமனையிலும் உயிரிழந்துள்ளனர். படுகாயத்துக்குள்ளான நிலையில், சீலன் வில்சன் (41வயது) மிதுனன் (24 வயது) குருநாதர் உதயகுமார் (30 வயது) ராசீவன் (15 வயது) வித்தி சின்னத்துரை (56 வயது) அல்பேர்ட் தங்கராசா டென்சில் (17 வயது) மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எறிகணைத் தாக்குதலால், மல்லாவியில் வசந்தகுமாரி (38 வயது), பாரதிபுரத்தில் மாரியப்பன் (44 வயது) ஜே. வள்ளியம்மை (69 வயது) என்பவர்களும் காயமுற்றுள்ளனர். இதேவேளை கிளிநொச்சியில் படையினரின் எறிகணைத் தாக்குதலுக்கு அஞ்சி மக்கள் இடம்பெயர்கையில் மாட்டு வண்டில் ஒன்று குடைசாய்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பெண்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இரணமடுப் பகுதியில் விழுந்த வெடித்த எறிகணை தாக்கியதில் ஓர் ஆணும் இரு பெண்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

மண்கிண்டிமலை இராணுவ முகாமில் இருந்து நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் தண்ணீரூற்றைச் சேர்ந்த புலேந்திரன் எனும் பொதுமகன் கொல்லப்பட்டதுடன் 26 வயதுடைய பெண்ணான வேதநாயகம் மரியநாயகி காயப்பட்ட நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி மருத்துவமனை மீதான தாக்குதலில் காயமடைந்த சின்னத்துரை செல்லத்துரை என்பவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முயன்றபோது தாண்டிக்குளம் தடைமுகாம் இராணுவத்தினர் அனுமதி மறுத்ததினால் அவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த யூலை 31ஆம் திகதி ஆனையிறவில் இருந்து நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலால் கிளிநொச்சிப் பகுதியில் 10 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களின் பெயர் விபரங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. ✷

## பரந்தனில் கடும் ...

மோட்டார் தாக்குதலால் இராணுவம் கடும் உயிர், ஆயுத தளபாட இழப்பைச் சந்தித்தது. தலைமைப்பீடத்தில் இருந்து கிடைத்த செய்திகளின்படி, இம்மோதல்களின்போது 100க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 5 போர் டாங்கிகள், புலிகளின் தாங்கி எதிர்ப்புப் படையணியால் முற்றாக தாக்கியழிக்கப்பட்டுள்ளது. பலியான படையினரின் உடல்கள் வயல் வெளியெங்கும் சிதறிக் காணப்படுகின்றதாக தெரிவிக்க ப்படுகின்றது.

படையினரின் கடுமையான எறிகணைத் தாக்குதல்களில் இருந்து தப்பி ஓடும் மக்கள் மீது, சிறிலங்கா விமானப்படையினரின் 'சுப்பசொனிக்' விமானங்கள் கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தியுள்ளன. 5 அப்பாவிப் பொதுமக்கள் அவ்விடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். 3 பேர் படுகாயத்துக்குள்ளாகியுள்ளனர். இவர்களின் பெயர் விபரங்கள் இன்னமும் கிடைக்கப் பெறவில்லை. ✷

## ருவண்டா, சோமாலியாவை விட...

புள்ளிவிபரப்படியே 850,000 மக்கள் உள்ளக இடப்பெயர்வு அடைந்துள்ளனர்.

அது மட்டுமல்ல, இத்தொகை தென்னாசியாவைப் பொறுத்தவரை சாதனைத் தொகையாகவும் உள்ளது. ஆப்கானிஸ்தானில் 450,000 மக்களும் பர்மா (மயான்மார்)இல் 500,000 மக்களும் இந்தியாவில் 250,000 மக்களும் கம்போடியாவில் 55,000 மக்களும் இடம்பெயர்ந்துள்ளனர். ஆகவே, சிறிலங்காவில் மக்கள் இடம் பெயர்ந்துள்ள தொகை இவைகள் எல்லாவற்றையும் விட மிக அதிகமாகவுள்ளது.

இது ஒருபுறமிருக்க, இலங்கைத்தீவில் அதுவும் குறிப்பாக வடக்கு–கிழக்கில் தமிழ் மக்களின் சனத்தொகையுடன் இவ் இடப்பெயர்வை ஒப்பிடும்போது, ஒவ்வொரு தமிழ்க்குடும்பமும் பாதிப்புறுவதை அவதானிக்கலாம்.

அத்துடன், பிரித்தானியவின்

தொடர்ச்சி 19ம் பக்கம்...

## சர்வதேசக் குற்றச் ...

காயமடைந்ததாகவும் கிளிநொச்சி அரச அதிபர் அறிக்கை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### உணவை ஆயுதமாக்கும் சிறிலங்கா அரசு

மக்களைத் தனது ஆக்கிர மிப்புப் பிடிக்குள் கொண்டு வந்து, அவர்களை இராணுவ நிர்வாகத்தின் கீழ் அடிமை களாக்க முனையும் சிறிலங்கா அரசு, அம்மக்கள் வெளியேற்றத்தால்

தொடர்ச்சி 19ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வழமையான பழிவாங்கல்

"முல்லைத்தீவுப் படைத்தளத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதை அடுத்து, ஒரு இராணுவ வெற்றியைப் பெறவேண்டும் என்று சிறிலங்கா அரசு முனைப்பாக உள்ளது" இவ்வாறு, ஆனையிறவுப் படைத்தளத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையின் நோக்கம் பற்றி பி.பி.சியின் கொழும்பு நிருபர் புளோரா பொட்ஸ்போட் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவுத் தோல்வியை இராணுவமும் அரசும் ஜீரணித்துக் கொள்ளவும் அதிலிருந்து எழும் கண்டனங்களில் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும் கவனத்தைத் திசை திருப்பவும் ஒரு இராணுவ வெற்றியானது அரசுக்கு முக்கியமாகத் தேவையாக இருக்கலாம். ஏனெனில், முல்லைப் படைத்தளத்திலும் அதற்கு உதவத் தரையிறக்கப்பட்ட படைகள் விடயத்திலும் அடைந்ததோ மிகப்பெரிய தோல்வியாகும். இந்தத் தோல்வியானது, சிறிலங்காவின் இராணுவ வரலாற்றில் இதுவரையும் என்றுமே ஏற்படாத தோல்வியாகும். ஒருபெரும் படைத்தளத்தை இராணுவம் இழந்ததோடு அதில் குறைந்தது 1500க்கு மேற்பட்ட துருப்புக்களைப் பறிகொடுத்தது. பெரும் தொகையில் ஆயுத தளபாடங்களை இழந்தது. சில ஆயுத தளபாடங்கள் போராட்டத்தில் புதிய பரிணாமத்தைத் தோற்றுவிக்கக் கூடிய அளவிற்கு வல்லமை வாய்ந்தவையாகத் தரத்திலும், அளவிலும் உள்ளன. அத்தோடு, இராணுவ வரலாற்றில் மற்றுமொரு முக்கியமான அம்சமாகப் பதியப்பட்டுள்ள விடயம், உதவிக்குத் தரையிறக்கிய சிறப்புப் படையணிகள் உதவி வழங்கமுடியாதது மட்டுமல்ல, அந்தப் படையணி 300க்கு மேற்பட்ட துருப்புக்களை இழந்ததோடு தனது கட்டளை அதிகாரிகளையும் இழந்து, பெரும் சிதைவுக்கு உட்பட்டது. அத்தோடு, அப்படையணி தப்பியோடும் கவலைக்கிடமான நிலைமையும் உருவாகியது.

இவை யாவற்றையும்விட, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கியமாகப் பதிவாகியுள்ள ஒரு விடயம், முல்லைத்தீவு மாவட்டம் விடுதலைப் புலிகளால் முற்றாக விடுவிக்கப்பட்ட பிரதேசமாகியது. தமிழீழ விடுதலைப் போரில் ஒரு மாவட்டம் முழுமையாக இதுவரை விடுவிக்கப்பட்டது இல்லை. ஆனால் தற்போது முதன் முதலாக ஓர் மாவட்டம் முற்று முழுதான பூரண கட்டுப்பாட்டில் தமிழர் படையின் பாதுகாப்பில் உள்ளது. இந்த வகையில், சிறிலங்கா அரசும் இராணுவமும் இதை மறைக்கவும் திசை திருப்பவும் பாரியதொரு படைநடவடிக்கையை ஆரம்பிக்கவும், அது குறித்துப் பிரச்சாரம் செய்யவும் வந்தமை ஆச்சரியமளிக்கக் கூடிய விடயம் ஒன்றல்ல. ஆனால் இப்பாரிய நடவடிக்கையானது, இராணுவ இலக்கு ஒன்றை அடைவது என்பது மட்டுமல்ல, வேறு முக்கிய நோக்கம் ஒன்றையும் கொண்டதாகும். தமிழீழ விடுதலைப் போராட்டம் பாரிய அளவிலானதும் திருப்பு முனையானதுமான இராணுவ வெற்றிகளை ஈட்டும்போது, அதற்குச் சிங்கள அரசானது தமிழீழ மக்களை வஞ்சம் தீர்க்க முற்படுவதும் இன அழிப்புச் செய்ய முற்படுவதும் வழமையானது ஒன்றேயாகும். இந்த வகையிலேயே, முல்லைத்தீவுப் படைத்தள வீழ்ச்சியைத் தொடர்ந்து, தமிழ் மக்களைப் பலியாக்கும் நடவடிக்கையாக அரசு கிளிநொச்சி மீதான தாக்குதலைத் தொடுத்துள்ளது எனக் கூறலாம்.

கிளிநொச்சி நகரமும் அதனைச் சூழ உள்ள பிரதேசங்களிலும் ஏற்கனவே உள்ள மக்களின் தொகையுடன், இடம்பெயர்ந்த மக்களுடன் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வந்தது அரசுக்குத் தெளிவாகவே தெரியும். இந்த நிலையில் கிளிநொச்சி மீது இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட, அம்மக்கள் முழுமையாக இடம்பெயரவேண்டிவரும் என்பதும் அரசுக்குத் தெரியும். ஆயினும், கிளிநொச்சி மீது பெரும் தாக்குதலை நடத்த அரசு முடிவெடுத்தமை என்பது, ஏற்கெனவே நொந்து போயிருந்த மக்களை மேலும் நோகச் செய்யும் நோக்கத்தின் அடிப்படையானதேயாகும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்ததே மக்கள் இடம்பெயர்ந்து வந்து கொண்டிருந்த வீதிகளை அண்டியதாக இராணுவம் மேற்கொண்ட தாக்குதலாகும். இந்த வகையில் இராணுவம் கிளிநொச்சி நோக்கி மேற்கொண்டுள்ள கடும் நடவடிக்கையானது, புலிகளுடன் மரபுவழியில் போர் செய்வதைவிட தமிழ் மக்கள் மீது வஞ்சம் தீர்க்கும் நோக்கம் கொண்டது என்றே கூறலாம். அவ்வாறு இல்லாதுவிடின், போர் நடைபெறும் பகுதிக்கு வெளியே பாரிய அளவில் 'ஆட்டிலறி" எறிகணைகளை இராணுவம் ஏவியிருக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால், தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான இடர்களை ஏற்படுத்துவதும் இனப்படுகொலை நடத்துவதும் இனப்பிரச்சினையைத் தீர்க்கவோ தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் வெற்றி கொள்ளவோ உதவப்போவதில்லை. மாறாக, முல்லைத்தீவுப் படைத்தளம் போன்ற பல படைத்தளங்களை இழக்கவும் பெரும் தோல்விகளைச் சந்திக்கவுமே வழிவகுக்கும். எனவே, ஒடுக்குமுறைகள் ஒரு இனத்தைப் பணிய வைக்க எப்பொழுதும் உதவமாட்டாது. மாறாக, அவைகளை எதிர்த்துப் போராடவே தூண்டும். இதுவே வரலாறாகும்.

# அமைதிக்கான நிபந்தனை

"சண்டைத்தவிர்ப்பால் மட்டும் அமைதியை உருவாக்கிவிடமுடியாது. சுதந்திரமும் பாதுகாப்பும் நிலவுவதற்கான நிபந்தனையாக, 'ஆக்கிரமிப்பு இல்லாத நிலை'யினை உருவாக்குதல் வேண்டும். ஆக்கிரமிப்பு என்பது போர்க்குற்றச் செயல்களுக்கு வழங்கப்படும் பெயரீடாகும்" என்பது 'நீதியானதும் அநீதியானதுமான போர்கள்' என்ற நூலை எழுதிய பிரபல சமூக விஞ்ஞானப் பேராசிரியர் மைக்கல் வல்ஸரின் கருத்தாகும்.

இந்த உண்மையினைத்தான் விடுதலைப் புலிகள் அன்றும் இன்றும் என்றும் தமது அரசியல் இராணுவ வழிமுறைகள் மூலம் மீண்டும் மீண்டும் சிறிலங்கா அரசிடம் வற்புறுத்தி வருகின்றனர். திம்புப் பேச்சுவார்த்தை முதல் 1995 பேச்சுவார்த்தை வரை இதுவே விடுதலைப் புலிகளின் மையக்கருத்தாக உள்ளது.

திம்புப் பேச்சுவார்த்தை குறித்து தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், "எமது பொதுமக்களின் சமூக பொருண்மிய வாழ்வைப் பாதிக்கும் சகல முட்டுக்கட்டைகளும் நீக்கப்பட்டு தமிழீழத்தில் வழமைநிலை உருவாக்கப்படல் வேண்டும். சிங்கள இராணுவம், முகாம்களுக்குத் திருப்பிப் பெறப்பட்டு சகல இராணுவக் கெடுபிடிகளும் நிறுத்தப்படல் வேண்டும்" என்பன முதன்மை நிபந்தனைகளாக வைக்கப்பட்டன. இது அரசியல் அல்ல. மக்கள் வாழ்வுக்கான அடிப்படைத் தேவை. அன்று திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட அனைவர் சார்பாகவும் சிறிலங்காவிடம் தெரிவிக்கப்பட்டது. இதே அடிப்படைத் தேவையினைத்தான் 1995 பேச்சுவார்த்தைகளின் போதும் "மக்களின் நாளாந்த வாழ்வுக்குத் தடையாக உள்ளவற்றை நீக்கும்படி சந்திரிகா அரசிடமும் விடுதலைப் புலிகள் கேட்டனர். இன்றும் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு அடிப்படையான உரைகல்லாக இதையே கருதுவதினால்தான் சிறிலங்கா புதிதாக ஆக்கிரமித்துள்ள பகுதிகளிலிருந்து – அதாவது யாழ். குடாநாட்டில் இருந்து தனது படைகளை முகாம்களுக்கு – பழைய நிலைக்கு, திரும்பப் பெறாதவரை பேச்சுவார்த்தை முயற்சிகள் நடைமுறைச் சாத்தியமற்றது என்கின்றனர். ஆகவே சந்திரிகா கூறுவதுபோல், 1995இல் புதிய நிபந்தனைகள் எதையும் விடுதலைப் புலிகள் விதிக்கவில்லை என்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அறிந்தவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

மேலும் சிறிலங்காவில் 17 ஆண்டு காலத்தின் பின் ஆட்சிமாற்றம் ஏற்பட்ட 1994இல் சந்திரிகா, முன்னைய அரசுகள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை புறக்கணித்து இராணுவ அடக்குமுறையிலான தீர்வுகளைக் கொண்டுவர முயற்சித்தமையே ஆயுதப் போராட்டத்துக்குக் காரணம் எனக் கூறியதும் அல்லாமல் தனது அரசில் தமிழ் மக்களின்மேல் விமானக்குண்டு வீச்சுக்கள் போன்ற இராணுவக் காட்டுமிராண்டித்தனங்கள் நடைபெற அனுமதிக்க மாட்டேன் என்றும் கூறினார். சமாதானவழித் தீர்வுக்கென சிங்கள மக்களின் வாக்கைப் பெற்று சனாதிபதியாக பதவி யேற்றார். 'ஆக்கிரமிப்பு இல்லாநிலை' ஒன்றை தோற்றுவிக்கப் போவதாக அவர் கூறிய கருத்துக்களை ஏற்று, கொழும்பில் உறுதியான அரசொன்றின் தேவை சமாதானத் தீர்வுக்கு அவசியம் எனக்கூறி விடுதலைப் புலிகளும் தம்மாலான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கினர். சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முதற்குரலையும் முழுஅளவிலான போர் நிறுத்தத்திற்கான அழைப்பையும், நல்லெண்ண அடையாளமாக, போர்க் கைதிகளின் விடுதலையையும் விடுதலைப் புலிகள் செய்தனர். போர் நிறுத்தத்தை மறுத்து சிறிலங்கா மோதல் தவிர்ப்பை ஏற்படுத்திய பொழுதும்கூட சமாதானத் தீர்வுக்கான வழிமுறைகள் எதையும் விடுதலைப் புலிகள் தடுக்கவில்லை. ஆனால், 2500 கோடி ரூபா பாதுகாப்பு நிதிக்கு ஒதுக்கித் தனது ஆளணிப் பலம் ஆயுதப் பலம் என்பவற்றை மோதல் தவிர்ப்புக் காலத்தில் சிறிலங்கா அதிகரித்தபோதும் 200க்கும் மேற்பட்ட மோதல் தவிர்ப்பு வன்முறைகள் சிறிலங்காவால் பதிலாக்கப்பட்டபோதும் விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பு கண்காணிப்பு குழுவினர்க்கும் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் ஆக்கிரமிப்பு இல்லா நிலையினை உருவாக்கிப் பேச்சுவார்த்தை தொடர உதவுவதற்காகச் சிறிலங்கா மேல் அழுத்தங்களைப் பிரயோகிக்கும்படியே கேட்டனர்.

ஆனால், விடுதலைப் புலிகளின் மண்டூர் பொறுப்பாளர் சைக்கிளில் பயணம் செய்கையில், சிறிலங்காப் படையினர் துன்புறுத்திய போது, மோதல் தவிர்ப்பை தனது இயக்கம் அமுலாக்கி உள்ளதால், தான் எதிர்க்க மாட்டேன் எனக் கூறிச் சயனைட் அருந்தி மடிந்த சம்பவமும், அதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாமல் போன மோதல் தவிர்ப்பு கண்காணிப்புக் குழுக்களின் இயலாமையும், பொது மக்களின் நடமாட்டச் சுதந்திரத்தை மறுத்து, சிறிலங்கா தன்னால் நிறுவப்பட்ட ஆக்கிரமிப்பு பூநகரி முகாமை அகற்ற மறுத்தமையும் நடந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் வேறாக்கல் என்ற சுலோகத்துடன் தாயகத்தின் உட்கட்டுமானங்கள், வாழ்விட வளங்கள் ஆகியவற்றை நிர்மூலமாக்கி தமிழ் மக்களை நிரந்தர பொருண்மியச் சுற்றாடல் அவலங்களுக்குள் வாழவைப்பதற்கான இராணுவத்திட்டம் சிறிலங்காவால் முழுமைப்படுத்தப்பட்டு அமுலாகும் நிலை வந்ததும், விடுதலைப் புலிகள் 'ஆக்கிரமிப்பு இல்லாநிலை' யினை உருவாக்க இராணுவ ரீதியாக தாமும் இயங்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர். அதன்பிறகு நடந்த குடாநாட்டுச் சம்பவங்கள் விடுதலைப் புலிகளின் சந்தேகங்கள் சரியானவைதான் என நிரூபித்த போதிலும் முல்லைத்தீவு முகாம் அழிப்பும் குடாநாட்டுள் சிறிலங்கா இராணுவம் அனுபவிக்கும் தொடர்த் தாக்குதல்களும் தென் தமிழீழத்தில் சிறிலங்காப் படையினர் சந்தித்து வரும் சங்கிலித்தொடர் தோல்விகளும் தமிழ் மக்களால் எந்த அடக்குமுறையையும் எதிர்த்து நின்று 'ஆக்கிரமிப்பு இல்லா நிலை' யை உருவாக்க முடியும் என்பதை உலகுக்கு உணர்த்தி வருகின்றன. சுதந்திரமும் பாதுகாப்பும் நிலவுவதற்கான நிபந்தனையாக ஆக்கிரமிப்பு இல்லாத நிலையை உருவாக்குதல் வேண்டும் என்ற உண்மையை ஏற்று, சிறிலங்கா ஆக்கிரமித்த நிலைகளை விட்டு விலகி அமைதிக்குப் பாதை விடுமானால் முல்லை இழப்பு போன்ற இழப்புக்களைச் சிறிலங்கா தவிர்க்க வழி பிறக்கும்".

ஆ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொ. ஐ. மு. ஆட்சிக் காலத்தில் இராணுவத்திற்குப் பேரழிவு

1982ஆம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம் 1995ஆம் ஆண்டு டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் வடக்கு–கிழக்கில் கொல்லப்பட்ட, காயமடைந்த இராணுவத்தினரின் விபரம் அடங்கிய பட்டியல் ஒன்றைக் கொழும்பிலிருந்து வெளிவரும் 'வீக்கென்ட் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை கட்டம் கட்டப்பட்ட செய்தியாக வெளியிட்டுள்ளது.

இதன்படி யூலை 1983 தொடக்கம் 1989 வரையிலான காலப்பகுதியில் 1187 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 843 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். 1990ஆம் ஆண்டு தொடக்கம் 1995 ஆம் ஆண்டு டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் 4300 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 10,910 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். 40 இராணுவத்தினரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 1990 தொடக்கம் 1994 வரையான நான்கு ஆண்டு காலப்பகுதியில் வடக்கில் 1635 இராணுவத்தினரும் கிழக்கில் 1049 இராணுவத்தினருமாக மொத்தம் 2684 பேர் கொல்லப்பட்டனர். 5565 பேர் காயமடைந்தனர்.

1995ஆம் ஆண்டில் 9 மாத காலப்பகுதியில் வடக்கில் 1049 பேரும் கிழக்கில் 573 பேருமாக 1622 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 40 பேரைக் காணவில்லை. வடக்கில் 4,557 பேரும் கிழக்கில் 788 பேருமாக மொத்தம் 5345 பேர் காயமடைந்தனர்.

இதில் கடற்படை, விமானப்படை, பொலிஸ், விசேட அதிரடிப்படையினர், ஊர்காவற்படையினரின் இழப்புக்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

மேற்படி இராணுவ இழப்புக்கள் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா, சந்திரிகா குமாரணதுங்க ஆகிய ஜனாதிபதிகளின் காலத்தில் இடம்பெற்றவை என அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 7 விமானங்கள், உலங்குவானூர்திகள், 8 போர்க்கப்பல்கள், ரோந்துப் படகுகள் 2, டாங்கிகள் ஏப்ரல் 95 முதல் ஜனவரி 96 வரை அழிக்கப்பட்டுள்ளன.

பதினொரு வருடகால ஐ. தே. க. ஆட்சியில் 3866 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஆனால், ஒரு வருட கால பொ. ஐ. மு. ஆட்சியில் 1621 பேர் கொல்லப்பட்டனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் அண்மையில் முல்லைத்தளத்தில் சிறிலங்காப் படை பேரிழப்பைச் சந்தித்துள்ளது. முகாமில் இருந்த ஓரிரண்டு படையினரைத் தவிர சகல படையினரும் கொல்லப்பட்டுள்ளார்கள். சிறிலங்கா பாதுகாப்பமைச்சுக் கூட 1500க்கு மேற்பட்ட தமது படையினர் கொல்லப்பட்டுள்ளதை ஒத்துக் கொண்டுள்ளது.

இதுவே 1983க்குப் பின்னர் நடைபெற்ற மிகப்பெரும் தாக்குதலாகவும் ஓர் தனிச் சண்டையில் இவ்வாறு பெரும் தொகைப் படையினர் அழிக்கப்பட்டுள்ளதும் வரலாற்றுப் பதிவு என்பதுடன், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் இடம்பெற்ற பேரழிவாகவும் உள்ளது. இப் பேரழிவு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ✷

# யாழ். குடாநாட்டில் தொடரும் படையினரின் மனித வதைகள்

யாழ். குடாநாட்டினுள் படையினர் தம் பழிவாங்கல் தாக்குதல்களை மக்கள் மீது மேற்கொண்டு வருகின்றனர். குடாநாட்டின் பல பகுதிகளிலும் சுற்றிவளைப்புக்கள், கைதுகள் இடம்பெற்று வருகின்றன. 19.07.96 அன்று நாவற்குழியில் மக்களைச் சுற்றிவளைத்து கோயிலாக்கண்டி பாடசாலைக்குக் கொண்டு சென்று கடும் விசாரணைக்குள்ளாக்கியுள்ளதாகவும், சந்தேகம் எனும் பெயரில் பல இளம் பெண்களை கைது செய்து அவர்களின் கண்களைக் கட்டி இராணுவ வாகனத்தில் ஏற்றி எங்கேயோ கொண்டு செல்லப்பட்டதாகவும், அவர்களைப் பற்றிய விபரங்கள் இதுவரை அறியமுடியவில்லை எனவும் மக்களிடம் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே தினத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதி அமைந்துள்ள பகுதி கடும் ஆட்தேடுதல் வேட்டைக்கு உள்ளாகியுள்ளதாகவும், காரணமின்றிக் கைதுகள், நீதி விசாரணையின்றி தடுத்து வைத்தல், சித்திரவதைகள், கொலைகள் என்பன அதிகரித்த நிலையில் பல பொதுமக்கள் யாழ். குடாநாட்டை விட்டு வெளியேற பகீரத முயற்சி செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. படையினர் பல்கலைக் கழக மற்றும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து கைது செய்வதால் இளம் வயதினரின் நடமாட்டம் யாழ். குடாநாட்டில் வெகுவாகக் குறைந்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மூவர் படையினரால் அடித்துக் கொலை

30.07.96 அன்று துன்னாலை, மந்துவில் பகுதியில் இரு இளைஞர்களை விசாரணைக்கென கொண்டு சென்ற இராணுவத்தினர், முகாமில் வைத்து அவர்களை இரும்புக் கம்பிகளால் மிகவும் கொடூரமான முறையில் தாக்கிக் கொலை செய்த பின்னர் இரகசியமான முறையில் கொடிகாமம் பகுதியில் புதைத்துள்ளனர். ஆயினும் அப்பகுதி பொதுமக்கள் உடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தை அடையாளம் கண்டு பிடித்ததுடன், கொல்லப்பட்ட இருவரில் ஒருவர், மந்துவிலைச் சேர்ந்த சிவலிங்கம் என்ற தகவலை உறுதிப்படுத்தியுள்ளனர். மற்றவர் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

இதேதினத்தில் மீன் வியாபாரியான செல்வம் என்பவர் தனது வியாபாரத்திற்காக மீன் வாங்கச் சென்ற வேளை, நுணாவில் பகுதி இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு கடும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் 2 பிள்ளைகளின் தந்தையார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பெண்களும் சித்திரவதை

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, பின் அங்கிருந்து வன்னிக்கு தப்பி வந்த, 5 பிள்ளைகளின் தாய் ஒருவர் தான்பட்ட, கண்ட, சித்திரவதைகளை விபரித்துள்ளார். கடந்த மாதம் 22ஆம் திகதி தச்சன்தோப்பில் சுற்றி வளைத்துக் கைது செய்யப்பட்ட பலர் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு, அதில் பலர் நிர்வாணமாக்கப்பட்டு கொழுத்தும் வெய்யிலில் படுக்க வைத்து தாக்கப்பட்டனர். 45 வயதுடைய காமாட்சி எனும் பெண்மணியைத் தாக்கி அவரின் மண்டையை உடைத்து கையை முறித்தனர் எனவும் தெரிவித்த அவர், சாவகச்சேரி வெற்றிலைக் கடையொன்றில் வேலை செய்யும் 18 வயது இளைஞனின் பெருவிரலை கதறக் கதறத் துண்டித்தனர் எனவும் வேதனை பொங்க செய்தியாளர்களிடம் விபரித்தார். ✷

# 'ரிவிரெச' மூலம் இராணுவம் எதிர்பார்த்த இலக்கை அடையத் தவறிவிட்டது!

### - இராணுவ விமர்சகர்கள் கருத்து

'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையால் ஒரு நல்ல அரசியல் அல்லது இராணுவ இலக்கை அடைய முடிந்ததா? இல்லாவிட்டால் இராணுவத்தினரின் வெற்றிகரமான சண்டையினால் ஒடுங்கிய கழுத்துப் பகுதி போன்ற பொறிக்குள் சிறிலங்காப் படையினர் அகப்பட்டுக்கொண்டுள்ளனரா?

இவ்வாறு இராணுவ அவதானிகள் கேள்வி எழுப்புவதாக 'சண்டே ரைம்ஸில்' எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார். அவர் அக் கட்டுரையில் மேலும் தெரிவிப்பதாவது:

ஒரு இலக்கைத் தீர்மானித்து நாங்கள் ஒரு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துவிட்டு அந்த இலக்கை அடையமுன் அந்த நடவடிக்கையை நாங்களே நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவை அனைத்தும் பயனற்ற நடவடிக்கைகளாகும் எனத் தெரிவித்துள்ள அந்த ஆய்வாளர், எந்த இராணுவ நடவடிக்கையும் வெற்றிகரமாக நடந்து செல்லும்போது அது தொடர்ந்து சென்று அரசியல் – இராணுவ இலக்குகளை அடைய உதவ வேண்டும் எனக் கூறுகின்றார். யாழ். நிர்வாகத்தைச் செயற்படுத்த இராணுவம் அல்லாதோரைப் பயன்படுத்துவதென்பது விடுதலைப் புலிகளின் நடவடிக்கையில் அல்லது இராணுவத்தினரின் மாற்று ஏற்பாட்டில் தங்கியுள்ளது.

இராணுவத்தினரின் மாற்று ஏற்பாடு என்பது, மேலதிகமான இராணுவத்தினர் இதற்காக வரவழைக்கப்பட வேண்டும், ஆயுத உபகரணங்களும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பவையாகும்.

இவை இரண்டையும் வைத்துப் பார்க்கும்போது அதனை நடைமுறைப்படுத்துவதில் உடனடிச் சாத்தியப்பாடு தென்படவில்லை.

ஆனால், மேலும் இராணுவத்தை விரிவாக்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் முடிவும் தோல்வியானால், இது போர்த் தந்திரோபாயத்திற்குக் கிடைக்கும் ஒரு தோல்வியாகும்.

மேலும், இதனால் சிறிலங்காப் படையினர் தப்பிக்கொள்ள முடியாத இக்கட்டான நிலைகளுக்குள் சிக்குப்படுவர். இந்நிலை விடுதலைப் புலிகளுக்கு மிகச் சாதகமாக அமையும். இவ்வாறு அரச படைகளைத் தப்பிக்கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்குக் கொண்டுவந்த சந்தர்ப்பங்கள் உலகக் கெரில்லாப் போர் வரலாறுகளில் இருக்கின்றன.

இந்தப் போரில் அடுத்த கட்டம் கெரில்லா க்களுக்குச் சாதக மான கட்டமே என அவர்கள் மேலும் தெரிவித்ததாக, அந்தக் கட்டுரையாளர் கூறியுள்ளார். ✷

# இதுவரை உலக நாடுகள் சந்திக்காத பொருளாதார நெருக்கடியில் சிறிலங்கா!

### - எதிர்க்கட்சித் தலைவர் ரணில்-

''சிறிலங்கா படுமோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. 75 ஆயிரத்துக்கும் 1 இலட்சத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையானோர் தங்கள் தொழில்களை இழக்கப் போகிறார்கள்''

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "போரினாலும் பெரும் வரட்சியினாலும் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கும் சிறிலங்காவின் பொருளாதார நிலை பாரதூரமானதொன்றாகும். வேலையில்லாத் திண்டாட்டமும் விலைவாசிகளும் அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றன. ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெரிய நிறுவனங்கள் வேறு நாடுகளை நாட முயற்சிக்கின்றன.

இன்று, நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசே காரணம். இன்றைய நெருக்கடி சகல துறைகளையும் பாதித்திருக்கிறது. இன்றைய அரசின் தவறான நிர்வாகமே பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணமாகும். இதுபோன்ற நெருக்கடி வேறெந்த நாட்டிலும் காணப்படாத ஒன்றாகும். உல்லாசப் பிரயாணத்துறை பலவீனமடைகிறது. அந்நிய செலவாணிக் கையிருப்பு குறைந்துகொண்டே போகிறது. இன்று நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகள் குறித்து வர்த்தக சமூகம் நன்கறிந்து வைத்திருக்கிறது. அனர்த்தத்திற்கு முகம் கொடுக்க நாடு தயாராக வேண்டியது அவசியம்" எனத் தெரிவித்துள்ளார். ✷

www.tamilarangam.net



# சிங்களப் பேரினவாதத்தின் கதாநாயக வேடம்!

குடாநாட்டில் இன்று நடைமுறையிலுள்ள இராணுவ ஆட்சியை வலுப்படுத்தும் நோக்குடன், அரசாங்கமும் அரசுப் படைகளும் நுட்பமான வகையில் சில காரியங்களை–அங்கே–செய்ய முனைகின்றன.

கடந்த பல வருடங்களாகக் குடாநாட்டு மக்கள் மீது, சிங்கள அரசு திணித்த அடக்குமுறைகள் – தடைகள் என்பனவற்றில் சிலவற்றைத் தளர்த்தி உள்ளது. அத்துடன், மக்களைப் தம்பக்கம் ஈர்க்கும் தந்திரோபாயத்துடன், சில அணுகுமுறை மாற்றங்களையும் அங்கே வலிந்து புகுத்தி வருகின்றது.

மக்கள் எதிர்ப்பு இல்லாமல் தனது இராணுவ ஆட்சியைத் தொடரும் தந்திரத்திற்காகவும், புலிகள் இயக்கத்திற்கு எதிராக மக்களைத் திருப்பிவிடலாம் என்ற ஒரு நம்பிக்கையிலும், இந்த அணுகுமுறை மாற்றங்களை அரசு பிரயோகிக்க முற்படுகின்றது.

குடாநாடு மீது அரசு விதித்த பொருளாதாரத் தடைகளை நீக்கும்படி, மக்கள் எத்தனையோ ஆர்ப்பாட்டங்களை நடாத்தி, அரசிடம் மகஜர்களையும் கையளித்தனர். அவை எதற்கும் அரசு செவிசாய்க்கவில்லை. அரசுடனான பேச்சுவார்த்தைக் காலத்தில், புலிகள் இயக்கமும் அதே விடயங்களையே வலியுறுத்தி–அவற்றை நிறைவேற்றிவைக்கும்படி கோரி இருந்தது. அதையும் அரசு அசட்டை செய்தது. ஆனால் இப்போது, தான் விதித்த தடைகளில் சிலவற்றைத் தானே நீக்கிவிட்டுள்ளது.

இது எதைக்காட்டுகின்றது?

தனது இராணுவ ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்கும், "அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தால்தான் ஏதாவது தருவார்கள்" என்ற "வளர்ப்பு நாயின் மனநிலையை" குடாநாட்டு மக்களுக்கு ஊட்டுவதற்கும் அரசு முயற்சி செய்கின்றது என்பதையே அது காட்டுகின்றது.

அரசின் இந்த அணுகுமுறை மாற்றங்களின் பின்னாலுள்ள சூழ்ச்சிகர அரசியலைப் புரிந்துகொள்ளாத சிலர், "இராணுவத்தினர் நல்லவர்களாகத் திருந்திவிட்டனர்" என்று எண்ணத் தலைப்படுகின்றனர்.

குடாநாட்டுக்குள் இருந்த படை முகாம்களில் இருந்தும் வானில் இருந்தும், குடாநாட்டு மக்கள் மீது–கண்மூடித்தனமான வகையில்–குண்டுகளை வீசிய அதே படையினர், இன்று எதற்காக "கதாநாயகன்" வேடம் போடுகின்றனர் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இதேவேளை, இன்று வன்னி வாழ் மக்கள் மீதும் கிழக்குவாழ் தமிழர்கள் மீதும், எறிகணைகளையும், வான்தாக்குதல்களையும் எதற்காக நடாத்துகின்றனர் என்றும் கேள்விகளை எழுப்பி–விடை தேட முயல்வதே, உண்மை நிலைவரத்தை உணர்ந்துகொள்வதற்கான சரியான வழியாகும்.

சுதந்திரத்தை இழந்த நிலையில்–சிங்களப் படையின் காலடிக்குள்–குடாநாட்டு மக்கள் உள்ளனர் என்பதே, குடாநாட்டின் இன்றைய யதார்த்தமாகும். வழி நெடுகச் சோதனைச் சாவடிகளை அமைத்து, இரவில் மக்களை நடமாட விடாது கட்டுப்படுத்தி, நினைத்த நேரத்தில் நினைத்த இடங்களைச் சுற்றிவளைத்து, மக்களைக் கைது செய்து, தனது இராணுவ அதிகாரத்தை அன்றாடம் வெளிப்படுத்தியபடி, சிங்களப்படை குடாநாட்டில் நிலைகொண்டுள்ளது.

தமிழரின் இரத்தத்தில் குளித்த அந்த அந்நிய இராணுவம்–ஒரு நோக்கத்திற்காக இன்முகம் காட்டி, மக்களுடன் உறவாடலாம். ஆனால் அது எமது மக்களைப் பாதுகாக்கும் என்றோ அல்லது சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க அனுமதிக்கும் என்றோ எண்ணுவது ஒரு பகற்கனவாகும். அத்துடன், ஆபத்து நிறைந்ததுமாகும்.

சுதந்திரத்திற்கான போராட்டத்தில் தொலை தூரம் வந்துவிட்ட எமது மக்களை மீண்டும் ஆரம்ப இடத்திற்கு இழுத்துச் செல்ல, எதிரி கங்கணம் கட்டியுள்ளான். குடாநாட்டு ஆக்கிரமிப்பை அதற்குரிய நல்லதொரு ஆரம்பமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளான்.

"குடாநாட்டைப் புனரமைப்பேன்–அதை அபிவிருத்தி செய்வேன்–அங்கே கல்வியை ஊக்குவிப்பேன்–வேலை வாய்ப்புகளை வழங்குவேன்" என்று "பசு வேடம் பூண்டு" சிங்களப் பேரினவாதப் பூதம் பிரச்சாரம் செய்கின்றது!

ஆனால், கடந்த 5 வருட காலமாகக் கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதி சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்குள்ளேயே இருந்தது. அங்கு எந்த ஒரு அபிவிருத்தியும் செய்யப்படவில்லை என்ற உண்மையை, இந்த இடத்தில் குறிப்பிட வேண்டியுள்ளது.

ஏழை எளிய மக்களுக்கு உதவவென சந்திரிகா அரசாங்கம் உருவாக்கிய "சமுர்த்தித் திட்டம்" கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், தமிழ் மக்களைப் புறக்கணித்துவிட்டு, அங்கே வாழும் சிங்கள–முஸ்லிம் மக்களுக்கே அரச உதவிகள் வழங்கப்பட்டன என்ற உண்மையையும்–அரசின் உண்மை முகத்தைக் காட்ட–இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

தமிழ் மக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற எண்ணம், சிங்கள அரசிடம் இருந்ததில்லை. இதை நிரூபிக்க, கடந்த 40 வருட வரலாற்றை ஆதாரமாகக் காட்டமுடியும்.

ஆனால், இப்போது திடீரென குடாநாட்டு மக்களுக்கு நல்லது செய்யப் போவதாக அரசாங்கம் அறிவித்திருப்பதுடன், இராணுவம் தனது அணுகுமுறையிலும் ஒரு மாற்றத்தைச் செய்திருப்பதன் உள்நோக்கம் எதுவென, எமது மக்கள் இனங்காண வேண்டும்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிப்பது என்பது, சிங்கள அரசின் இலட்சியமாகும். அதைச் சாதிக்க இப்போது, நுட்பமான அரசியற் செயற்பாடுகளையும் தந்திரோபாயங்களையும் நிறைந்த அணுகுமுறைகளையும் சந்திரிகா அரசு கடைப்பிடித்து வருகின்றது. தேவையான இடங்களில் கதாநாயகன் வேடத்திலும், மற்றைய இடங்களில், தனது சொந்தக் குணத்துக்குரிய வில்லன் வேலைகளிலும் சிங்கள அரசாங்கமும் அதன் படைகளும் ஈடுபடுகின்றன.

சிங்களப் பேரினவாதத்தின் இத்தகைய நவீன திட்டங்களுக்கும் அணுகுமுறைகளுக்கும் எமது மக்கள் பலியாகிவிடக்கூடாது. எதிரியின் இதுபோன்ற நாசகார முயற்சிகளை விழிப்புணர்வுடன் இருந்து முறியடிக்க வேண்டிய வரலாற்றுக் கடமை, குடாநாட்டில் வாழும் மக்களுக்குள்ளது! ✷

புலிகளின் குரல்

# அரசியல் தீர்வும் அரசின் நிலைப்பாடும்

தமிழரின் தாயகத்தைப் பிரித்துத் துண்டாடும் ஒரு சதியாலோசனை முயற்சியில் – சந்திரிகா அரசாங்கம் – இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

வட – கிழக்கின் தொடர்ச்சியான நிலப்பரப்பைத் திட்டமிட்டுத் துண்டாடி–அங்கே இரண்டு அல்லது மூன்று வெவ்வேறு அலகுகளை ஏற்படுத்தி – தமிழர் தேசியத்தைக் கருவறுக்கும் கைங்கரியத்தைச் செய்ய, சந்திரிகா அம்மையார் துடியாய்த் துடிக்கின்றார்.

இந்தச் சூழ்ச்சித் திட்டத்திற்கு ஜனநாயக முலாம் ஒன்றைப் பூசி உலகை ஏமாற்றும் திட்டத்துடன், சில தமிழ்க் குழுக்களைத் தன்வசம் ஈர்க்க, அம்மையார் பிரயத்தனப்படுகின்றார்.

உள் முரண்பாடுகளால் பொ.ஜ.முன்னணி அரசாங்கம் பலவேறு சிக்கல்களை எதிர்கொள்ளும் இந்தத் தருணத்தில், சில தமிழ்க் குழுக்கள் அந்த அரசாங்கத்திற்கு முண்டுகொடுக்க முயற்சிப்பதுடன், தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்கு முரணான ஒரு அரைகுறைத் தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் அரசியற் துரோகம் ஒன்றில் ஈடுபடவும் தயாராகி வருவதுபோல் தெரிகிறது.

"தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு" என்ற சந்திரிகா அரசாங்கத்தின் கோசம், சூழ்ச்சிகள் பல நிறைந்தது. உண்மையில் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் நிலைப்பாடாகிய, "இராணுவ வழிமுறையிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு" என்ற கொள்கைதான் சந்திரிகா அரசாங்கத்தின் அந்தரங்கத் திட்டமாகும்.

தமிழர் தேசியத்தின் பாதுகாப்புக் கவசமான புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் பலமிழக்கச் செய்துவிட்டு – அதை ஒரு பேரம்பேசும் விடயமாக வைத்துக்கொண்டு – அரசியற் தீர்வு என்ற போர்வையில் அரைகுறைத் தீர்வுத் திட்டமொன்றைத் தமிழினத்திற்கு வழங்குவது என்பதுதான், அம்மையாரின் உள் நோக்கமாகும்.

தமிழரின் தேசியத் தனித்துவத்தைச் சிதைக்கும் வகையில் அரசாங்கம் முன்வைக்க விரும்பும் அரைகுறைத் தீர்வுத்திட்டத்தை எமது மக்களையும் ஏற்றுக்கொள்ளச் செய்விப்பதற்கான மார்க்கமாக, ஒன்றன்பின் ஒன்றான படையெடுப்புக்களையே அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது.

இந்த வகையில், இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை வரைவதற்கான அடிப்படையாக, தமிழர் தரப்பிலுள்ள அரசியல் நியாயங்களோ அல்லது தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பமோ இருக்கவில்லை. படைப்பலத்தைத்தான் அதற்குரிய அடிப்படையாக அரசாங்கம் நிர்ணயித்து வைத்திருக்கின்றது என்ற பூடகமான உண்மையை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இதனாற்தான் தீர்வுத் திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அல்லது அரைகுறைத் தீர்வு யோசனைகளைச் சமர்ப்பித்த பின்னர் – தமிழர் நிலம்மீது – பாரிய படையெடுப்புக்களைச் சந்திரிகா அரசாங்கம் நடத்தி வருவதை நாம் காணமுடியும்.

யாழ்ப்பாண ஆக்கிரமிப்பிற்கு முன்னர் ஒரு அரைகுறைத் தீர்வு யோசனையை அரசாங்கம் வெளியிட்டிருந்தது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அந்தச் சட்டவரைவு, முழுமையான தீர்வுத் திட்டமாக அமைந்திருக்கவில்லை.

அதிகாரப் பரவலாக்க நிர்வாக அலகுகள் பற்றி அதிற் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இப்படியான அரைகுறைத் தீர்வுத் திட்டமொன்றை வெளியிட்டுவிட்டு, தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்க நிலையை அடைந்துவிட அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இராணுவ மேலாதிக்க நிலையிலிருந்துகொண்டு, குறைந்தபட்சத் தீர்வொன்றைத் தமிழர்கள் மீது திணிப்பதுதான் சந்திரிகா அரசாங்கத்தின் திட்டமென்பது, இப்போது அம்பலத்திற்கு வந்துவிட்டது.

அரசாங்கத்தின் இந்தத் திட்டம் குறித்துத் தமிழ்க் கட்சிகள்கூட அதிருப்தி தெரிவித்திருக்கின்றன. ஒட்டுமொத்தத்திற் சொல்லப்போனால்,

தொடர்ச்சி 19ம் பக்கம்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறிலங்காவில் அமெரிக்காவின் இராணுவத் தலையீடு

**சிறிலங்காவின் வீரவில விமானப்படை முகாமில் அமெரிக்காவின் விசேட படைகளுக்கான கப்டன் ஜோர்ஜ் மக்டொனால்ட் தலைமையிலான 12 இராணுவ நிபுணர்கள் சிறிலங்காப் படையினருக்குப் பயிற்சி அளித்து வரும் செய்தி அனைத்துலகை மட்டுமல்ல, தமிழ்-சிங்கள மக்களையும்கூட அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளது.**

சிறிலங்காவில் உள்ள "சமூகமும் மதங்களும்' எனும் அமைப்பின் பேச்சாளரான பெர்னாண்டோ நியூட்டன், ''நிச்சயமாக, சிறிலங்கா அரசிற்கும் அமெரிக்காவுக்குமிடையே, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தொடர்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. சிறிலங்காவில் அமெரிக்கப் படையினர் இருக்கிறார்கள் என்றால், வன்மையாக நாம் அதனை எதிர்ப்போம். இது எமது விவகாரத்தில் அமெரிக்கா தலையீட்டை மேற்கொள்வதற்கான ஒரு வடிவம் என்றே கருதுகின்றோம்", எனக் கூறியுள்ளார். அத்துடன், ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா"வின் ஒலிபரப்பு நிலையத் தொழில்நுட்பப் பிரிவைச் சிறிலங்காவில் அமைக்க முற்பட்டது தொடர்பான தங்களது ஆரம்ப அச்சங்கள் இப்பொழுது உண்மையாகின்றது" எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் உள்ள மனித உரிமைகள் இயக்கப் பேச்சாளரான சிராணி சேவியர், "சிறிலங்காவில் தலையீட்டை மேற்கொள்வதற்கு முயற்சித்த அமெரிக்காவிற்கு இது ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. சிறிலங்காவில் மனித உரிமைகள் முன்னேற்றம் அடைந்து வருவதாகக் கூறப்பட்ட போதிலும், தமிழ் மக்கள் குறிப்பாக இளம் தமிழ் இளைஞர்களும் பெண்களும் காணாமல் போவது என்பது எல்லாக் காலமும் ஒன்றாகவே உள்ளது. கொலைப்படை என இனங்காணப்பட்டவர்களில் யாரையும் இதுவரை சிறிலங்கா தண்டிக்கவில்லை. அதேவேளை, தற்பொழுதும் கொலைப்படைகளின் கைங்கரியங்கள் நடைபெற்றுக் கொண்டேயுள்ளது. இந்நேரத்தில், அமெரிக்கா சிறிலங்காவில் மனித உரிமைகள் முன்னேற்றம் அடைவதாகப் பேசுவது, சிறிலங்காவில் மேலும் தலையீட்டை மேற்கொள்வதற்கான வழியினை உருவாக்குவதற்கே தற்பொழுது அமெரிக்கா ஒரு வழியைக் கண்டுபிடித்துவிட்டதையே காட்டுகிறது. மனித உரிமைகள் படுமோசமான நிலையில் உள்ள ஒருநாடு, ஒரு இரவில் தனது வழமைகளை மாற்றிக் கொள்ள முடியாது" என்றார். மேலும், கடுமையான முறையில் சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்படும் பத்திரிகைத் தணிக்கை, அமெரிக்காவின் தலையீடு போன்ற பலதேச விரோதச் செயல்களை மக்களிடம் இருந்து மறைப்பதற்குச் சிறிலங்காவுக்கு உதவுகிறது எனவும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

## வழக்கிலுள்ள சட்டத்தை மீறி அமெரிக்கா ஆயுதம் விற்பது ஏன்?

அமெரிக்கா்வில், மரணத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள், உபகரணங்கள் என்பவற்றை மனித உரிமை நிலை மோசமாக உள்ள நாடுகளுக்கு விற்கக் கூடாது என்ற சட்டம் அமுலில் உள்ளது. ஆயினும், சமீபத்தில்



ஆறு கண்காணிப்புப் படகுகளை அமெரிக்கா சிறிலங்காவுக்கு விற்றுள்ளது. தற்பொழுது இப்படகுகளில் சக்தி படைத்த பீரங்கிகள், துப்பாக்கிகள் என்பவற்றைப் பொருத்துவது தொடர்பாகவும், இராணுவ உலங்கு வானூர்திகள் விற்பது தொடர்பாகவும் சிறிலங்கா – அமெரிக்க அரசுகள் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. சிறிலங்கா அரசு இரவுநேர பார்வைக் கருவிகளைப் பெறுவதில் அதிக அக்கறை காட்டி வருவதாகத் தெரிய வருகிறது.

இது குறித்து, 'த டெலாஸ் மோர்னிங் நியூஸ்" அமெரிக்கப் பத்திரிகையில் மார்க் கௌவ்மான் என்பவர், "அமெரிக்கா சிறிலங்காவில் தனது ஆதிக்கத்தை அதிகரிக்கிறது – கிறீன் பெரட்ஸ் (Green Berets) என்னும் அமெரிக்கப் படையணி சிறிலங்காவுக்கு அளிக்கும் பயிற்சியானது, அமெரிக்க இராணுவத்தினர் தீவில் இருப்பதற்குப் பாதை திறக்கிறது" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் உள்ள சில முக்கிய கருத்துக்கள் வருமாறு:

## அறிவிக்கப்படாத இரகசிய இராணுவ செயற்பாடு

ஆனி மாதம் முதல் சிறிலங்காவில் அமெரிக்காவின் இராணுவ – பொருண்மிய முயற்சிகள் நேரடியாக நடைபெறுவதற்கான பாதையினை, அமெரிக்காவின் பச்சை வட்டத் தொப்பி (Green Berets) அணியினர் சிறிலங்காப் படைகளுக்கு அளிக்கும் பயிற்சி, திறந்து வைத்துள்ளது. 12 அமெரிக்க இராணுவ நிபுணர்கள், களப் பொறியியல், தொலைத் தொடர்புப் பயிற்சிகள், இராணுவ அணிகளிடை போரில் ஈடுபடுவதற்கான பயிற்சிகள் (Combat medi-vac techniques) தீப்பிடிக்கும் நேரத்தில் சண்டையிடுவதற்கான பயிற்சிகள் போன்றவற்றைச் சிறிலங்காப் படையினர்க்கு அளித்து வருகின்றனர். அறிவிக்கப்படாததும் இரகசியமானதுமான இவ்விராணுவ நடவடிக்கைகள் அரசியல் – பாதுகாப்புச் சம்பந்தமான குறிப்பிடத்தக்க அபாயங்களைத் தோற்றுவிக்கின்றது. மற்றைய கூட்டு இராணுவ நடவடிக்கைகளைப் போலவே இதனையும் அமெரிக்காவின் "பென்டகன்" வெளியிடவில்லை. இராணுவத்தின் கால்களைக் கொண்டு மனித உரிமைகளைத் துவசம் செய்யும் சிறிலங்காவும் அவைகள் வெளிவராதவாறு பத்திரிகைகளுக்குப் போட்டுள்ள தணிக்கையினால் இச்செய்தி சிறிலங்காப் பத்திரிகைகளாலும் பிரசுரிக்கப்படவில்லை.

## உதவிக்கு கைமாறா?

வளைகுடாப் போரின்போது ஆசியநாடுகளுக்குள் சிறிலங்கா மட்டுமே, அமெரிக்காவுக்கு எரிபொருள் மீள்நிரப்பு வசதிகளை அளித்து, ஆறு ஆண்டுகளின் பின், அமெரிக்கா சிறிலங்காவில் இப்பயிற்சியைத் தொடங்கியுள்ளது.

அமெரிக்கா மரணத்தை விளைவிக்கக்கூடிய மிக ஆபத்தான ஆயுதங்களைச் சிறிலங்காவுக்கு விற்பதற்கு விருப்புத் தெரிவித்துள்ள நேரத்தில் இப்பயிற்சி ஆரம்பமாகியுள்ளது. மேலும், சிறிலங்காவில் அமெரிக்காவின் 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' என்ற மிகப்பெரிய வானொலி நிலையம் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் இம்முயற்சி ஆரம்பமாகியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

''நாங்கள் இந்தப் போரில் காவல் நாய்களை வைத்திருக்கவில்லை" என அமெரிக்க இராணுவக் கூட்டுப்படைக்கான இலங்கைத் தூதரக அதிகாரி கேர்ணல் கார்ல் கொக்ரம் கூறியபின்னர், அவரது உதவியுடன் 'செயற்பாட்டு நடுநிலையாக்கலுக்கான முறைமை' (Operation balanced style) என்னும் இராணுவக் குறியீட்டுடனான கிறீன் பெரெட்சின் இப்பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாதக் கோசம் இதற்காகத் தானா?

சுதந்திரத்திற்காகப் போராடும் தமிழரின் பிரதான இயக்கத்தைப் 'பயங்கரவாதக் குழு' எனக் கடந்த ஆண்டில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் முடிவு செய்ததானது, இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு என்றே கூறலாம். சிறிலங்கா அரசானது அதிகாரிகளுடன் தொடர்புடைய கொலைப் படையினரின் செயல்கள் குறித்து அக்கறையான விசாரணைகளைச் செய்வதாக 'கியூமன் ரைட்ஸ் மொனிட்டர்ஸ்" அமைப்பு சமீபத்தில் கூறிய கருத்தும், சிறிலங்காவில் உள்ள இராஜாங்கத் திணைக்களத்துடன் தொடர்புடைய மனித உரிமைகள் இயக்கங்கள் சில சிறிலங்காவில், அரசு மனித உரிமைகளில் முன்னேற்றம் ஏற்படுத்துவதாகக் கூறியமையும் சிறிலங்காவுடன் நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. சிறிலங்கா அரசும் தன்னகத்தே அமெரிக்க எதிர்ப்புச் சமவுடமைவாதிகளை உள்ளடக்கியிருந்தபோதிலும் அமெரிக்காவின் நண்பனாக நடிக்கின்றது. ஆனால், கடந்த ஆண்டிற்தான் அமெரிக்காவின் 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' மின்காந்தஅலைப் பரிமாற்றிகளுக்கான (Transmitter) திட்டங்களை நாம் நிராகரிப்பதாகக் கூறி, அதற்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களைச் சிறிலங்கா திருப்திப்படுத்தியது.

## இந்தியாவுக்கு எதிரான சிறிலங்காவின் சமபல முயற்சி

சிறிலங்கா – அமெரிக்க அதிகாரிகள் கொழும்பில் தங்கள் உறவை ஆழமாக்குவதற்கு, பாதுகாப்புக் காரணங்கள் உள்ளதாகக் கூறியுள்ளனர். அமெரிக்க இராணுவத்திற்கு இத்தீவானது, மத்திய கிழக்கு நாடுகளுக்கும் தூர கிழக்கு நாடுகளுக்கும் இடையே சீனாவுக்கு அருகில் அமைந்துள்ளமை கவர்ச்சிகரமான ஒன்றாக உள்ளது. அதேவேளை சிறிலங்காவுக்கு, தனது இராட்சத அயல்நாடான இந்தியாவுக்கு எதிரான சமபலத்தைத் தேடுகின்ற ஒரு செயற்பாடாகவும் உள்ளது. எனவே இருநாடுகளும் தங்களது இவ்வொழுங்குகள் சரியானவை என்பதற்கான காரணங்களைக் கூறிக்கொள்ளலாம்.

இந்திய அனுபவத்தை இந்நேரத்தில் மனதில் கொள்ள வேண்டும். தமிழ் சிங்கள இனப்போரில் அமைதி காக்கும் படையாக 50,000 துருப்புக்களை இந்தியா 1987இல் அனைத்துக்கட்சி அனுமதியுடன் அனுப்பியது. ஆனால், மூன்று ஆண்டுகளின் பின், 1500

தொடர்ச்சி 19ம் பக்கம்...


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள் இயக்கம் எதிரா?

**தமிழீழ விடுதலைப் போராட்டம் சந்தித்துள்ள இன்றைய நெருக்கடியான வரலாற்றுச் சூழலில், விடுதலைப் புலிகள் இயக்கம், அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சு வார்த்தையினை ஆரம்பித்தாலென்ன என்ற கேள்வி, எம் மக்கள் சிலரிடையே எழப் பார்க்கிறது. இது தொடர்பான ஒரு விளக்கம் இங்கே தரப்படுகின்றது.**




"பேச்சுவார்த்தைகள் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் புலிகள் இயக்கத்திற்கு நாட்டம் இல்லை. அதனால் புலிகளுடன் பேச்சு நடாத்துவது பயனற்றது" என்பது சிங்களத் தேசத்தினது–பொதுவான–குற்றச்சாட்டு.

பிரேமதாச அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையைப் புலிகள் குழப்பினர். அதேபோல, சந்திரிகா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையையும் புலிகள் தான் குழப்பினர் என்று கூறி, தமது குற்றச் சாட்டுக்கு அவர்கள் நியாயம் சேர்க்கின்றனர்.

ஆகவே, பேச்சு வார்த்தை மூலம் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின், அதற்குத் தடையாகவுள்ள புலிகள் இயக்கத்தை முதலில் அழிக்க வேண்டும் என்று, சிங்கள அரசு கூறுகின்றது.

இந்த இனப்பிரச்சினையைப் புலிகள் இயக்கமே ஆரம்பித்து வைத்தது என்றால், அரசின் மேற்குறித்த குற்றச் சாட்டை ஒரு விவாதத்திற்கு எடுத்து ஆராயலாம்.

ஆனால், புலிகள் இயக்கம் தோன்ற முன்னரே–இன்னும் அழுத்திச் சொன்னால், தலைவர் பிரபாகரன் பிறக்க முன்னரே–தமிழரின் உரிமைப் போராட்டம் ஆரம்பித்துவிட்டது!

அதுவும், பேச்சுவார்த்தைகளை அடிநாதமாகக் கொண்ட சாத்வீக வழிமுறைகளில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண, முன்னைய தமிழ்த் தலைமைகள் – இடைவிடாது – முயன்றன. ஆயினும், என்ன நடந்தது?

## புலிகள் இயக்கத்தைத் தவிர்த்து விட்டு ஒரு தீர்வுத்திட்டத்தை அமுல் படுத்துவதற்கு, அரசாங்கம் துடியாய்த் துடிப்பது ஏன்?

தமிழரின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டதா?

தமிழர் தலைமைகள், பேசிப் பேசி- மீண்டும் பேசி, தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்ததுதான் மிச்சம்!

அதற்குப் பதிலாகச் சிங்கள ஆட்சியாளர்கள் பேசிக் குழப்பி- மீண்டும் குழப்பி- தொடர்ந்து குழப்பிக் கொண்டல்லவா இருந்தார்கள்!

இலங்கை "சுதந்திரம்" அடைந்த 1948ஆம் ஆண்டிலிருந்து ஆயுதப்போர் வலுவடைந்த 1983 வரை, சிங்கள ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினை பற்றி விடாது பேசினர்.

25 வருடங்களுக்கு மேல் எத்தனையோ பேச்சுவார்த்தைகளை நடாத்தி, தமிழினத்திற்கு என்னத்தைக் கொடுத்தார்கள்?

கொடுத்திருக்கத் தேவையில்லை, எடுக்காது விட்டிருக்கலாமே!

ஒவ்வொரு பேச்சுவார்த்தையின் போதும் செய்யப்பட்ட உடன்படிக்கைகளைப் பின்னர் கிழித்தெறிந்தார்கள் என்ற வரலாற்று உண்மை ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், ஒவ்வொரு பேச்சுவார்த்தைக்கும் பின்னர், எம்மிடம் இருந்ததையும் ஒவ்வொன்றாக எடுத்தார்களே!

✸ மலையகம் வாழ் தமிழர்களை அரசியல் அநாதைகள் ஆக்கினர் (1948).

✸ தமிழ் மொழியைப் புறந்தள்ளினர் (1956).

✸ தமிழர் கல்வியை – வேலைவாய்ப்பைத் தடுத்தார்கள் (1956, 1971).

✸ தமிழினத்தைக் கருத்தில் எடுக்காது, இலங்கையைச் சிங்கள–பௌத்த தீவாக்கினார்கள் (1972).

✸ பிரித்தானியர்கள் உருவாக்கிய அரசியல் அமைப்பில் சிறுபான்மை மக்களுக்கிருந்த ஒரு சிறு சட்டப் பாதுகாப்பையும் நீக்கினார்கள் (1972).

✸ தமிழரின் தேசியத் தனித் துவத்தைச் சிதைக்க – தமிழர் நிலத்தில் – சிங்களக் குடியேற்றங்களை அமைத்தனர் (1948 இல் இருந்து தொடர்ச்சியாக).

✸ தமிழரின் தாயகத்தை– வடக்கென்றும் கிழக்கென்றும்–பிரிக்கப் பல்வேறு சதிகளைச் செய்தனர் (1984–1985).

✸ காலத்திற்குக் காலம் இன வன்முறையைத் தமிழர்களின் மீது கட்டவிழ்த்துவிட்டனர் (1956, 1958, 1961, 1977, 1981, 1983..).

✸ சிங்கள ஆயுதப் படைகளை அப்பாவித் தமிழர்கள் மீது ஏவி விட்டனர்.

இவ்வளவு அடக்குமுறைகளுக்குப் பின்னரும், பேச்சுவார்த்தை மூலம் எமது உரிமைகளைப் பெற முடியும் என்று நம்ப, தமிழ் இனம் மூடர்களாக இருக்க வில்லை.

இதனால், ஆயுதம் தூக்கிப் போராடி உரிமைகளைப் பெறும் வரலாற்று நிர்ப்பந்தம், தமிழினத்திற்கு உருவாகியது.

பிரபாகரன் என்ற பெருந்தலைவன் ஆயுதப் போராட்டத்தின் தலைமையைப் பொறுப்பெடுத்தார்.

சிங்கள ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்ட ஒரு வரலாற்று அனுபவத்தையும், போர்க்குணம்கொண்ட தமிழீழத் தேசியத்தை மையவிசையாகவும் கொண்ட புலிப்படை, ஆயுதப்போரை அரசு இயந்திரத்தின்மீது தொடுத்தது. தமிழினத்தின் இராணுவ பலத்தை அது, படிப்படியாக வளர்த்து எடுத்தது.

புலிகள் இயக்கத்தின் இராணுவ வளர்ச்சி, தமிழினத்தின் அரசியல் உரிமைகளைப் பேரம்பேசிப் பெறும் பலத்தைத் தமிழினத்திற்கு வழங்கியது.

மக்கள் ஆதரவு, படைத்திறன் என்ற பலத்தை அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினையைத் தீர்வு காண பேச்சுவார்த்தையைப் புலிகள் ஆரம்பித்தனர். இது 25 வருட காலமாகத் தொடர்ந்து நடந்த முன்னைய பேச்சுவார்த்தைகளை விட முற்றிலும் மாறானது. சுவாமி கருணை கூர்ந்து ஏதாவது தரவேண்டும என்பது முன்னய வரலாற்று அனுபவங்கள் சேர்ந்த ஒரு உறுதி இது. பேசிப் பேசிப் பேய்க்காட்டும் ஒரு வரலாற்று நடைமுறைக்கு எதிரான தவிர்க்கமுடியாத ஒரு கடும் நிலைப்பாடு இது.

எனவேதான்,

பேச்சுவார்த்தைகளைப் பயனற்ற வகையில்–வேறு நோக்கங்கள் கருதி– கொண்டுசெல்ல அரசு முனையும்போது, பேச்சுவார்த்தையிலிருந்து விலகிவிட, புலிகள் தீர்மானிக்கின்றனர்.

கடந்த 40 வருடகாலமாக நடந்துவருவதுபோல – பேச்சுவார்த்தை என்ற மகுடத்துடன் விழலுக்கு நீர் பாய்ச்சி – காலத்தையும் சக்தியையும் வீணாக்க, புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

இத்தகைய நிலைமைகள் ஏற்படும்போது, புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொள்கின்றது.

இவ்வாறுதான், பிரேமதாசா அரசாங்கத்துடனான பேச்சும் சந்திரிகா அரசாங்கத்துடனான பேச்சும் முடித்துவைக்கப்பட்டன.

பேச்சுவார்த்தையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தாது, பிரேமதாசா அரசாங்கம் இழுத்தடித்துக்கொண்டு இருந்த வேளையிலும்–

தரப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றாது, சந்திரிகா அரசாங்கம் தனது படையினரைப் போருக்குத் தயார்ப்படுத்திக்கொண்டிருந்த வேளையிலும்–

புலிகள் பேச்சை முடித்துக்கொண்டு வெளியேறினர்.

புலிகள், பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டு அல்லது குழப்பிக்கொண்டு வெளியேறுகின்றனர்

## சந்திரிகா அரசாங்கத்துடன் பேச்சுக்களைத் தொடர்ந்திருந்தாலும், யாழ்ப்பாணப் படையெடுப்பு நடந்து தானிருக்கும்!

பேச்சுவார்த்தைகளின்போது தமிழினத்திற்கு இருந்த நிலை. இதைத் தரவேண்டும் இவ்வளவு நாட்களுக்குள் அதைத் தரவேண்டும் என்பது புலிகள் காலப் பேச்சு வார்த்தை. இது கடும் போக்குடைய ஒரு அதிதீவிர நிலைப்பாடு அல்ல. மக்கள் பலம் மற்றும் கசப்பான என்று இதற்குப் பெயர் சூட்டுவது, தமிழ் இனத்தின் 40 வருட வரலாற்று அனுபவத்தைப் பழிப்பதற்கு ஒப்பானதாகும். அத்துடன், சிங்களப் பேரினவாதத்தின் சூழ்ச்சிகர அரசியலுக்குத் துணைபோவதற்கும் அல்லது

தொடர்ச்சி 8ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு...

வக்காலத்து வாங்குவதற்கும் அது சமனானதாகும்.

பதவி ஏற்றவுடன் தமிழினத்திற்கு வழங்குவேன் என்று சந்திரிகா

**பேச்சுவார்த்தையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தாது, பிறேமதாசா அரசாங்கம் இழுத்தடித்துக்கொண்டு இருந்த வேளையிலும் - தரப்பட்ட உறுதிமொழிகளை நிறை வேற்றாது, சந்திரிகா அரசாங்கம் தனது படையினரைப் போருக்குத் தயார்ப்படுத்திக்கொண்டிருந்த வேளையிலும்- புலிகள் பேச்சை முடித்துக்கொண்டு வெளியேறினர். புலிகள், பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டு அல்லது குழப்பிக்கொண்டு வெளியேறுகின்றனர் என்று இதற்குப் பெயர் சூட்டுவது, தமிழ் இனத்தின் 40 வருட வரலாற்று அனுபவத்தைப் பழிப்பதற்கு ஒப்பானதாகும். அத்துடன், சிங்களப் பேரினவாதத்தின் சூழ்ச்சிகர அரசியலுக்குத் துணைபோவதற்கும் அல்லது வக்காலத்து வாங்குவதற்கும் அது சமனானதாகும்.**

பேச்சை முடித்துக்கொள்வது என்பதன் அர்த்தம், இனிமேல் புலிகள் இயக்கம் பேச்சுக்குத் தயாரில்லை என்பதோ அல்லது பேச்சு வார்த்தைகளுக்கு புலிகள் இயக்கம் எதிரானது என்பதோ அல்ல.

மாறாக, அரசியல் யதார்த்தங்களை உணர்ந்துகொண்டு, நேர்மையுடன்- பயனுள்ள வகையில் பேச்சுக்களை நடாத்த வரும்படி சிங்கள அரசை நிர்ப்பந்திப்பதுதான் புலிகளின் நோக்கமாகும்.

புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு எதிரிகளல்லர். அதுபோல, பயனற்ற பேச்சுவார்த்தைகளுக்கு, புலிகள் நண்பர்களுமல்லர்.

"சந்திரிகா அரசாங்கம் தரவிருந்ததைப் பெற்றுக்கொண்டிருக்கலாமே! அந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிட்டதால் இப்போது, குடாநாட்டையும் இழந்தல்லவா நிற்கின்றோம்" என்று, புலிகளை நோக்கிச் சிலர் சுட்டுவிரல் நீட்டுகின்றனர்.

மேலோட்டமான பார்வைக்கு இந்தக் கேள்வி, அர்த்தம் பொதிந்ததுபோல் தோன்றும்.

சற்று ஆழமாகப் பார்த்தால், அதில் உண்மை எதுவும் இல்லை என்ற உண்மை தெரியும்.

அம்மையார் சொன்னது ஒன்று

பின்னர் சட்டவரைவாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்தது வேறு.

இப்போது, நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் விவாதத்தைத் தொடர்ந்து தீர்வுப்பொதி இன்னொன்றாக மாறிவருகின்றது.

பி. பி. சி. கொழும்பு முகவர் புளோரா பொஸ்வேட் சொல்லியிருப்பதுபோல, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதையே, சந்திரிகா அரசாங்கத்தின் தீர்வுப் பொதிக்கும் நடந்துள்ளது.

இன்று இனப்பிரச்சினையின் தீர்வுவிவகாரம் தொடர்பாக அம்மையார், தனது முன்னைய-முற்போக்கு- முகமூடியை இழந்து அம்பலமாகிவிட்டார் என்பது வெளிப்படை.

ஆனால், சந்திரிகா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை நாட்களில் அவரது உண்மை முகத்தை-சதி நோக்கத்தை- புலிகள் இயக்கம் கண்டுகொண்டுவிட்டது. அதனால்தான், பேச்சுவார்த்தைக்குக் காலக்கெடு விதித்து, அதன்பின் பேச்சிலிருந்து புலிகள் விலகிக்கொண்டனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக சந்திரிகா-ரத்வத்த அரசாங்கத்திடம், அன்றே ஒரு தெளிவான திட்டம் இருந்தது.

அதாவது,

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடித்துவிடுவது என்பதே அதுவாகும். இதற்கு இரண்டு வழிமுறைகளை அது தேர்ந்தெடுத்து வைத்திருந்தது.

1) தமிழ்த் தேசியத்தைப் படிப்படியாக சிதைத்துவிடும் நோக்கங்கொண்ட ஒரு அரைகுறைத் தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்துவது. இதைப் புலிகள் ஏற்காது போனால்,

2) முழுப் படைபலத்தையும் ஒருங்கு திரட்டிப் பயன்படுத்தி, தமிழீழத் தேசியத்தின் பாதுகாப்புக் கவசமான புலிகள் இயக்கத்தை அழித்து அரசியல் அரங்கில் இருந்து அதை நீக்கி- அதன்பின் அரைகுறைத் தீர்வுத் திட்டம் ஒன்றை, இனப்பிரச்சினைக்கான தீர்வாக வைப்பது-அதாவது, இராணுவ வழிமூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது.

பேச்சை அன்றே முடித்துக்கொள்ளாது

வைப்பது என்பதும், சந்திரிகா-ரத்வத்த அரசாங்கத்தின் மூலோபாயம் ஆகும்.

புலிகள் இயக்கத்தின் அரசியல் சித்தாந்தம் பற்றி, சிங்கள அரசுக்கு நன்கு தெரியும். அதுபோல, தமிழீழ மக்களது தேசிய நலன்களைப் பெற்றுக் கொடுப்பதில் தலைவர் பிரபாகரன் எவ்வளவு உறுதியாக இருக்கின்றார் என்பதும், அரசுக்குத் தெரியும்.

அரைகுறைத் தீர்வுப்பொதிகளைக் கொடுத்து அல்லது ஆசைகாட்டி- ஏமாற்றி விலைக்கு வாங்கப்படக்கூடிய நிலையில் புலிகள் இயக்கம் இல்லை என்பதும், அரசுக்குத் தெரியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, புலிகள் இயக்கத்தினது இருப்பும்-தமிழீழ தேசியத்தினது இருப்பும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது என்பது, உலகிற்கே தெரியும்.

தமிழீழத் தேசியம் என்ற அரசியல் உணர்வு தமிழ் மக்களிடம் இருக்கும் வரை, தமிழீழத்தை அடிமைகொள்வது என்பது முடியாத காரியமாகும். புலிகள் இயக்கம் இருக்கும்வரை தமிழீழத் தேசியத்தை அழிப்பதும் இயலாதது.

இந்த நிலையில், சந்திரிகா அரசாங்கம்

**தமிழீழத் தேசியம் என்ற அரசியல் உணர்வு தமிழ் மக்களிடம் இருக்கும்வரை, தமிழீழத்தை அடிமை கொள்வது என்பது முடியாத காரியமாகும். புலிகள் இயக்கம் இருக்கும்வரை தமிழீழத் தேசியத்தை அழிப்பதும் இயலாதது.**

நீட்டியிருந்தால், இப்போதைய 'கட்டெறும்புப்' பொதியே புலிகளுக்கு முன்னும் வைக்கப்பட்டிருக்கும். அத்துடன், பேச்சும் முறிந்திருக்கும். போரும் தொடங்கியிருக்கும். குடாநாட்டுப் படையெடுப்பும் நடந்திருக்கும்.

**எனவே, பேச்சு முறிவையும் குடாநாட்டு ஆக்கிரமிப்பையும் ஒன்றாகப்போட்டுக் குழப்பிக்கொள்ளக் கூடாது.**

இனப்பிரச்சினைக்கு இராணுவ வழியில் தீர்வு காண்பது என்பதும், அதைக் குடாநாட்டு ஆக்கிரமிப்புடன் தொடக்கி ஒரு சதித்திட்டம்பற்றி நம்பிக்கை வைத்திருக்கின்றது.

அதுதான், புலிகள் இயக்கத்தைத் தவிர்த்துவிட்டு ஒரு அரைகுறைத் தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்தல் என்பதாகும். தமிழர் தேசியத்திற்குத் துரோகம் இழைத்துவரும் தமிழ்க் குழுக்களைப் பயன்படுத்தி இதைச் சாதிக்க, அரசு ஆசை கொண்டுள்ளது.

இது நிராசையாகும் என்பதும் சிங்களப் பேரினவாதத்தின் ஒரு அழகான கற்பனை என்பதும் மிக விரைவில் தெரிந்துவிடும்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்
## Liberation Tigers of Tamil Eelam

விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம்
211, Katherine Road.
London E6 1BU
U.K.
06-08-96

சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது போர் தொடுத்துள்ளது. அப்போரில் நாசகார ஆயுதங்களை மட்டுமல்ல உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களையும் கருவியாகப் பயன்படுத்துகின்றது.

நகரங்களை கைப்பற்றி தமிழ் மக்களை இராணுவ கட்டுப்பாட்டினுள் கொண்டு வருதல் என்ற அதனது தந்திரோபாய திட்டத்தினால் மிக மோசமாகவும், கொடூரமாகவும் பாதிக்கப்படுவது மக்களாகவே உள்ளனர். மரபு ரீதியான போர் முறை மூலம் நகரம் ஒன்றைக் கைப்பற்றுவதானால், பீரங்கி, விமானம் போன்றவற்றால் தாக்குதல் நடாத்திய பின்னரே இராணுவ நகர்வை மேற்கொள்ள முடியும். இந்த அடிப்படையில், கிளிநொச்சி நகரம் தரை மட்டமாக்கப்படுகின்றது. அப்பகுதியில் மழைபோல் குண்டுகள் வீசப்படுகின்றன. அங்கிருந்த கோவில்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரி போன்ற அனைத்துக் கட்டிடங்களும் குண்டு மாரியினால் இடித்துக் கொட்டப்படுகின்றன. மக்கள் அகதிகளாகச் சென்ற இடங்களையும் விமானங்கள் விட்டுவைக்கவில்லை. தப்பியோடி, வீதியிலும், மரங்களின் கீழும் தஞ்சம் அடைந்துள்ள முறிகண்டி போன்ற இடங்களிலும் கொடிய குண்டு வீச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் உள்ளனர். மருந்துவகை எவையும் அனுமதிக்கப்படாத சூழ்நிலை தொடர்ந்து காணப்படுகின்றது. MSF போன்ற வெளிநாட்டு மருத்துவ, நிவாரண நிறுவனங்கள் வெளியேறியுள்ளன. இந்நிலையில், காயப்பட்டோர் மருத்துவ வசதியின்றி இறந்துபோகும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

இத்தகு அவலமான நிலையை இன்னும் மோசமாக்கிவிடும் நோக்கத்துடன் அரசாங்கம், மக்களுக்கான உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களை தடுத்து வருகின்றது. பல வாரங்களாக எவ்வித உணவுப் பொருட்களும் வட பகுதிக்குச் செல்லாத நிலை காணப்படுகின்றது. "சத்ஜய" இராணுவ நடவடிக்கை தொடங்கிய பின்னர், "பாதுகாப்பு இல்லை" என்ற காரணம் காட்டி வடபகுதிக்கு உணவு கொண்டு செல்லும் லொறிகளை இராணுவம் தடுத்து வைத்துள்ளது. விடுதலைப் புலிகள் மீது வீண் பழியைப் போடும் பிரச்சாரத்தை முடுக்கி விட்ட வண்ணம் இத்தகு படுபாதகமான செயலை மக்களுக்க எதிராக அரசாங்கம் செய்து வருகின்றது. சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கமே மக்களுக்கான உணவுப் பொருட்களை போக்குவரத்துச் செய்யும் அமைப்பாகும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம், உணவு லொறிகளை அனுமதிப்பதாக அரசாங்கம் வாக்களித்தபோதும், இராணுவமும், பாதுகாப்பு அமைச்சும் தடுத்து நிறுத்தி கண்ணாமூச்சி ஆடுகின்றன. இதனால், அகதிகளாக இடம்பெயர்ந்த 2 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் மட்டுமல்ல, தற்போது வன்னிப் பெருநிலப் பரப்பிலுள்ள 6 இலட்சம் மக்களும் பெரும் பட்டினியை எதிர் நோக்கியுள்ளனர். கடும் வரட்சி நிலவும் அப்பகுதியில், எவ்வித் பொருட்களையும் எடுத்துச் செல்லாது காடுகளுக்கு இடம் பெயர்ந்த மக்கள், உணவு, நீர் போன்ற வசதிகள் இல்லாது சொல்லொணாத் துன்பத்துக்கு ஆளாகி உள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கம் செய்துவரும் இக்கொடுமை அம்பலப்படுத்தப்பட வேண்டும். தமிழ் மண்ணையும், மக்களையும் ஆக்கிரமிக்கும் நோக்கத்துடன் அது செய்துவரும் அட்டூழியங்கள் வெளி உலகுக்குச் சொல்லப்பட வேண்டும். குறுகிய கால அடிப்படையிலும், நீண்ட கால அடிப்படையிலும் அவலத்தையும், அழிவையும் தரவல்ல இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளது. இவ் இராணுவ ஆக்கிரமிப்பை விடுதலைப் புலிகள் களத்தில் எதிர் கொண்டு, சிங்கள மேலாதிக்கத்தை நிரந்தரமாக இல்லாது செய்யும் வீரம் செறிந்த விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ளனர். "சத்ஜய" நடவடிக்கையின்போது, 51க்கு மேற்பட்ட போராளிகள் இதுவரை வீரச்சாவடைந்துள்ளனர். அதேவேளை, மக்களின் அவலங்களைப் போக்குகின்ற நடவடிக்கைகளில் வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்கள் உடனே இறங்க வேண்டும். அரசாங்கத்தின் அராஜகச் செயற்பாடுகளை உலகின் முன் வைத்தல் வேண்டும். மக்களின் அவலங்களை வெளிப்படுத்தும் விதமாக பல்வேறு ஜனநாயகச் செயற்பாடுகளை முடுக்கிவிடுதல் வேண்டும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற உள்ளூர் நிறுவனங்கள் தமது நிவாரண வேலைகளைச் செய்வதற்கு வசதியாக நிதி திரட்டி அனுப்புதல் போன்ற செயற்பாடுகளிலும் வெளிநாடு வாழ் தமிழர்கள் பங்கு பெறுதல் வேண்டும்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அனைத்துலகச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொங்கியெங்கள் ஊர்புகவே போர்க்கருவி தூக்குவோம் போரில்பகை தொலையுமட்டும் ஊரினுள்ளே தாக்குவோம் !

வெள்ளிநிலா பால்சரித்து அங்குவிளை யாடும்
வீசுகின்ற காற்றுமெமைத் தேடிவிட்டுப் போகும்
பொன்னலரி பூச்சொரிந்து எம்வரவைப் பார்க்கும்
போகவழி ஏதுமின்றிக் கண்ணிரண்டும் வேர்க்கும்.

ஊர்மனைக்குள் வாழ்பவரும் வேரிழந்த பேர்கள்
ஊளையிட்டுச் சாகிறதாம் நாம்வளர்த்த நாய்கள்
நாமெழுந்து போர்புரிந்தால் நாளையெங்கள் ஊரில்
நம்பியெழு ஊரினுக்குள் நாம்புகுவோம் தேரில்.

எங்கோ பாட்டுக் கேட்கிறது.
எம்மில் எத்தனைபேர் அர்த்தமுணர்ந்தோம்?
நரகில் கிடந்துழலவும்
நாக்குக்கேதும் படைக்கவுமா நாம்பிறந்தோம்?
உருகியுருகி ஒன்றுமில்லாததாகி
எரியவா உயிரெடுத்தோம்?
வாழ்வு வெறும் வரண்டநிலமாகி
தாழ்வுற்றுப் போகவா தமிழரென்றானோம்?
திருவோடும் கையுமாக தெருத்தெருவாக அலையவா



கருவுற்றுப் பெற்றாளெம் தாய்?
குயிலிருந்துபாடாத கொம்பாகிப் போகவா
தளிரீன்றோம் நாம்?
வசந்தம் தழுவாது போனதா எம்பூக்காடு?
ஆமெனினும் அடங்கிப்போ.
இல்லையெனில் எழுந்து வா.
எதுவெனினும் முடிவெடுக்க இதுதருணம்.
முடிசுமந்த தலையும்
செங்கோலேந்திய கையுமாக
கொற்றப்பந்தர் வீற்றிருந்த இனத்தின் வேர் நுனி
நீர்குடிக்கவலுவற்று நெருப்பிடை வீழ்வதா?
புழுதி பறக்கக் குதிரைப் படைபோன தெருவிலின்று
குருதிச் சேறு.
தேருலாவிய வீதியில் யாரோவொருவனின் கவசவாகனம்.
பகைவென்று வரும்போது
மகரதோரணம் விளங்கிய வாசலில்
எதிரியின் காவலரண்
எப்படிப் பொறுப்பாய் மகனே!
எழுக என் மகளே!
நிலத்தில் இறங்குக இளைய விழுதுகள்.
களத்தில் இறங்குக தமிழர் கொழுந்துகள்.
நிமிர்ந்து கொள்ளுங்கள்.
முகிலுமக்கு முகம்துடைத்துக் கொள்ளட்டும்.
எல்லாமிழந்து இல்லாதாரானோம்.
உயிர்க்கூட்டை வீட்டுத்தாழ்வாரத்தில் வைத்துவிட்டு
சதைக் கூடென ஜடமாகிப் போனோமெனினும்
பணியோம் நாம்.
இன்னும் வரட்டும் ஏழ்மை.

ஆயினும் இழிவுற்றுனக்கு ஏவல் செய்யோமென
எதிரிக்கு உணர்த்துவோம் வருக.
பிடிசாம்பலானதா எம்பெருவாழ்வு?
இல்லை ....... இல்லையடா.
திக்கெட்டுமதிர பகைக்கொன்றுரைப்போம்.
அறுகுப்புல்லின் மயிரைப் பொசுக்கலாம்
வேரையறுத்து வீழுத்தவா முடியும்?
எம்முற்றமுழுது எருக்கலை நாட்டலாம்
காடாகிப் போகலாம் தாய்மடி.
மீண்டுமெழுவோம் எம்முற்றத்தில்
உன் மூச்சுத்திணற முளைப்போம்.
இருந்துபார் பகையே! இது நடக்கும்.
எம்மைக் கொல்வாய்
எம் பிள்ளைகளையும் கொல்வாய்
கொன்றெங்கே புதைப்பாய்?
நீ புதைக்குமிடம் புதைகுழியல்ல ........
அடைவைக்கும் இடமென்று அறிவாய் விரைவில்
கல்லாலெறிந்து கலைத்தாய் எம்மை
உள்ளே பிடித்துச் சென்றாய் உறவை
இரண்டுமே உனக்கு எமனாச்சு.
உள்ளும், புறமும் உனக்கு நெருப்பு மூட்ட
நீயே வழிசமைத்துத் தந்துள்ளாய்.
உன் சீருடையில் தீப்பிடிப்பது தெரியாமல்
சிரித்தபடி ஆரியகுளத்தடியில் அமர்ந்துளாய்,
ஐயோ பாவம்.
எரிமலை வாசலை அடைத்தபடி
இன்னும் எத்தனை நாளிருக்கும் உத்தேசம்?
ஆனந்தவாழ்வு அடிவரைவற்றி
வறுமையுற்றுளது எம் நாளாந்தம்.
இல்லிழந்த வாழ்வே இருட்டாகிக் கழிந்தெம்
"வாழ்வுமுற்றிற்று" எனத் திரை வீழுந்து போமா?
ஊர்மண்ணை எம் கால்கள் தொடாமலே
இங்கோர்சுடலையில் எரியுண்டு போவோமா?
"பாறைபிளந்து பயிர்வளர்த்தோன்" பரம்பரை
சோர்ந்தோர் மூலையில் கிடத்தலென்ன விதி
எம்மை ஊரிருந்து விரட்ட
அவனுக்கென்ன அதிகாரம்?
கூடியிருந்தும், தனித்தும்
பாடியிருந்து மகிழும் சூழலே பரவசம்.
வெறும் நிலமல்ல எம்ஊர்.
மண்மீது விரியும் ஆனந்தச் சிறகே
ஊர்வாழ்வின் வேரென்றாகும்
இரண்டுமே இல்லையென்றாயின்
ஊரென்பது வெறும் கல்லும் மண்ணும் கலந்த
கலவை யென்றாகிவிடும்.
விண்ணதிர, மண்ணதிர, விரிந்தகடலதிர
கண்திறந்து வருகநம் கருப்பை உயிர்கள்
கொற்றவை பெற்ற குழந்தைகளென
நெற்றிக்கண் திறந்து நிமிருக நம் பரம்பரை.

## உலைக்களம்

- வியாசன்

என் பிள்ளை களத்தில்......
என் பிள்ளை களத்தில் ......
என் பிள்ளையும் களத்திலென்று
எல்லோரும் சொல்கின்ற எழுச்சிநிலை கைவந்தால்
மண்வந்த பகையன்றே மடிந்துவீழ மாட்டாதோ?

*பொங்கியெங்கள் ஊர்புகவே போர்க்கருவி தூக்குவோம்*
*போரில் பகை தொலையுமட்டும் ஊரினுள்ளே தாக்குவோம்*
*தம்பிபிர பாகரனின் தானையிலே சேருவோம்*
*தங்கத்தமிழீழம் வரும் நேரம் வரை சீறுவோம்.*

*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




### அத்தியாயம் 8 இன் தொடர்ச்சி

அங்கு இரவுக் காவலுக்கு நிற்கவேண்டிய பொலிசார், மாலையானால் என்றைக்குமே காவலுக்கு நிற்பது கிடையாது. ஏதாவது ஒரு மறைவிடம் தேடிப் படுத்துக்கொள்வார்கள். அவர்களில் தமிழ் தெரிந்த பொலிசார், "எதற்கும் நீங்கள் சாவியை எங்களிடத்தில் தாங்கோ......... ஒரு வேளை புலிகள் வந்தால் நாங்கள் கோமிலுக்குள்ளைதான் வந்து ஒளியவேண்டியிருக்கும்" என்று வேண்டுகோள் விடுப்பார்கள். அப்படி அவர்கள். எல்லாருக்கும் முதல் ஓடித் தப்ப வழி தேடிக்கொண்டிருந்தும்கூட, வட்டுக் கோட்டையில் 'கோட்டை' விட்டுவிட்டார்கள்.

14ஆம் திகதி முதலே பகல் இரவு என்று தொடர்ச்சியாக உலங்குவானூர்திகள், யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திற்கு வந்துபோய்க் கொண்டிருந்தன. கெனலண்ட் மண்டபத்திலும் தனிவீடுகளிலும் குழுக்களாக இருந்த மக்கள், "துருப்புகளைக் கொண்டுவந்து இறக்குகின்றார்கள் – சொன்னபடி இரண்டு மூன்று நாட்களில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றத்தான் போகின்றார்கள்" என்று நினைத்தார்கள். ஆனால், அங்கே நடந்து கொண்டிருந்தது என்ன? அவர்கள் எதிர்பார்த்ததற்கு எதிர்மாறான நிகழ்வு. விரைவாகப் படையினர் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அளவெட்டி, சண்டிலிப்பாய் பகுதியில் 'புலிப்பாய்ச்சலில்' அடி விழுந்து கொண்டிருக்கையிலே அரைவாசிப்பேருக்கு மேல் 'ஹெலி' மூலம் பறந்து தப்பிவிட்டார்கள்.

புலிகளால், 'புக்காரா' சுட்டுவீழ்த்தப்பட்டதை கும்பிளாவளைப் பிள்ளையார் கோவிற் பகுதியில் இருந்தவர்கள் கண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் 'புலிகளின் குரல்' வானொலி மூலம் கேட்டிருக்கிறார்கள்.

பாவம் வட்டுக்கோட்டை கெனலண்ட் மண்டபத்தில் நின்ற ஐந்து பொலிசாருக்கு இந்தப் புதினங்கள் ஒன்றும் தெரியாது. 15ஆம் திகதி எல்லாரும் காலியான பின்னரும் இவர்களுக்கு ஒன்றும் தெரியாது. 16ஆம் திகதி புலிகள் வந்தபோதுதான், தாங்கள் வசமாக மாட்டிக்கொண்டோம் என்ற விபரம் புரிய ஆரம்பித்தது. புலிகளைக் கண்ட மறுகணமே 'பிச்சைவேண்டாம் நாயைப்பிடி' என்ற மன நிலையில், ஏனைய பொருட்கள் அனைத்தையும் விட்டு, துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு 'இன்றுவிட்டேன் கொன்றையடி' என்ற கரடி போல் ஓட்டம் பிடித்தனர். அவர்களுக்குப் போவதற்கு வழி தெரியாது என்றாலும், 'புல்டோசர்களால்' படையினர் இடித்துத் தகர்த்து வெளியாகிவந்த பாதைகளையே ஓடுபாதைகளாகக் கொண்டு ஓடி மறைந்தனர்.

புலிகளிடமிருந்து தமிழர்களைப் "பாதுகாக்க" வந்த இந்தக் கையாலாகாக் காடையர்கள்– வீடுகளை நொருக்கினார்கள். பொருட்களைக் கொள்ளையடித்தார்கள்: பயிர் பச்சைகளை அழித்தார்கள்: தம்மிடம் அகப்பட்டவர்களில் சந்தேகப்பட்டவர்களைச் சித்திரவதை செய்து கொன்றார்கள்: அகதி முகாம்களைத் தீவைத்து எரித்தார்கள். மூளாய் வைத்தியசாலையைத் துவம்சம் செய்தார்கள்.

கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலில் தஞ்சம் கோரி இருந்தவர்கள், இராணுவத்திடம் அனுமதி பெற்று, அருகில் உள்ள தமது வீடுகளுக்குச் சென்று சமைத்துச் சாப்பிட்டுவிட்டு இரவுப் படுக்கைக்கு மீண்டும் கோவிலுக்கு வருவது வழக்கம்.

11ஆம் திகதி இப்படி ஒரு சம்பவம் நடந்தது. வயது நாற்பதைத் தாண்டிவிட்ட ஒரு தம்பதி. கணவன், மனைவி, தாயார் மூவருமாக தமது வீட்டிற்குச் சென்று சமைத்துக் கொண்டிருந்தபோது சிப்பாய் ஒருவன் அங்கே வந்தான். அவர்களிடம் பேசினான்.

"இங்கே என்ன செய்கின்றீர்கள்?"

"நாங்கள் சமைச்சுக் கொண்டிருக்கிறம்".

"நீங்கள் சமைக்க வேண்டாம் அங்கே வாருங்கள் (தொலைவிலிருந்த வீட்டைக்காட்டி) உங்களுக்கு நல்ல சாப்பாடு தருகிறோம்."

# வித்துக்கள்

"இல்லை, எங்களுக்கு இந்தச் சாப்பாடு போதும். நாங்கள் அங்க வரவில்லை."

"அப்போ (மனைவியைக் காட்டி) நீங்கள் மட்டும் அங்க வாங்க, சாப்பாடு தந்து விடுறம்".

"இல்லை, எங்களுக்கு எந்தச் சாப்பாடும் வேண்டாம்: நான் அங்க வரவும் மாட்டேன்."

"இது யாருடைய வீடு?"



"இது எங்களுடைய வீடுதான்."

"சரி, நீங்கள் இரவுக்குக் கோயிலுக்குப் படுக்கப் போகவேண்டாம், இங்கேயே தங்குங்கள்.........."

அவன் பார்வையும், பேச்சும் அவன் என்ன நோக்கத்தில் பேசுகின்றான் என்று விளக்கின. அவனிடம் ஒருவாறு பேச்சுக்கொடுத்துச் சமாளித்துவிட்டு, அவர்கள் உடனே கோயிலுக்கு வந்துவிட்டார்கள். அந்த நிகழ்வுக்குப் பிறகு எவரும் வீடுகளுக்குப் போகாமல் கோயில் வளவுக்குள்ளேயே சமைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

மாமிச வேட்டையாட விரும்பும் இத்தகைய வெறி நாய்களைத்தான், புலிகளிடமிருந்து தமிழர்களை "விடுவிக்க" தளபதி சந்திரிகா அனுப்பி வைத்துள்ளார்!

இராணுவக் கட்டுப்பாட்டினுள் வாழ்ந்தால் அனைத்தும் கிடைக்கும் – அமைதியாக வாழலாம் என்ற அற்ப ஆசைபடைத்தவர்களுக்கு, இந்த நிகழ்வுகளைச் சமர்ப்பணம் செய்கின்றேன். கட்டிய கணவன், மாமியாருடன் நின்ற பெண்ணே தன்னைப் பாதுகாத்துக்கொள்ள ஓடவேண்டிய நிலையென்றால், மேலும் நான் விளக்கம் சொல்லத் தேவையில்லை.

ஆசிரியர் பரமேஸ்வரன், தாயார், தம்பியார், சகோதரி நால்வரும் அளவெட்டிச் சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டிருந்தனர். பரமேஸ்வரனுக்கு யூலை 15ஆம் திகதி மாலை புன்னாலைக் கட்டுவனில் திருமணம் நடைபெற இருந்தது. முகூர்த்தத்திற்கு மாப்பிள்ளை எப்படியாவது புன்னாலைக்கட்டுவனில் நின்றாக வேண்டும். சிவில் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்த உடுகம்பொலவிடமும், உளவுப்பிரிவு என்று தம்மை அறிமுகம் செய்துவந்த பிரபாநாத்திடமும் தன் நிலையைச் சொல்லி தங்களை வெளியே செல்ல அனுமதிக்கும்படி கேட்டபொழுதெல்லாம்– "இரண்டு நாளைக்குள் நாங்கள் யாழ்ப்பாணம் முழுவதையும் பிடித்து விடுவோம். அதன் பிறகு சுதந்திரமாகக் கலியாணம் செய்யலாம்" என்றும்–

" பெண் வீட்டாரே இரண்டொரு நாளில் இடம்பெயர்ந்து ஓடிவிடுவார்கள். நீர் போனாலும் அங்கே அவர்கள் இருக்கமாட்டார்கள். எனவே திருமணம் ஒத்தி வைக்கப்பட்டதாக டயரியில் எழுதி வையும்" என்றும்–

"திருமணம் முடிந்த கையோடு பெண்ணை இங்கே அழைத்து வருவதாய் இருந்தால், மற்றவர்கள் இங்கே இருக்க நீர் மட்டும் போய் வரலாம்" என்றும் அவர்கள் கூறியதால், அவர்களிடம் அனுமதி பெற்றுப் புறப்படும் எண்ணத்தைக்கைவிட்டுத் திருட்டுத்தனமாகப் புறப்பட்டு ஒருமுறை வழியில் அகப்பட்டுக்கொண்டபோது, இவர்களை விசாரணை செய்த அதிகாரி இவர்கள் தப்பித்துப் போவதற்குக் காரணம் இராணுவம் ஒழுக்கக் கேடாக நடந்துவிடக்கூடும் என்ற பயத்தினால் என்று நினைத்துக்கொண்டு, "நீங்கள் எதற்கும் பயப்பிடவேண்டாம். முன்னர் இராணுவம் நடந்து கொண்டது போலெல்லாம் நாம் இப்போது நடக்க மாட்டோம்: உங்களைப் பாதுகாக்கவே வந்துள்ளோம்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முல்லைத்தீவு படைத்தள வரலாற்றுப் பெருஞ் சமர்: “ஓயாத அலைகள்”

**19-07-96** அதிகாலைப் பொழுது முல்லைத்தீவு இராணுவ கடற்படைத் தளத்தில் இருந்த படையினர் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தனர். திடீரென அவ்விரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு, படைத்தள காவலரண்களில் தூங்கி வழிந்து கொண்டிருந்த இராணுவ வீரர்களின் தூக்கத்தைக் கலைத்துக் கொண்டு திடுக்கிடும்படியாக விடுதலைப் புலிகளால் "ஓயாத அலைகள்"" எனப் பெயர் சூட்டப்பட்டு தொடங்கப்பட்ட தாக்குதல் பெரும் ஆர்ப்பரிப்புடன் எழுந்து படைத்தளம் முழுவதையுமே தாக்கத் தொடங்கியது.

இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலீஸ் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் என்று சுமார் 1500 படையினரைக் கொண்டதாக இம் முகாம் இருந்தது. 4 சதுர மைல் பிரதேசத்திற்கும் அதிகமானதான நிலப்பிரதேசத்தில் கடற்படை இறங்குதுறை, விமான தரையிறங்கு பகுதி ஆகியவற்றைக் கொண்டதாகவும் கொக்கிளாய்–நாயாறு, மணலாறு போன்ற இராணுவ முகாம்களுக்கு இராணுவ தளபாட விநியோகம் செய்யும் தாய்த்தளமாகவும் இது விளங்கியது. இதனால் இங்கு பாரிய ஆயுதக் கிடங்கு இருந்ததோடு பல இராணுவ முகாம்களுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ளக் கூடிய நவீன தொலைத் தொடர்பு சாதனங்களையும் தொலைத் தொடர்பு கோபுரத்தையும் கொண்டிருந்தது. கனரக ஆயுதங்கள், பீரங்கி வாகனங்கள், ஆட்டிலறிகள் என பல நவீன போரியல் கருவிகளால் பலப்படுத்தப்பட்ட நிலையில் இராணுவ படைத்தளம் இருந்த நிலையிலேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இரவு 12.10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இத் தாக்குதலானது படைத்தளத்தின் வடக்கு, தெற்கு என இரண்டு பகுதிகளிலும் இருந்த முன்னணிக் காவலரண்களைத் தகர்த்து ஊடுருவியபடி ஆரம்பித்தது. விடுதலைப் புலிகளின் பல படையணிகள் தாக்குதல் ஆரம்பித்த ஒரு சில மணித்தியாலத்திற்குள்ளேயே முகாமின் பிரதான பகுதியையும் அதனுடன் இணைந்திருந்த வானொலித் தொலைதொடர்பு நிலையத்தையும் தாக்கியழித்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அதனையடுத்து முகாமின் கடற்கரையோரப் பகுதி முழுவதையும் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். விடுதலைப் புலிகளின் ஆக்ரோஷமான கடும் தாக்குதலால் பெருமளவினாலான படையினர் கொல்லப்பட. முகாமின் வானொலித் தொடர்பும் துண்டிக்கப்பட்ட நிலையில் ஏனைய படையினர் திருப்பித் தாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதை விட முகாமின் மையப்பகுதி, கடற்கரைப் பகுதி என அனைத்தையும் விட்டு விட்டு தப்பி ஓடும் முயற்சியிலேயே ஈடுபட்டனர். இவ்வாறு ஓடியவர்கள் முகாமின் தரைப்பகுதியின் எல்லையில் இருந்த கட்டடங்களுக்குள்ளும், சிறு புதர் காட்டிற்குள்ளும் ஓடி ஒளிந்தனர். தொடர்ந்தும் அணிஅணியாக முன்னேறிய புலிகள் இவர்களையும் தேடி அழித்து 20–07–96 காலை முகாமைத் தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

முகாமின் நிலைமை இவ்வாறு இருக்க சிறீலங்கா அரசு சிங்கள மக்களுக்கும், எதிர்க்கட்சியினருக்கும் அவர்களை ஆட்சியில் இருக்க உதவிய ஏனைய கட்சியினருக்கும் உண்மையை மறைத்து முரண்பட்ட பல பொய்த்தனங்களை வழங்கிக் கொண்டிருந்தனர்.

தாக்குதலிலிருந்து தப்பியவர்கள் ஒன்றாகக் கூடி நின்று தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றும் தகவல் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் அவர்கள் எங்கு ஒதுங்கியுள்ளார்கள் என்று தெரியவில்லை என்றும் மாறுபட்ட பல செய்திகளை தமது மக்களுக்குச் சேவை செய்ய அரியாசனத்தில் ஏறிய அரசு பொய்யுரைத்துக் கொண்டிருந்தது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் ‘400 புலிகள் கொல்லப்பட்டு விட்டனர் என்றும் 300 படையினரே தமது தரப்பில் கொல்லப்பட்டுள்ளார்கள்" என்றும் கூறியதுடன் "புலிகள் கூறுவது போல் படையினரின் இழப்பு கூடியது அல்ல என்றும் அவை மிக மிகச் சொற்பமே என்றும் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தார்.

மிகவும் நுட்பமான முறையில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் திட்டமிடப்பட்டு வழிநடத்தப்பட்ட இத்தாக்குதலில் அரசின் பல எதிர் நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு புலிகளின் தாக்குதல் வியூகங்களை அமைத்திருந்தார். படைத்தளத்திற்குள் என்ன நடக்கின்றது என்று தெரியாமல் இருக்கவும் படையினர் உதவி கோர முடியாதபடியும் தொலைத் தொடர்புகளைத் துண்டித்த புலிகள் கடற்படையினரால் உதவி கோர முடியாதபடி கடற்படை இறங்கு துறையையும், விமானப் படையினர் உதவ முடியாதபடி விமான தரையிறங்கு பகுதியையும் தாக்குதல் ஆரம்பித்த ஒரு சில மணித்தியாலத்திற்குள்ளேயே தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். முகாமின் ஏனைய தரைவழிப்பாதைகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாகவும் கடும் முற்றுகைக்குள்ளானவையாகவும் இருந்தன. இதன் காரணமாக உடனடியாக படையினருக்கு எந்த விதமான உதவிகளும் கிடைக்கமுடியாமல் தடுக்கப்பட்டது. தொலைத் தொடர்பு கோபுரத்திற்கு அருகில் இருந்த ஆயுதக் களஞ்சியத்தினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த நேரத்தில் இருந்து இராணுவ தளபாடங்களை அகற்றும் வேலையைப் புலிகள் ஆரம்பித்துவிட்டனர். 13 வருடகாலப் போரில் என்றுமில்லாதவாறு பல நவீன போரத்தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன. 122 மில்லிமீற்றர் நடுத்தர ஆட்டிலறிப் பீரங்கிகள், தானியங்கித் துப்பாக்கிகள், ரவைகள், மோட்டார்கள், எறிகணைகள், சீருடைகள், தொலைத் தொடர்பு சாதனங்கள், பீரங்கி வண்டிகள் (tanks), கவச வாகனங்கள் என பல கோடி ரூபா பெறுமதியான இராணுவத் தளபாடங்களை புலிகளுடன் இணைந்து அப் பகுதி மக்களும் மிகுந்த உற்சாகத்துடன் இரவிரவாக முகாமில் இருந்து அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். இதே சமயம் முகாமில் இருந்த கட்டிடங்களும், காவலரண்களும் புலிகளால் தகர்த்து நிர்மூலமாக்கப்பட்டன.

இவை இவ்வாறு இருக்க படைத்தளத்திற்கு வெளியே அருகில் அமைந்துள்ள கொக்கிளாய்–நாயாறு, மணலாறு முகாம்களிலிருந்து உதவிக்கு வரமுடியாமலும் தாக்குதல் வியூகத்தை அமைத்திருந்த புலிகள் முகாமோடு சேர்ந்து பரந்திருந்த கடற்பிரதேசத்தையும் கண்காணித்து பெருமளவினாலான போராளிகளை நிறுத்தியிருந்தனர். முன்பு ஆனையிறவு தளம் மீதான தாக்குதலில் நடந்த சம்பவத்தை தெளிவாகப் புரிந்து கொண்ட புலிகள் இம்முறை அவற்றைக் கருத்தில் எடுத்து செயற்பட்டதோடு ஆகாய மார்க்கமான உதவியை தடுக்க விமான எதிர்ப்பு படையணிகளையும் நிறுத்தியிருந்தனர். மேலும் திருகோணமலை கடற்படைத் தளத்தில் இருந்து கடல் வழி உதவியைத் தடுக்க கடற்புலிகள் தயாராகவும் பலமான ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

இந்நிலையிலேயே முல்லைத்தீவு படைத்தளத்தில் தப்பியுள்ளவர்களை மீட்டு மீண்டும் முகாமை நிலைநிறுத்தவென இராணுவ ஹெலிகொப்டர்களில் இருந்து முகாமில் இருந்து 10km தூரத்தில் உள்ள அலம்பில் என்னும் இடத்தில் 300 விசேட அதிரடிப் படையினர் தரையிறக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் உடனடியாவே புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டனர். அத்துடன் மேலும் ஒரு தடவை படையினரை இறக்க முற்பட்ட விமானப்படையின் MI- 17 ரக உலங்கு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது. இத் தாக்குதலால் அதில் இருந்த 37 அதிரடிப்படையினரும் அதன் கொமாண்டரும் விமானத்துடனேயே கொல்லப்பட்டனர். இதன் பின் இறக்கப்பட்ட படையினருக்கு உதவிகள் எதுவும் செய்ய முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டது. இவர்கள் விடுதலைப் புலிகளின் பலத்த மோட்டார்த் தாக்குதலுக்குள்ளானார்கள். அலம்பிலில் இறக்கப்பட்ட படையினருக்கு தலைமை தாங்கி வந்த லெப். கேணல் பஸ்லிலாபீரும் அவருக்கு உதவியாக வந்த மேஜர் ரஞ்சித்தும் கொல்லப்பட்டனர். மேலும் கொழும்பில் இருந்த முல்லைத்தீவு முகாம் பொறுப்பதிகாரியும் இவ்வாறு இறக்கப்பட்டவர்களில் ஒருவராகும். அவரும் தாக்குதலில் காயமடைந்தார். இப்படையணியில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் இறந்தும் போக அரசின் இம் முயற்சி செயலிழந்து போனது. இதே வேளை கடல் மார்க்கமாக படையினரை ஏற்றிக் கொண்டு திருகோணமலையில் இருந்து வந்த "ரணவிரு" என்ற அதிவேக பீரங்கிப் படகு கடற்கரும்புலிகளால் முல்லைக் கடற்பரப்பில் வைத்து மாலை 5.45 மணியளவில் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது. இதில் வந்த கப்பலின் பொறுப்பதிகாரி லெப். கொமாண்டர் பி. சமரவீராவும் இரண்டாவது அதிகாரி லெப். அபயநாயக்காவும் உட்பட 40 படையினர் கொல்லப்பட்டனர். இதையடுத்து இவர்களின் கடல் வழி முயற்சியும் தடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு படைத்தளத்திற்கு வெளியே நடைபெற்ற இரு நாள் சமரில் மட்டும் 100க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். பாதுகாப்பு செலவுக்கென சிங்கள மக்களின் உணவிலும், பொது வசதிகளில் இருந்தும் ஒதுக்கி எடுக்கப்பட்ட பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பல கோடி பெறுமதியான MI-17 ரக உலங்கு வானூர்தியையும், 1996ம் ஆண்டு சீனாவிடம் இருந்து கொள்வனவு செய்த 3 படகுகளில் எஞ்சியிருந்த "ரணவிரு" அதிவேகப் பீரங்கிப் படகையும் சிறீலங்கா அரசு இழந்தது. படைத்தளத்தில் ஆயிரக்கணக்கான இளம் சிங்கள இராணுவத்தை இழந்து மட்டுமல்லாமல் பல கோடி ரூபா பெறுமதியான இராணுவ தளபாடங்களையும் இழந்த அரசு இழப்புக்களை மறைத்து கொல்லப்பட்ட படையினர் மிகச் சொற்பமே என்று பொய்யுரைத்துக் கொண்டிருந்தது. தனது அரசியல் கதிரைக்காகவும், ரத்வத்தைக்கு ஏற்பட்ட தனிப்பட்ட அவமானத்தைப் போக்கவும் மேலும் பல சிங்கள இளம் படை வீரரை கொல்ல தயாராகவே ரத்வத்தையும், சந்திரிகா அரசும் இருந்தது.

20–07–96 அன்று விடுதலைப்புலிகள் 800 படையினரின் உடல்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அரசுக்கு ஒப்படைக்கத் தயாராக உள்ளதாக அறிவித்தனர். இதே சமயம் செஞ்சிலுவைச் சங்கமும் அன்று நண்பகல் விடுத்த அறிக்கையில் இது பற்றி புலிகளுடனும் அரசுடனும் தாம் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறினர். இது பற்றி அமைச்சர் ரத்வத்தை கூறும் போது "புலிகள் ஜோக் அடிக்கிறார்கள்" என்று அவர் பெரும் ஜோக் ஒன்றை விடுத்தார். 23–07–96 அன்று 1208 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் தமது தரப்பில் 241 போராளிகள் வீரச்சாவைத் தழுவியதாகவும் விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்திருந்தனர். இம் முகாம் தாக்குதலின் போது ஏற்பட்ட குண்டு வெடிப்புக்களாலும், ஷெல் வீச்சுக்களாலும், கட்டிட

மறுபக்கம் பார்க்க.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முல்லைத்தீவு...

இடிபாடுகளுக்குள்ளும் சிதைவடைந்து போன இராணுவத்தின் சடலங்களைத் தவிர உருக்குலைந்திருந்த 441 படையினரின் சடலங்கள் கிளிநொச்சியில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் அரசியல் துறைப் பொறுப்பாளரால் கையளிக்கப்பட்டது. இச்சடலங்களில் 56 சடலங்களைத் தவிர ஏனையவை பழுதடைந்து அழுகும் நிலைக்கு சென்று விட்டதால் அவற்றைக் கிளிநொச்சி அரச அதிபர் முன்னிலையில் தகனம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனைய 56 சடலங்களை மட்டுமே செ.சி.ச வவுனியா எடுத்துச் சென்று இராணுவத்திடம் கையளித்தது. இராணுவம் அவற்றில் 10 சடலங்களை மட்டுமே தெரிந்தெடுத்து பொறுப்பேற்றுக் கொண்டது. மிகுதியினை செ.சி.ச பொறுப்பிலேயே வவுனியாவில் தகனம் செய்ய படையினர் விட்டுவிட்டனர்.

1995ம் ஆண்டு மணலாறு (வெலிஓயா) பகுதியில் ஏற்பட்ட மோதலின் போது பல பெண் போராளிகளின் உடல்களைக் கைப்பற்றிய இராணுவம் சடலங்களில் இருந்த போராளிகளின் உடைகளைக் கிழித்தும், நிர்வாணமாகவும் வைத்ததுடன் சிங்கள மக்களுக்குக் காட்டியும் மகிழ்ந்தனர். பத்திரிகையாளரை அழைத்து படமெடுக்கவும் செய்தனர். பின்னர் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கும் போது அவ் உடல்களில் அசிட் வீசியும், கத்தியால் குத்தியும் மிகவும் கேவலமான முறையில் புலிகளிடம் ஒப்படைத்தனர். இருப்பினும் புலிகள் தமது போராளிகளை பொறுப்பேற்று உரிய மரியாதையுடன் அவ் வீராங்கனைகளின் உடல்களை மண்ணில் விதைத்தனர். இதற்குப் பதிலடியாக இப்படைத்தளத் தாக்குதலில் பெருமளவிலான பெண் போராளிகள் பங்குபற்றியதுடன் வெற்றிகரமாகத் தாக்கியும் அழித்தனர். அத்துடன் ஒரு பெண் போராளியாலேயே சிங்கள இராணுவத்தின் உடல்கள் ஒழுங்கான முறையில் செ.சி.சங்கம். மூலம் இராணுவத்திற்கு வழங்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் ஏழ்மையின் நிமித்தம் இராணுவத்தில் இணைந்த சிங்கள இளைஞர்களின் உயிரிலோ எவ்வித அக்கறையும் கொண்டிராத அரசும், வழிநடத்தும் அமைச்சரும் இராணுவ உயரதிகாரிகளும் பதவிகளுக்குப் பாதிப்பு வந்துவிடும் என்ற காரணத்தினால் அவற்றைப் பொறுப்பேற்க மறுத்துவிட்டனர்.

தமது குடும்பத்தில் நிலவும் ஏழ்மையைப் போக்க இராணுவத்தில் இணைந்த புதல்வர்களினதும், கணவர்களினதும் உடல்கள் கூட அவ் உறவினர்களுக்கு கொடுக்கபடாமல் அந்நிய நாட்டைச் சேர்ந்த தொண்டர் நிறுவனமான செ.சி.ச ஆல் அநாதரவான முறையில் தகனம் செய்யப்பட்டன. தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என அறிய உறவினர்கள் பல இடங்களாக அலைகின்றனர். இது மட்டுமல்லாமல் தனது வறட்டுக் கௌரவத்தைப் பாதுகாக்கடி இன்னும் ஏழைச் சிங்கள இளைஞர்களைப் பலிகொடுக்கும் திட்டத்தை ரத்வத்தை மிகவும் அகங்காரமான தொனியில் வெளியிட்டதுடன் அதை செயற்படுத்தவும் தொடங்கினார்.

24-07-96 அன்று படைத்தளத்திற்கு 3 அல்லது 4 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள சிலாவத்தை என்னும் இடத்தில் 300 படையினர் வழியாகத் தரையிறக்கப்பட்டனர். இவர்களும் விடுதலைப் புலிகளின் கடும் முற்றுகைக்குள்ளானார்கள். இங்கு தரையிறக்கவென படையினரைக் கொண்டு வந்த தரையிறங்கு கப்பல் கரையை அண்மித்ததும் முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட 122 மில்லிமீற்றர் நடுத்தர ஆட்டிலறிகளால் மிகக் கடுமையாகப் புலிகள் தாக்க ஆரம்பித்தனர். இதன் போது படையினர் வந்து இறங்கிய அந்த இடத்திலேயே 30க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட பலர் படுகாயம் அடைந்தனர். கடற்படையின் தரையிறக்கக் கப்பல் சேதத்திற்குள்ளானது. மேலும் உதவிக்கு தரையிறக்க முற்பட்ட வேறு இரண்டு உலங்கு வானூர்திகள் சேதத்திற்கு உள்ளானது. இந்நிலையில் பத்திரிகையாளர் முன் தோன்றிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் எப்படியும் இராணுவ முகாமை மீளக் கைப்பற்றுவோம் என்று சூழுரைத்தார். ஆனால் இவர்களை முன்னேற விடாதபடி புலிகள் மிகக் கடுமையான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதுடன் பலமான தமது முற்றுகையை மேலும் இறுக்கினார்கள். கனரக ஆயுதங்கள் கொண்டு தரையிறக்கப்பட்ட சுமார் 2000 படையினர் மீதும் பலத்த தாக்குதலை புலிகள் மேற்கொண்டனர். தரையிறக்கப்பட்ட இராணுவத்தினர் தம் மீது ஊடுருவி புலிகள் தாக்காமல் தற்காப்பிலேயே மிகக் கூடுதலான கவனத்தை செலுத்தினர். இதிலும் பல படையினர் கொல்லப்பட்டனர். இந்நிலையில் ரத்வத்தையும் பாதுகாப்பு அமைச்சும் தமது படைகள் முகாமை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக கூறினர். பின்பு இதன் உச்சமாக தமது படைகள் முகாமை சென்றடைந்துவிட்டதாகவும் தற்போது முகாமில் உள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகளை சுத்தப்படுத்துவதாகவும் உலகில் எந்தவொரு அமைச்சரும், பாதுகாப்புத்துறையும் கூறாத அளவுக்கு வாய் கூசாமல் பொய் கூறினார்கள். ஆனால் எவ்வித மான காப்பரண்களோ மேலதிக உதவியுமோ இன்றி தமது உயிரைப் பாதுகாக்கவே தரையிறக்கப்பட்ட படையினர் போரிடவேண்டி இருந்தது. முல்லைத்தீவு படைத்தளத்தை மீட்கச் சென்ற படைகளை மீட்க வேண்டிய நிலை சிறீலங்கா அரசின் பாதுகாப்புத்துறைக்கு ஏற்பட்டது. பத்திரிகைத் தணிக்கை முறையை பலமாக அமுல்படுத்திய அரசு பத்திரிகைத் துறைக்கு செய்திகளை மறைத்ததோடு, வடபகுதிக்குள் எந்தச் செய்தியாளரையும் செல்ல அனுமதி மறுத்து தான் விரும்பியவாறு தகவல்களைக் கூறிக்கொண்டிருந்தது. இவையெல்லாம் சிங்கள மக்களையும், எதிர்க்கட்சியினரையும், வெளிநாட்டு இராஜதந்திரிகளையும், உலகையும் ஏமாற்றவேயாகும். சிங்கள மக்களும், எதிர்க்கட்சியினரும் தமது நாட்டில் நடக்கும் சம்பவங்களையே தமது செய்தி நிறுவனங்களால் அறிய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர். பி.பி.சி., சி.என்.என். போன்ற சர்வதேச செய்தி நிறுவனங்களின் செய்திகளாலேயே ஓரளவு நிலைமையை அறியக்கூடியதாக இருந்தது. ஒலி—ஒளி சமிக்கைகளை அரசு பரப்பி இவற்றையும் யாரும் பார்க்கமுடியாமல் குழப்ப முயற்சி செய்தது.

மக்கள் மனதை வெல்லவும், ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்கவும், ஆட்சியில் அமரவும் சந்திரிகா அரசு தேர்தல் விஞ்ஞாபனத்திலும், கூட்டங்களிலும் கூறிய பத்திரிகைச் சுதந்திரமானது இன்று மிகக் கடுமையாக நசுக்கப்பட்டு வருகிறது. அதன் மேல் இன்னும் பல தடைகளை அமுல்படுத்தி வருகின்றது. இலங்கைப் பத்திரிகையில் தணிக்கை என்ற சொல்லின் எண்ணிக்கையை வைத்தே தாக்குதலின் அகோரம் எவ்வளவு என்பதை ஊகிக்கலாம் என்று சில வெளிநாட்டுப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. சமாதானத்திற்கான யுத்தம் என தனது இனவாத இனப்படுகொலைப் போருக்கு மறைப்புப் போர்வை போர்த்து மூன்றாம் கட்ட ஈழப்போரை ஆரம்பித்த அரசு முல்லைத்தீவில் மீட்க வந்த படையினரை மீட்க "சத்ஜய" என்ற படை நகர்வொன்றை கிளிநொச்சி மீது மேற்கொள்ள ஆரம்பித்தது. தமிழ் மக்களுக்கு நிம்மதியான முடிவை தரவென உலகை ஏமாற்றி போரை நடத்தும் அரசு மீண்டும் மக்கள் குடியிருப்பு மீது அகோர எறிகணை வீச்சையும் விமானக் குண்டுத் தாக்குதலையும் மேற்கொள்கின்றது. பாடசாலைகள், வைத்தியசாலைகள் என எல்லா இடமும் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இவ்வாறு தாக்குதல் நடத்தியவாறு படை நகர்வை மேற்கொண்ட இராணுவத்தின் மீது கடுமையான எதிர்த் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். ஆனையிறவு படைத்தளத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்த பரந்தன் என்னும் சிறு நகரை இராணுவம் ஆக்கிரமித்தது.

இதேவேளை முல்லைத்தீவில் கடுமையான முற்றுகைக்குள் சிக்குண்ட 2,000 இராணுவத்தினர் மீதும் அன்று மாலை விடுதலைப் புலிகள் கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்க ஆரம்பித்தனர். இதன்போது 100க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட இறந்த இராணுவத்தின் சடலங்களையும் பல நூற்றுக் கணக்கான தானியங்கித் துப்பாக்கிகளையும் கைவிட்டுவிட்டு இராணுவம் கடல் வழியாகவே தரையிறங்கு கப்பல்கள் மூலம் தப்பியோடியது. இத்தாக்குதலின்போது விமானப் படையினரின் கிபிர் விமானம் வீசிய குண்டு இராணுவப் பகுதிக்குள் விழுந்து வெடித்து 80 படையினர் கொல்லப்பட 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்த சம்பவத்தை அரசு மூடி மறைத்துவிட்டது. இதன்போது இராணுவத்தின் பொறுப்பான அதிகாரியும் காயம் அடைந்துள்ளார். இதன் பின்பு முல்லைத்தீவு முகாமில் சிறு தொகை இராணுவமே மிஞ்சியிருந்தனர் எனவும் அவர்களை மீட்டுக்கொண்டு படையினர் முகாமை விட்டு வெளியேறிவிட்டனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு செய்தி வெளியிட்டது.

சமாதானத்திற்கான போர் என அறிவித்து பல நாடுகளிடம் பணத்தையும், இராணுவ உதவிகளையும் பெற்று, ஆயுதங்களையும் கொள்வனவு செய்த அரசு இன்று தமிழ் தாயகத்தில் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளைச் செய்வதோடு, அகோரமான விமானக் குண்டு வீச்சுக்களையும் எறிகணைத் தாக்குதல்களையும் செய்து வருகின்றது. தமிழர்களின் சொத்துக்களும் உயிர்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலான யாழ் குடாநாட்டு மக்கள் இடம்பெயர்ந்து செறிவாக வன்னியின் கிளிநொச்சிப் பகுதியில் வாழ்ந்தனர். தற்போது கடந்த ஒரு வார காலமாக சிறிலங்கா இராணுவம் இப்பகுதி மீது கண்மூடித்தனமான முறையில் தமிழர்களின் வாழ்விடங்கள் மீதும் வைத்தியசாலை மீதும் எறிகணைத் தாக்குதல்களையும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களையும் நிகழ்த்தி வருகின்றது. பல இலட்சம் மக்கள் இப்பிரதேசங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இதுதான் சந்திரிகா அரசின் சமாதானத்திற்கான போரா? இப்படியான கொடுமைகளை இழைக்கும் அரசுடனும், சிங்கள இராணுவத்துடனும் தமிழ் மக்கள் சமாதானமாக வாழ முடியுமா? ஆனால் இன்னும் பல நாடுகள் சந்திரிகா அரசுக்கு பண ரீதியிலும், இராணுவ தளபாட ரீதியிலும், இராணுவ பயிற்சி ரீதியிலும் வழங்குவதே இதில் மிகவும் வேதனைக்குரிய ஒன்றாக உள்ளது. இந்நடவடிக்கைகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் வெல்லும் நோக்கத்துடனான செயற்பாடாகவே அமையும். தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் நுட்பமான முறையில் திட்டமிடப்பட்டு வழிநடத்தப்பட்ட முல்லைப் படைத்தளத் தாக்குதலில் பூநகரியில் கைப்பற்றப்பட்ட டாங்கியும் பயன்படுத்தப்பட்டது. இதுபோல் இம்முகாம் தாக்குதலிலும் 3க்கும் மேற்பட்ட டாங்கிகளையும், கவச வாகனங்களையும், ஆட்டிலறிகளையும் கைப்பற்றி இருக்கும் புலிகள் இவற்றை வெறும் பார்வைக்கு வைத்திருக்க மாட்டார்கள் என்பது மட்டும் உண்மை. கிளிநொச்சி மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள் குறித்து உத்தியோக பூர்வமாக அறிவித்திருந்த புலிகள் "சிறிலங்கா இராணுவம் மரபு வழியில் தம்மை எதிர்கொள்வதை விடுத்து மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தும் தாக்குதல்கள் முல்லைத்தீவு போன்று இன்னும் பல படைத்தளங்களை இழக்க வழி செய்யும்" என்று அரசை எச்சரித்துள்ளார்கள். யாழ் குடாநாட்டில் அரைவாசிக்கும் குறைவான மக்களை வளைத்துப் பிடித்த சந்திரிகா அரசு போரினால் ஏற்பட்ட பணச் சுமையை நீக்க யாழ் அபிவிருத்தி என்ற போர்வையில் வெளிநாட்டு உதவிகளை பெற முயல்கின்றது. புலிகளின் பலம் அரைவாசிக்குக் குறைக்கப்பட்டுவிட்டது என்றும் அவர்களின் முதுகெலும்பு உடைந்துவிட்டது என்றும் புதுவருடத்துக்குள் முற்றாக ஒழித்துவிடுவோம் என்றும் புகழ்ச்சிகரமான பொய்களை அரசு கூறிவந்ததை இத்தாக்குதல் உடைத்துவிட்டது என்றே கூறலாம். தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் நுட்பமான திட்டமிடலுக்கும் ஆளுமைக்கும் புலிகள் வெல்லப்பட முடியாதவர்கள் என்பதற்கும் சான்று கூறும் வகையாக இத்தாக்குதல் அமைந்து விட்டது. 19ஆம் திகதி அதிகாலையில் ஆரம்பமாகி 27ஆம் திகதி வரையான பெருஞ்சமரில் முகாமினுள் இருந்த இராணுவம், தரையிறக்கப்பட்ட படையினர் என சுமார் 1200 அளவிலான படையினரை அரசு இழந்துவிட்டது MI-17 ரக உலங்கு வானூர்தி, "ரணவிரு" பீரங்கிப் படகு போன்றவற்றையும் பல கோடி பெறுமதியான ஆயுதங்களையும் இழந்துள்ளது. விடுதலைப் புலிகளின் தரப்பில் இவ் 8 நாள் போரிலும் சகல படையணிகளையும் சேர்ந்த 279 போராளிகள் வீரச்சாவைத் தழுவியுள்ளதாக அறிவித்துள்ளனர். "தமது எதிரியே தமக்கு வேண்டிய ஆயுதங்களைத் தருவான்" என்ற கொரில்லாப் போர்த் தந்திரோபாயத்தையும் விடுதலைப் புலிகளின் "ஓயாத அலைகள்" நடவடிக்கை உலகின் முன் நிரூபித்துவிட்டது. ●

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

என்று சமாதானம் கூறி அனுப்பினார். (பின்னர் ஆசிரியர் ரமேஸ்வரனின் குடும்பம் தப்பி ஓடி வந்ததும், 15 ஆம் திகதி குறிப்பிட்ட முகூர்த்தத்தில் கட்டுவனில் திருமணம் நடந்ததெல்லாம் தனிக் கதை).

இப்படியெல்லாம் அதிகாரிகள் சொல்லிக் கொண்டாலும், இதே நோக்கத்தோடு அலையும் சிப்பாய்களின் பிடியில் பொதுமக்கள் சிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காது என்பதற்கும், அப்படி அவர்கள் நடந்த கொள்ள மாட்டார்கள் என்பதற்கும் என்ன உத்தரவாதம்?

பொதுமக்கள் தங்கள் பிடிக்குள் இருக்கவேண்டும் என்று இராணுவம் விரும்புவது, பொதுமக்களைக் காப்பாற்றுவதற்காக அல்ல: பொது மக்களை வைத்துத் தாம் தப்பித்துக் கொள்வதற்காகவே. மூளாய் பிள்ளையார் கோவிலில் இருந்தவர்களைப் பொன்னாலைச் சந்தியில் உட்காரவைத்து, புலிகளின் தாக்குதலால் தங்களில் ஒருவருக்காவது சேதம் ஏற்பட்டால் அங்குள்ளவர்கள் எல்லோரையும் சுட்டுக்கொன்றுவிடப்போவதாகப் பணயம் வைத்த சம்பவமும், அப்படிப் பணயம் வைத்துத் தாம் தப்பியோடிய பின்னர், காரைநகரில் இருந்து பொன்னாலைச் சந்திக்கு எறிகணைத்தாக்குதல் செய்ததும், இராணுவத்தின் நன்றிகெட்ட செயலுக்கு ஒரு உதாரணம் மட்டுமன்று, புலிகளிடமிருந்து இவர்கள் தமிழர்களைப் பாதுகாக்க வரவில்லை என்பதற்கும் ஒரு சான்றாகும்.

பேராயர் ஜெபநேசனுடன் சந்திரிகா பேசியபோது, "விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருப்பதற்கு ஏன் தமிழர்கள் விரும்புகிறார்கள் இல்லை?" என்று வினாவியதற்கு, இராணுவத்தின் இந்த நடவடிக்கைகளே தகுந்த பதில்களுமாகும்.




# வீழ்ந்தன

பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனுக்கு அரைமணிநேரம் பேட்டிகொடுத்த ஜனாதிபதி, கொலைவிழுந்த சென். பீற்றேர்ஸ் கோவிலின் குருவும் இன்னொரு குருவும் தம்மைச் சந்தித்து முறைப்பாட்டை நேரடியாகக் கையளிக்கச் சென்றபோது, அவர்களைச் சந்திக்க மறுத்தது ஏன்? நடந்த உண்மைச் சம்பவங்களை அறிவதில் அக்கறை உள்ளவரானால் அவர்களையல்லவா முதலில் சந்தித்திருக்க வேண்டும்? அதை விடுத்து யாழ்ப்பாண ஆயரிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறி உலகத்தை ஏமாற்ற முயன்றார்!

09–08–95இல், நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தில் நடைபெற்ற முதலாவது நினைவு அஞ்சலிக்கூட்டத்தில் உரை நிகழ்த்தியபோது, யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம்:

"இந்த இடத்தில் எத்தனை மக்கள் இறந்தார்கள் என்று அறிவித்தேன்:

அவர்கள் ஆலயம் உடைந்ததா என்று கேட்கின்றார்கள்.

நான் எத்தனை குழந்தைகள், எத்தனை மாணவர்கள், பெண்கள் இறந்தார்கள் என அறிவித்தேன்–

இவர்கள் ஆலயத்தில் எத்தனை ஓடுகள் உடைந்தன என்று கேட்கின்றார்கள்" என வேதனையோடு விளம்பினார். அவரது இந்த உரையானது–

சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் உயிர்களை விட ஓடுகளையே பெறுமதியாகக் கருதுகிறது என்பதை அம்பலப்படுத்துகிறது!

புனித பேதுருவானவரின் ஆலயத்தை இடித்துப் புதுக்கட்டிடம் கட்டிக்கொடுத்தால் கூட கோவிலுக்குள்ளும், 'போர்டிக்கோவிலும், வராந்தாவிலும், ஆலயவளவிலும், கோவில் வாசலிலுமாக குண்டுவீச்சுக்குப் பலியான சுமார் 60உயிர்களுக்கு ஈடாகுமா....? அல்லது சிறிலங்கா அரசு செய்துவிட்ட இந்தப் படுகொலைகளுக்குப் பிராயச்சித்தம் செய்ததாகிவிடுமா?

ஒன்றுமட்டும் உண்மை. ஒரு காலத்தில் தமிழரோடு, ஒரு தாய், சகோதரங்கள் போல வாழ்ந்த சிங்கள மக்களில் பெரும்பான்மையானோர், இனவாதங்கொண்டு தமிழின விரோதிகளாக மாறியிருக்கின்றார்கள் என்பதைவிட – பௌத்த மதபீடங்களாலும், சுயநலம்பிடித்த சிங்கள அரசியல்வாதிகளாலும், அப்படி மாற்றப்பட்டுள்ளார்கள் என்பதுவே அது.

மனிதநேயம் மிக்க சிங்களக் குரல்கள் ஒன்றிரண்டு, தமிழருக்காக ஒலித்துக்கொண்டிருப்பதைக் கேட்கக்கூடியதாகவுமுள்ளது. அதற்கு எடுத்துக்காட்டாக, 'யாழ். மறை மாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு' அண்மையில் வெளியிட்ட 'தரிசன பூமி' இதழில் வெளியான செய்தி ஒன்றைக் கூறலாம்.

(சிங்கள அரசின்) "தேசிய பாதுகாப்புநிதி எதற்கு? என ஒரு போதிய தெளிவில்லாத சூழ்நிலையில் நிதி உதவி வழங்கப்பட்டது உண்மைதான். ஆனால் தற்பொழுது நடைபெற்ற ஒரு சம்பவத்தையும் வாசகர்களுக்குச் சுட்டிக்காட்ட விழைகின்றோம்.



அண்மையில் நவாலியில் நடந்த பயங்கரத்தை அறிந்த மாத்தளை, நாகொடபங்கு மக்கள் (முற்று முழுதாகச் சிங்கள இனத்தவர்கள்) பாதுகாப்பு நிதிக்கு நிதிவழங்க மறுத்து, நவாலியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஒரு தொகைப் பணத்தை அனுப்பி வைத்துள்ளனர்".

இந்தச் சிங்களக் கத்தோலிக்க மக்களின் இந்த நற்செயல் இன, மொழி, மத பேதம் கடந்த நிலையில் செய்யப்பட்டதா? அல்லது நவாலியில் கத்தோலிக்கத் தேவாலயத்தில் நடந்த அனர்த்தம் என்ற மத உணர்வின் தூண்டுதலால் செய்யப்பட்டதா என்ற கேள்விகள் எழுந்தாலுங்கூட, அவர்கள்தம் மனிதநேயச்செயலை நன்றியோட நினைப்போம். இருந்தாலுங்கூட, இத்தகைய நலன்விரும்பிகளின் குரல், பௌத்த சிங்கள ஆதிக்க வெறிக்கூச்சலின் முன்னால், வெறும் சலசலப்புக்கள் மட்டுமே தவிர, தமிழினத்திற்கு விடிவைப் பெற்றுத்தரப்போவதில்லை. ஏனெனில், சிங்களக் கத்தோலிக்கத் தலைமைப்பீடங்களிலுள்ள சிலரிடம், இன்னும் மத உணர்வையும் விஞ்சிய சிங்கள ஆதிக்க உணர்வு புரையோடிப் போயிருக்கிறது உண்மை என்பது மட்டுமல்ல, இல்லங்கள்தோறும் சென்று பாதுகாப்பு நிதி சேகரிப்பதில் சிங்களக் கத்தோலிக்கக் குருமாரும் ஆர்வம் காட்டிக்கொண்டிருப்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

1987இல், "அரசின் பொருளாதாரத்தடையால் யாழ்ப்பாணத்தில் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குகின்றார்கள்" என்று கூறிக்கொண்டு, 'ஒப்பறேசன் பூமாலை' மூலம் உணவுப்பொட்டலம் போட்ட இந்தியாவின் செயலில், சுய இலாபமே குறிக்கோளாக இருந்தது என்பது உலகறிந்த உண்மை. ஆனால், பட்டினிச்சாவை எதிர்நோக்கி நின்ற மக்களுக்கே உணவுப்பொட்டலத்தைப் போட்டனர் என்பதை மறந்து– அதை எதிர்த்துச் சிங்களக் கத்தோலிக்கக் குருக்களும், கன்னியரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்திய "கண்கொள்ளாக் காட்சிகளை" தொலைக்காட்சியில் கண்டு பொருமிய தமிழர்கள், அதை இன்னும் மறந்துவிடவில்லை. இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் இந்திய ஆதிக்கத்துக் எதிரானது என்று, இன்று யாரும் காரணம் கூற முற்படுவார்களாயின், அதனைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. ஏனெனில் தமிழர்களை நசுக்குவதற்கு ஜே.ஆர் இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு எதிராக, இவர்கள் எந்த ஆர்ப்பாட்டமும் செய்யவில்லை. இந்தியா தமிழ் மக்களை மிருகத்தனமாகக் கொன்றொழித்தபோதும்கூட, இவர்கள் ஏனென்று கேட்கவில்லை. ஏன்?

தொடர்ச்சி 18ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் ஏழு

(தொடர்ச்சி)

புரூஸ் சுதர்லாண்ட் திரும்பவும் அவளைச் சந்திக்கவில்லை. ஆனால், அவளைப்பற்றி நினைப்பதை நிறுத்தவு மில்லை. சில வேளை இங்குதான் எல்லாப்பிரச்சினைகளும் தொடங்கியிருக்க வேண்டும்.

சைரனுடைய சத்தம் இப்போ மிகவும் குறைந்திருந்தது. வாகனத் தொடர் காராஓலொஸ்ஸை நெருங்கியிருக்க வேண்டும். சுதர்லாண்ட் நினைத்துக் கொண்டார். சைரன்களின் ஓசை நின்றுவிட்டால் அவர் தூங்கப்போகலாம். இன்னும் நாலைந்து வருடங்களில் வரப்போகும், சேவையிலிருந்து ஓய்வு பெறுவதைப்பற்றி சிந்திக்கத் தொடங்கினார். சுதர்லாண்ட் மேட்டு நிலங்களில் உள்ள பரம்பரை வீடு தேவைக்கதிகமான அளவு பெரிதானது. கிராமப் புறத்தில் ஒரு சிறிய வீடு இருந்தால் நல்லது. கூடிய விரைவில் இருவேட்டைப் பொருட்களின் தொகுதியையும் பெற்று, நூலகத்திற்குப் புத்தகங்களையும் சேர்க்க வேண்டும். லண்டனில் நான் சேரக்கூடியதான பொழுதுபோக்குக் கிளப் ஒன்றையும் தேர்ந்தெடுக்க வேண்டிய நேரம் வந்துவிடும். அல்பேர்ட்டும், மாத்தாவும் அவரது பேரப்பிள்ளைகளும் ஓய்வுபெற்ற பின் வாழ்க்கையில் ஆறுதலைத் தருவார்கள். சிலவேளை, துணைக்கு ஒருத்தியையும் தேர்ந்தெடுக்கக்கூடும்.

கிட்டத்தட்ட முப்பதுவருட மண வாழ்வின் பின், நெடி இல்லாமல் ஓய்வு வாழ்க்கைக்குள் செல்லப்போவது என்னவோ போலிருந்தது. அவள் இந்த நீண்ட காலத்துள் அமைதியான வளாகவும், கூச்சமுள்ளவளாகவும், கௌரவத்துக்குரியவளாகவும் வாழ்ந்தாள். அவள் மரினாவுடனான தனது தொடர்பை எவ்வளவு பெருந்தன்மையோடு பொறுத்துக்கொண்டாள். திடீரென ஒருவருக்கே உரிமையாய் இருப்பதை விடுத்து, மீதமிருந்த தனது வாழ்க்கையின் பயனை அனுபவிக்கச்சிறகடித்துப் பறந்துவிட்டாள். அவள் தன்னிலும் பத்து வயது இளையவனான பொகிமியாக்காரன் ஒருவனுடன் பாரிசிற்கு ஓடிப்போனாள். எல்லோரும் புரூசுக்காக அனுதாபப்பட்டார்கள். ஆயினும் அது அவருக்கு அவ்வளவு தேவையாயிருக்கவில்லை. நெடியோடு எந்தவித தொடர்போ அல்லது அவளுக்காக எந்தவித உணர்வோ பல வருடங்களாக இருக்கவில்லை. தனக்கு விருப்பமான வழியில் நடந்துகொள்ளலாம். அதைச் சகித்துக்கொள்ளும் தன்மையைக் கொண்டிருந்தார். பின்னொரு நாளில் அவளைத் திரும்பவும் சேர்த்துக்கொள்ளக் கூடும். அல்லது அவளிடத்திற்கு வேறொருத்தியை எடுத்துக்கொள்வது நன்றாயிருக்கும்.

கடைசியாகச் சைரன்கள் ஓய்ந்தன. அலை கரைமோதி உடையும் ஸ்...ஸ்...ஸ் என்ற சத்தத்தைத் தவிர, அறையில் பூரணமான அமைதி நிலவியது. புரூஸ் சுதர்லாண்ட் யன்னலைத் திறந்து கார்த்திகையின் இதமற்ற குளிர் காற்றை உள்ளிழுத்தார். அவர் குளியலறைக்குச் சென்று, கை கால் முகம் கழுவிய பின், நான்கு பொய்ப்பற்களையும் கழற்றி, அதற்கான கரைசலிலிட்டு வைத்தார். இந்த நான்கு பற்களையும் இழந்தது வெட்கக்கேடான விடயம் என்று அவர் நினைத்தார். கடந்த முப்பது வருடகாலமாக இப்படித்தான் சொல்லி வருகிறார். ஒரு ரக்பி உதைபந்தாட்டப் போட்டியில்தான் அவை உடைந்தன. மற்றப் பற்கள் உறுதியாயிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவற்றைப் பார்த்துக்கொண்டார்.

"எமது கணக்கெடுப்புகள், முகாம் இலக்கம் ஒன்றில் நாம் உட்சென்றபோது, அங்குமிங்குமாக வீசப்பட்டிருந்த கிட்டத்தட்ட 15,000 சடலங்கள் உட்பட, 30,000 பேர் கொல்லப்பட்டிருப்பதைக் காட்டின. 28,000 பெண்களும், 12,000ஆண்களும் அப்போது உயிரோடிருந்தனர்.

மருந்துகள் இருக்கும் அலமாரியைத் திறந்து, மருந்துகளை வைத்திருந்த போத்தல் வரிசைகளைப் பார்வையிட்டார். நித்திரைக்கான தூள் இருந்த தகரடப்பாவிலிருந்து, இரு வேளைக்களவான தூளைக் கரைத்துக் கொண்டார். இந்த நாட்களில் நித்திரை செய்வது மிகக் கடினமாயிருக்கிறது.

அவர் மருந்தைக் குடிக்கத் தொடங்கியதும் அவரது இதயம் வேகமாக அடித்துக் கொள்ளத் தொடங்கியது. அவருக்கு, கடந்த பயங்கர இரவுகளில் ஒன்றுபோல் இதுவும் இருக்கப்போவது தெரிந்தது. இந்த எண்ணம் மனத்துள் வேரூன்றுவதைத் தடுத்துவிட அல்லது அதன் தாக்கத்தைக் குறைத்துவிட அவர் கடுமையாகக் முயன்றார். அவர் படுக்கையில் படுத்து, போர்வையால் மூடிக்கொண்டார். நித்திரை வெகு விரைவில் வரவேண்டும் என எதிர்பார்த்தபடி கிடந்தார். ஆயினும், நினைவலைகள் ஏற்கனவே அவரை வட்டமிடத் தொடங்கிவிட்டன.

பேர்கன் - பெல்சன் - பேர்கன் - பெல்சன் - பேர்கன்........... நூரம்பேர்க்......நூரம்பேர்க்......... நூரம்பேர்க்.........

"சாட்சிக் கூண்டிலேறி உமது பெயரைக்கூறவும்"

"புரூஸ் சுதர்லாண்ட், பிரிகேடியர் ஜெனரல், தளபதி........"

"உம்முடைய சொந்த வார்த்தைகளில் விபரிக்கவும்........"

"என் கீழிருந்த துருப்புக்கள் பேர்கன் - பெல்சன் முகாமினுள் சித்திரை 15ஆம் திகதி சரியாக ஆறு இருபதிற்குப் பேர்கன் -பெல்சனுக்குள் பிரவேசித்தன."

"உமது சொந்த வார்த்தைகளில் விபரிக்கவும்"

"முகாம் இலக்கம் ஒன்று, ஒரு மைல் நீளமும் 400 யார் அகலமும் கொண்ட பிரதேசத்தை உள்ளடக்கியிருந்தது. இதற்குள் எண்பதினாயிரம் ஆட்கள் இருந்தார்கள். அதிகமாக கங்கேரி, போலந்து நாட்டு யூதர்கள்........"

"உமது சொந்த வார்த்தைகளில் விபரிக்கவும்"

"முகாம் இலக்கம் ஒன்றின் வாரப் பங்கீட்டளவு, பத்தாயிரம் பாண்களாகும்".

"அடையாளம் கண்டீரா?........"

"விபரிக்கவும்........"

"எமது கணக்கெடுப்புகள், முகாம் இலக்கம் ஒன்றில் நாம் உட்சென்றபோது, அங்குமிங்குமாக வீசப்பட்டிருந்த கிட்டத்தட்ட 15,000 சடலங்கள் உட்பட, 30,000 பேர் கொல்லப்பட்டிருப்பதைக் காட்டின. 28,000 பெண்களும், 12,000ஆண்களும் அப்போது உயிரோடிருந்தனர்.

"விபரிக்க........"

"நாங்கள் எவ்வளவு முயற்சித்தும், தப்பியிருந்தவர்களில் நோய்வாய்ப்பட்டும், தேகபலம் குன்றியும் காணப்பட்டவர்களில் 13,000 பேர் நாங்கள் சென்று சில நாட்களில் மடிந்தனர்."

"........விபரிக்க........"

முகாமின் நிலைமைகள் படுமோசமாக இருந்தன. நாங்கள் சென்றபோது உயிரோடிருந்தவர்கள்.......... சடலங்களின் தசைகளை உண்பதைக் கண்டோம்!

புரூஸ் சுதர்லாண்ட், நூரம்பேர்க் போர்க் குற்றங்கள் விசாரணையில் தனது சாட்சியத்தை முடித்துக்கொண்ட கையோடு, இங்கிலாந்துக்கு உடனடியாகத் திரும்பிவரும்படி தந்தியொன்று கிடைத்தது. அவருடைய பழைய நண்பரும், அன்புள்ளவருமான, யுத்த காரியாலயத்தில் (War Office) சேவை செய்பவருமான ஜெனரல் சேர். கிளரன்ஸ் ரெவர் பிறவுணிடமிருந்து கிடைத்திருந்தது. அப்போதே இது ஒரு அசாதாரண விடயம் என சுதர்லாண்ட் உணர்ந்து கொண்டார்.

அவர், லண்டனுக்கு அடுத்த நாளே பறந்து சென்றார். வெள்ளை மண்டபத்தையும் (White Hall) ஸ்கொட்லண்ட் யார்டையும் (Scotland yard) உள்ளடக்கியிருந்த இடத்தில் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்த கவர்ச்சியற்ற பாரிய கட்டிடத்தில் அமைந்திருந்த பிரித்தானிய போர் காரியாலயத்தில் சமுகம் கொடுத்தார்.

"புரூஸ் புரூஸ் உள்ளே வாரும். உள்ளே வாரும். உம்மைக் காண்பது மனதுக்கு இதமாயிருக்கிறது. நூரம்பேர்க் விசாரணையில் உமது சாட்சியத்தை நான் தொடர்ந்து அவதானித்தேன். அது ஒரு கொடுமையான விடயம்.

"அது முடிந்தது பற்றி எனக்கு நிறைய மகிழ்ச்சி" என்றார் சுதர்லாண்ட்.

"உன்னைப்பற்றியும், நெடியைப் பற்றியும் கேள்விப்பட்ட விடயங்களையிட்டு மனம் வருந்துகிறேன். உங்கள் பிரச்சினையைத் தீர்க்க நான் ஏதாவது செய்ய முடியுமா?......"

சுதர்லாண்ட் மறுத்துத் தலையை ஆட்டினார்.

கடைசியாக ரெவர் பிறவுண் அவசரமாக அவரை லண்டனுக்கு வரச்சொன்னதன் காரணத்துக்கு வந்தார்.

"புரூஸ் உன்னை இங்கு அழைத்ததற்குக் காரணம், ஒரு அவதானமாகக் கையாள வேண்டிய பணியொன்று தலைதூக்கியுள்ளது" என்று தொடர்ந்தார் அவர்.

"நான் ஒரு சிபார்சு செய்ய வேண்டியிருக்கிறது. நான் உம்மை சிபார்சு செய்யவிருக்கிறேன். அதுபற்றி உம்மோடு முதலில் கதைக்க விரும்பினேன்".

தொடர்ந்து சொல்லுங்கள் சேர் கிளரென்ஸ்........"

"புரூஸ் ஐரோப்பாவிலிருந்து தப்பியோடும் யூதர்கள், பிரச்சினையை உருவாக்கியுள்ளார்கள். அவர்கள் பலஸ்தீனத்துக்குள் வெள்ளம் போல சென்று கொண்டிருக்கிறார்கள். உண்மையாகச் சொல்லப்போனால், பலஸ்தீன எல்லைக்குள் இவ்வளவு தொகையில் யூதர்கள் செல்வதையிட்டு அராபியர்கள் குழப்பம் அடைந்திருக்கிறார்கள். வெண்மண்டபத்தில் பலஸ்தீனியப் பிரச்சினைக்கு ஒரு முடிவு எடுக்கப்படும்வரை, தற்காலிக நடவடிக்கையாகச் சைப்பிரசில் இந்த யூதர்களைத் தடுத்து வைப்பதற்காகத் தடுப்பு முகாம்களை அமைப்பது எனத் தீர்மானித்துள்ளோம்.

"எனக்குப் புரிகிறது" என்றார் சுதர்லாண்ட் மென்மையாக.

ரெவர் பிறவுண் தொடர்ந்தார். "இந்த முழு விடயமும் ஒரு உணர்ச்சி பூர்வமான விடயமாதலால், திறமையுடன் கையாளப்பட வேண்டும். ஒருவரும் இந்த கீழ்மைப்பட்டிருக்கும் அகதிகளின் பிரச்சினையைக் கையாள விரும்பவில்லை. உண்மையாகச் சொல்லப்போனால், அவர்களுக்கு பிரான்ஸ், அமெரிக்கா போன்ற உயர் இடங்களின் அனுதாபம் இருக்கிறது. சைப்பிரசில் எல்லா விடயங்களையும் அமைதியாக வைத்திருக்க வேண்டும். பாதகமான கருத்துக்களை உண்டாக்கக் கூடிய எதுவும் சைப்பிரசில் நிகழ்வதை நாம் விரும்பவில்லை."

**லியோன் யூரிஸ்**

சுதர்லாண்ட் யன்னலருகுக்கு நடந்து சென்று, அதற்கூடாகத் தேம்ஸ் நதியையும், வாட்டலூ பாலத்துக்கு மேலால் செல்லும் இரட்டைத்தட்டு பஸ் வண்டிகளையும் கவனித்தார். ✷

தொடரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை



# நாளைய செய்தி

தாமரைச்செல்வி

1966ம் ஆண்டு யூலை மாத நடுப்பகுதி. பொழுது சாய்ந்துகொண்டு வருகின்ற நேரம். காற்றுச் சிறிது வெப்பமாய் உடலை உரசிப்போனது.

மலைக்கு மேலே சரிவில் ஒரு பாறையில் ரிச்சி–து–வான் அமர்ந்திருந்தான்.

அந்தச் சரிவில் மூங்கில் கம்புகளை நட்டு வைக்கோலினால் வேய்ந்த பத்துக்கு மேற்பட்ட குடிசைகள் வரிசையாய் இருந்தன.

அவன் எட்டிப் பார்த்தபோது மலையின் அடிவாரம் தெரிந்தது. அவனது வியட்நாமிய நமிகோ பள்ளத்தாக்குப் பிரதேசம்......

திட்டுத் திட்டாய் பச்சைப் புதர்கள்...... நீர் நிலைகள்.... ஆற்றங்கரைகள்....

இவற்றின் நடுவே மிகவும் தூரத்தில் அமெரிக்க இராணுவத்தின் சாம்பல் நிறக் கூடாரங்கள்.

தூரத்தே வான் பரப்பில் அமெரிக்க ரோந்து விமானம் பெரும் இரைச்சலுடன் பறந்து போனது.

அவன் மிகுந்த கவலையுடன் அந்த அடிவாரத்தைப் பார்த்தான்.

ஒருவருடம் முன்பு வரை அந்த அடிவாரம் அவர்களது குடியிருப்புப் பகுதியாக இருந்தது. பெரும் ஆலமரங்களும், அத்திப் பழ மரங்களும் நிறைந்த கிராமம். நெல் விதைத்தும் சோளம் பயிர் செய்யும் காடுகளில் மூங்கில் வெட்டியும் சீவியம் நடத்தியிருந்தார்கள். நீர் நிலைகளில் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதும் எருமைகளோடு குளத்தில் நீரில் விளையாடுவதும் அவனுக்குப் பிடித்தமான விடயங்கள்.

அந்த அழகான பிரதேசத்தை அமெரிக்க இராணுவம் ஒரு வருடத்துக்கு முன்னர் ஆக்கிரமித்துக் கொண்டது.

கிராம மக்கள் அவர்களின் கொடுமை தாளாது வெளியேற நேரிட்டது.

அன்றைய துயர சம்பவங்களை அவனால் ஒருபோதும் மறக்க முடியாது. அவன் கண்ணெதிரே தந்தையின் கால்களை வெட்டித் தாயின் தலைமயிர் பிடித்து இழுத்து அடித்துத் தம்பியின் கைகளை முறுக்கி விழுத்தி எத்தனை அவலம்.

கிராமத்தில் பல பேர் வட வியட்நாமிற்கும் வேறு கிராமங்களுக்கும் போய்விட்டார்கள்.

சிலர் இந்த மலைச் சரிவுகளில் வந்து குடியிருந்தார்கள். இங்கே பயிர் ஏதும் செய்ய முடியாது. சரிவில் சில வாழைக்கன்றுகள் போட்டுப் பூசினிக் கொடிகளும் வைத்தார்கள். மற்றும்படி காடுகளுக்குப் போய் மூங்கில் வெட்டித்தான் சீவியம் நடத்தவேண்டி இருக்கிறது.

அந்த அடிவாரத்தைப் பார்க்கும் போதெல்லாம் ரிச்சி–து–வானின் மனதில் ஒருவித ஏக்கம் ததும்பும்.

பிறந்ததிலிருந்து தவழ்ந்து, நடந்து, வளர்ந்த பிரதேசம். இன்று எதிரியின் இருப்பிடமாகி விட்டதே.....

சொந்த மண்ணை இழப்பது எத்தனை பெரிய சோகம் என்று எமி–ஜோலான் சொல்லியிருக்கிறாள்.

இந்த அடிவாரத்தில் மட்டுமல்ல எங்கள் மண்ணின் நாலு பக்கங்களிலும் அமெரிக்க இராணுவம் சுற்றி நிற்கிறது. இவர்களைக் காலூன்ற விடாமல் அடித்துத் துரத்த வேண்டும். இதுதான் எங்கள் இலட்சியம்.

எமி– ஜோலான் சொல்லுவது உண்மைதான்.

"ரச்சி"

குடிசை வாசலில் நின்று அவனது அக்கா சாலி தராப் கூப்பிட்டாள்.

"என்ன சாலி"

மூங்கில் வெட்டிக் கட்டி வைத்துவிட்டு வந்தேன். வருகிறாயா போய் எடுத்து வருவோம்.

அவன் எழுந்து அவளுடன் நடந்தான்.

மலையின் பின்பக்கச் சரிவில் இடறுப்படுகின்ற கற்களின் நடுவே ஒற்றையடிப்பாதை மூங்கில் காட்டை நோக்கி இறங்கிப் போனது.

அந்தப் பின்புறச் சரிவில் சிறிது தூரத்தில் நாலைந்து கூடாரங்கள் புதிதாய் முளைத்திருந்தன.

அமெரிக்க ரோந்து விமானங்களின் பார்வையிலிருந்து தப்புவதற்காக மேலே காட்டுக்கொடிகளைப் பரப்பிக் கூடாரங்கள் தெரியாதவாறு மறைக்கப்பட்டிருந்தன.

சாலி தராப் அந்தக் கூடாரங்களை உற்றுப் பார்த்தாள்.

"இவர்கள்"

"எங்கள் நண்பர்கள்தான். வியட்னாமிய விடுதலைப் படையினர்"

ரிச்சி–து–வான் சந்தோசமாகச் சொன்னான்.

"அது தெரியும்.. எதற்காக இங்கே வந்து கூடாரம் போட்டு இருக்கிறார்கள்"

சாலி தராப் வியப்புடன் கேட்டாள்.

"மலையின் அடிவாரத்தில் எங்கள் பிரதேசங்களை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் அமெரிக்கச் சிப்பாய்களைத் துரத்துவதற்காக.

அப்படித் துரத்த முடியுமா? சந்தேகத்தோடு கேட்டாள்.

"முடியும் என்றுதான் சொல்கிறார்கள்."

நிறையப் பேர் இருக்கிறார்களா?

" ஒரு வருடம் முன்புவரை அந்த அடிவாரம் அவர்களது குடியிருப்புப் பகுதியாக இருந்தது. பெரும் ஆலமரங்களும், அத்திப்பழ மரங்களும் நிறைந்த கிராமம். நெல் விதைத்தும் சோளம் பயிர் செய்யும் காடுகளில் மூங்கில் வெட்டியும் சீவியம் நடத்தியிருந்தார்கள். நீர் நிலைகளில் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதும் எருமைகளோடு குளத்து நீரில் விளையாடுவதும் அவனுக்குப் பிடித்தமான விடயங்கள். "

ஆமாம் ஆண்களும் பெண்களுமாக.....

சாலி தராப் சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தாள்.

உண்மைதான் சாலி. ஆண்களுக்குப் பப்புல் கங் பொறுப்பு. பெண்களுக்கு எமி ஜோலான் பொறுப்பு.

எப்படி உனக்கு இந்த விபரங்கள் தெரியும்.

நான்தான் ஒரு வாரமாக தினமும் கூடாரத்துக்குப் போகிறேனே. அவர்கள் போராட்டம் பற்றி எத்தனை பேசுகிறார்கள் தெரியுமா? ஹனாயின் நகர்ப்புறப் பகுதிகளிலெல்லாம் அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசுகிறதாம். சைகோன் நகரை இராணுவம் ஆக்கிரமித்துவிட்டதாம். நேற்றிரவும் கூடாரத்தில் பேற்றறி ரேடியோவில் ஹோ சி மின் அவர்களின் பேச்சைக் கேட்டேனே. சுதந்திரத்தையும் விடுதலையையும் காட்டிலும் அரிதான பொருள் வேறொன்றும் கிடையாது என்றார். எவ்வளவு உணர்ச்சியுடன் பேசினார் தெரியுமா? அவர் எழுதிய 'நமது நாட்டின் வரலாறு' என்ற புத்தகம் கூட எமி–ஜோலான் தந்து நான் வாசித்திருக்கிறேன். சிறிது நேர மௌன நேரத்தின் பின் சாலி தராப் கேட்டாள்

"எமி–ஜோலான் அழகானவளா?"

ஆமாம். உன்னைப்போல.

சிறிது நேரம் மௌனமாக அவர்கள் நடந்தார்கள். காட்டுக்குள் போனதும் சாலி தராப் மூங்கில் கட்டுக்களை சரி பார்த்துக்கொண்டாள்.

வேறு ஆட்களும் மூங்கில் கட்டுக்களை சுமந்து நடந்து வந்துகொண்டிருந்தார்கள்.

சாலி தராப் தரையில்அமர்ந்து மூங்கில் கட்டுக்களை சரியாய் இழுத்துக் கட்டிய போதுதான் ரிச்சி–து–வான் அவளைக் கவனித்தான்.

அவளுடைய மேல் சட்டை தோள் வளையில் பெரிதாய் கிழிந்து தொங்கியிருந்தது. அதனூடாக தோளின் வெண்மை பளீரென்று தெரிந்தது.

போதையில் போனவர்கள் அவளைப் பார்த்து எதுவோ தமக்குள் சொல்லிச் சிரித்ததில் ரிச்சி–து–வானுக்கு மனம் நொந்து போனது.

சாலி! உனக்கு வேறு சட்டை இல்லையா? கவலையுடன் கேட்டான்.

சாலி தராப் தலையைக் குனிந்துகொண்டே மெல்லிய குரலில் சொன்னாள்.

வீட்டுக்குப் போனதும் தைத்துவிட்டுப் போட்டுக் கொள்கிறேன்.

நீ தைக்க வேண்டாம் நான் உனக்குப் புதிய சட்டை வாங்கித் தருகிறேன்.

இருவரும் மூங்கில் சுமையுடன் திரும்பி நடந்தார்கள். இந்த மூங்கில்களை அவன் சீவிக் கொடுக்க கால்களை இழந்த அப்பாவும் தம்பியும் கூடைகளையும் நாற்காலிகளையும் பின்னிக் கொடுப்பார்கள். அவன் நகரத்துக்கும் வேறு கிராமங்களுக்கும் கொண்டு போய் விற்று வருவான்.

அந்த சிறிதளவு வருமானத்தில் தான் அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

மூங்கில் கட்டுக்களை முற்றத்தில் இறக்கி வைத்துவிட்டு அவன் வீட்டுக்குப் பின் பக்கச் சரிவில் இறங்கி நடந்தான்.

கூடாரம் போட்டு வியட்னாமிய விடுதலைப் படை தங்கி இருக்கும் இந்த ஒரு வாரத்திலும் அவன் அடிக்கடி அங்கே போவான். அவர்களுக்கு எல்லா உதவியும் செய்வான். தண்ணீர் சுமந்து கொண்டுவந்து கொடுப்பான். அவர்களுக்குத் தேவையான பொருட்களை நகரத்துக்குள் போய் வாங்கிவந்து கொடுப்பான்.

அந்த விடுதலைப் படையில் தன்னை இணைத்துக்கொண்டு போராட அவனுக்கு விருப்பம் இருந்தது. ஆனால் வீட்டில் யாரும் சம்மதிக்கவில்லை. அவனுடைய உழைப்பிறதான் அவர்கள் வாழவேண்டி இருந்தது.

அவன் அந்தக் கூடாரங்களை நோக்கி நடந்தான். அங்கு போராளிகளின் நடமாட்டம் அதிகமாக இருந்தது. முன்புறம் எமி–ஜோலான் தரையில் அமர்ந்து துப்பாக்கி துடைத்துக்கொண்டிருந்தாள்.

சிறிது தூரத்தில் பப்புல் கங் நின்று மற்றவர்களுக்கு ஏதோ வேலை சொல்லிக் கொண்டிருந்தான்.

பப்புல் கங் அதிக உயரமில்லாத சிறிது பருமனான உடம்பும் பரந்த முகமுமாய் இருந்தான். கொஞ்சம் நிறம் மங்கிய தலைமயிர் நெற்றியில் விழுந்திருந்தது. எப்போதும் சிந்தனையும் தீவிரமுமாய் இருப்பான்.

ரிச்சி து வானைக் கண்டதும் எமி ஜோலான் மகிழ்ச்சியோடு வரவேற்றாள்.

எமி ஜோலான் அழகான பெண். மஞ்சள் நிறம். சிறிய பழுப்பு நிறக் கண்கள். குண்டு முகம். கொஞ்சம் வளைந்த மூக்கு. சதைப்பிடிப்பான உதடுகள். மேலே அங்கியும் கால் சராயும் அணிந்து இடுப்பில் தடித்த துணியால் இறுக்கிக் கட்டியிருந்தாள்.

அவளின் சிறிய கண்களில் அன்பும் வாஞ்சையும் பொங்கி வழியும். ரிச்சி மீது அவளுக்கு மிகுந்த பிரியம்.

"வா ரிச்சி, உனக்கு எத்தனை வயது?"

தெரியாது. ஏன் கேட்கிறாய் எமி ஜோ?

"பதினைந்து இருக்குமா?"

"ம்...... இருக்கும்"

"வியட்னாம் முழுவதும் சண்டை தீவிரமடைந்து வருகிறது தெரியுமா..... மைலாய் கிராமத்தில் நடந்த கொடுமைகளை நினைக்க நெஞ்சு கொதிக்கிறது. எங்கள் தொழிற்கூடங்கள், நீர்த்தேக்கங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள் எல்லாவற்றின் மீதும் குண்டுகளை வீசுகிறார்கள். எங்கள் பிரதேச வளங்களைச் சுரண்ட வந்தவர்களைத் துரத்த வேண்டும். மேகாங் ஆற்றுப் பள்ளத்தாக்கு நகரங்களில் பெரும் சண்டை நடக்கிறது.

இங்கே எங்கள் போராளிகள் இருபது பேர்வரை இறந்துவிட்டார்கள்.

ரிச்சி து வான் கவலையோடு கேட்டுக் கொண்டிருந்தான்.

தொடர்ச்சி 14ம் பக்கம்...

www.tamilarangam.net



## நாளைய செய்தி...

அவர்களின் ஆயுதங்களில் ஒன்றை நீ எடுத்துக் கொள்வாயா?

ரிச்சி து வான் சட்டென்று மௌனமானான்.

இயலாமையுடன் அவளைப் பார்த்தான். ஒரு வினாடி வெறுமையாய் உணர்ந்தான்.

> பப்புல் கங் பாய்ந்து ஓடினான். வண்டியின் பின் பக்கக்கதவைத் திறந்தான் . அவன் முகம் பேயறைந்தது போல மாறியது. ஓவென்று ஆத்திரத்துடன் கத்திக்கொண்டே காலை த் தரையில் ஓங்கி அறைந்தான். ரிச்சி து வானும் ஓடிப் போய்ப் பார்த்தான். அய்யோ இது என்ன கொடுமை... இருபதுக்கு மேற்பட்ட விடுதலைப் படையினரது உடல்கள் கை கால் வெட்டப்பட்ட நிலையில் வண்டிக்குள் குவிக்கப்பட்டிருந்தன.

எமி ஜோலான் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு,

"வருத்தப்படாதே ரிச்சி உன் குடும்ப நிலைமை எனக்குத் தெரியும்" என்றாள்.

நான் உழைக்காவிட்டால் வீட்டில் எல்லோரும் பட்டினியில் செத்து விடுவார்கள், என்றான் அழுகையுடன்.

அப்போது அங்கே வந்த பப்புல் கங், ரிச்சி து வானின் தோளை தன் கைகளால் வளைத்துக் கொண்டு,

ரிச்சி நாலைந்து நாட்களுக்கு நீ இங்கே வரக்கூடாது என்றான்.

ஏன் பப்புல்?

அவன் முகம் வாடக் கேட்டான்.

நான் ஏதும் சொன்னால் அதற்குக் காரணம் இருக்கும் என்று உனக்குத் தெரியுமல்லவா?

ம்.....

பப்புல் கங் அவனைப் பார்த்து தோழமையுடன் சிரித்துவிட்டுப்போனான்.

"நான் போகிறேன் எமி ஜோ!"

அவள் தனது துப்பாக்கியைத் தோளில் தொங்கவிட்டுக்கொண்டு அவனுடன் சிறிது தூரம் கூடவே நடந்து வந்தாள்.

பப்புல் கங், எமி ஜோலான் இருவரையும் அவனுக்கு மிகவும் பிடிக்கும். எந்நேரமும் போராட்டம் தாக்குதல் என்றே பேசிக் கொண்டிருப்பார்கள்.

அந்தப் பேச்சுக்களின் நடுவே அவர்களின் கண்களில் எப்போதாவது மின்னல் போல ஒரு நேசம் பளிச்சிடுவதை அவன் பார்த்திருக்கிறான்.

அவன் நின்று எமி ஜோலானைத் திரும்பிப் பார்த்தான்.

எமி ஜோ நீ பப்புல் கங்கை நேசிக்கிறாயா?

அவள் தலையைச் சாய்த்து "ம்" என்றாள்.

அவனைத்தான் திருமணம் செய்து கொள்வாயா?

ஆமாம்.

எப்போது?

இந்த மண் மீட்கப்பட்ட பிறகு.

எங்கள் மண் மீட்கப்படும் என்று நம்புகிறாயா?

நிச்சயமாக என்றாவது ஒரு நாள்.

எமி ஜோலானின் சிறிய கண்களில் கனிவு இருந்தது. நம்பிக்கை இருந்தது.

ரிச்சி! ஒரு நாளைக்கு தங்க நட்சத்திரம் பொறிக்கப்பட்ட செங்கொடி சைகோன் நகரில் வானளாவப் பறக்கும். அன்றைக்கு நாங்கள் திருமணம் செய்து கொள்வோம். ஏனோ அவனுக்கு துக்கமாய் இருந்தது.

அந்த மங்கிய பொழுதில் எமி ஜோலானைப் பார்க்க இன்னும் துக்கம் அதிகரித்தது.

பப்புல் கங் ஏன் என்னை வரவேண்டாம் என்றான்.

அவள் பேசாமல் நின்றாள்.

ஒரு வாரத்தின் பின் வரலாமா?

வரலாம் என்றாள் சந்தோசத்துடன்.

கொஞ்சம் தயங்கி விட்டு கேட்டான்.

மலை அடிவார முகாம் தாக்கப் போகிறீர்களா?

அதையெல்லாம் இப்போது கதைக்கக்கூடாது. பிறகு தெரிந்து கொள்வாய்.

அவளிடம் விடை பெற்றுக் கொண்டு பாரமான மனதுடன் வீட்டுக்கு நடந்தாள்.

நான்கு நாட்கள் நகர்ந்தன. வான்பரப்பில் அமெரிக்க விமானங்கள் பெரும் இரைச்சலுடன் பறந்து திரிந்தன.

நான்காம் நாள் இரவு. அந்த மலைப் பிரதேசம் அமைதியாய் இருந்தது. காற்றுக் கூட வீசவில்லை.

நடுச்சாமத்தில் மலை அடிவாரத்தில் முதலாவது வெடிச்சத்தம் கேட்டது.

தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது.

துப்பாக்கி வெடிகளினாலும் பீரங்கிச் சத்தங்களினாலும் அந்தப் பிரதேசமே அதிர்ந்தது. மலையில் மோதிப் பயங்கரமாய் எதிரொலித்தது.




மலைச்சரிவுகளில் வாழ்ந்த மக்கள் நடுங்கிப் போனார்கள். அத்தனை பேரும் காட்டுக்குள் ஓடிப்போனார்கள்.

இரவு முழுவதும் ரிச்சி துவான் கண்ணில் நீர் வழிய விழித்திருந்தான்.

இறைவனே எங்கள் தோழர்களைக் காப்பாற்றும் அவர்களுக்கு வெற்றியைத்தாரும்.....என்று திரும்பத் திரும்பப் பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தான்.

மறுநாளும் சண்டை தொடர்ந்தது. விமானங்கள் சுற்றுப் புறங்களில் குண்டுகளை மழையாய்க் கொட்டின. வெடி மருந்துகளின் மணம் காற்றில் மிதந்து பரவியது. மறுநாள் இரவு சத்தங்கள் ஓய்ந்துவிட்டன.

மனம் பதைபதைத்தது.

என்ன நடந்திருக்கும்.

நன்றாக விடிந்துவிட்ட பிறகு மக்கள் தங்கள் குடிசைகளுக்குத் திரும்பினார்கள்.

ரிச்சி துவான் ஓடிப்போய் பாறையில் நின்று அடிவாரத்தைப் பார்த்தான்.

மிகவும் தூரத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் அதே இராணுவக் கூடாரங்கள்.

மனதுக்குள் 'திக்' கென்றது.

கால்கள் சோர்ந்து தடுமாற பாறையில் அமர்ந்து விட்டான்.

"தோல்வியில் முடிந்ததா ரிச்சி?"

சாலி தராப் அழுகையுடன் கேட்டாள்.

அப்படித்தான் தோன்றுகின்றது.

அவன் வெகுநேரம் அப்படியே அமர்ந்துவிட்டான்.

மூங்கில் வெட்டப் போகவில்லை. சாப்பிடவில்லை மனம் தவித்துக் கொண்டேயிருந்தது.

மத்தியானத்துக்குப் பிறகு அவனால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

அவன் பின் பக்கம் வந்து சரிவில் நின்று பார்த்தான். கூடாரத்துக்கு வெளியே எந்த நடமாட்டமும் தெரியவில்லை.

கீழே தூரத்தில் மலையைச் சுற்றிவரும் பாதையில் ஒரு பழைய டிரக் வண்டி ஆடி அசைந்து கொண்டு வந்தது.

மூங்கிலும் வைக்கோலும் ஏற்றித் திரியும் மை வீ கிழவனின் வண்டி அது. விடுதலைப் படையினரின் கூடாரங்களை நோக்கித்தான் வருகிறதோ தெரியவில்லை.

அவன் சரிவில் இறங்கிக் கூடாரங்களை நோக்கி நடந்தான்.

அங்கு எல்லோரும் களைத்துப் போன முகங்களுடன் தரையில் அமர்ந்திருந்தார்கள்.

மூங்கில் தட்டிகளில் சருகுகள் பரவிய படுக்கையில் காயப்பட்டவர்கள் படுத்திருந்தார்கள். தூரத்தில் பப்புல் கங் கலைந்த தலையும் சிவந்த கண்களுமாக மரக்குற்றியில் அமர்ந்திருந்தான்.

எல்லோர் முகங்களிலும் இருந்த சோகம் அவனுக்கு மிகுந்த கவலையைத் தந்தது. அவன் தயங்கியபடி பப்புல் கங்கின் அருகே போனாள்.

"பப்புல்..."

அடிபட்ட பார்வையுடன் நிமிர்ந்தான்.

ரிச்சி! தோல்வியில் முடிந்துவிட்டது. ரிச்சி நம்மில் பலர் உள்ளே அகப்பட்டு இறந்து விட்டார்கள்.

ரிச்சி துவானின் கண்கள் கூட்டத்தினுள்ளே எமி ஜோலானை தேடின.

அவளைக் காணவில்லை என்பதை வேதனையுடன் உணர்ந்தான்.

நெஞ்சை அடைத்தது.

எமி ஜோலான்......?

அவள் திரும்பவில்லை.

குபுக்கென்று ரிச்சி து வானின் கண்கள் நிறைந்தன.

மை லீ கிழவனின் வண்டி கூடார வாசலில் வந்து நின்றது.

நரைத்த தலையும் நீண்ட வெண்தாடியுமாக முகத்தில் நிறைந்த சுருக்கங்களுடன் மை லீ கிழவன் இறங்கினான். அவனின் இடுக்கிய கண்களில் தண்ணீர் இருந்தது.

பப்புல் கங்கிடம் வந்து சொன்னான்.

உங்கள் ஆட்களின் இறந்த உடல்களை அவர்கள் என் வண்டியில் ஏற்றி அனுப்பியிருக்கிறார்கள்.

பப்புல் கங் பாய்ந்து ஓடினான். வண்டியின் பின் பக்கக் கதவைத் திறந்தான்.

அவன் முகம் பேயறைந்தது போல மாறியது.

ஓவென்று ஆத்திரத்துடன் கத்திக்கொண்டே காலைத் தரையில் ஓங்கி அறைந்தான்.

ரிச்சி து வானும் ஓடிப் போய்ப் பார்த்தான்.

அப்போ இது என்ன கொடுமை....

இருபதுக்கு மேற்பட்ட விடுதலைப் படையினரது உடல்கள் கை கால் வெட்டப்பட்ட நிலையில் வண்டிக்குள் குவிக்கப்பட்டிருந்தன.

அவனால் நேசிக்கப்பட்ட போராளிகள்.

முன்பக்க ஓரத்தில் எமி ஜோலான்.

சிறிய கண்கள் பாதி மூடியிருக்க உதடுகள் சற்று திறந்திருக்க அப்போ இப்போதும் ஏதும் கனவு கண்டுகொண்டிருக்கிறானோ.....

அத்தனை பேரும் அதிர்ச்சியில் உறைந்து போயிருக்க ரிச்சி துவான் அவர்களை விலக்கிக்கொண்டு வேகமாய் வீட்டுக்கு வந்தான். பாசறையில் அமர்ந்து கைகளால் முகம் பொத்தி விம்மி விம்மி அழுதான். வீட்டில் உள்ளவர்கள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ரிச்சி துவான் வெகுநேரத்தின் பின் எழுந்து வந்தான்.

நான் போகிறேன்.

யாரும் பேசவில்லை.

சாலி! உன் கிழிந்த சட்டையை தைத்துப் போட்டுக்கொள்.

குறிப்பு:

சரியாக ஒரு வருடத்தின் பின் 1967ம் ஆண்டு பருவ மழை பெய்துகொண்டிருந்த ஒரு இரவில் அந்த அடிவார முகாம் பப்புல் கங் தலைமையில் வியட்னாமிய விடுதலைப் படையினரால் தாக்கி அழிக்கப்பட்டது. ரிச்சி து வானும் இந்த தாக்குதலில் பங்கு வகித்திருந்தான். ஐந்து நாட்கள் நடந்த போரில் ஆறாயிரம் அமெரிக்க சிப்பாய்களும் அந்த நமிகோ பிரதேசத்திலிருந்து முழுவதுமாக விரட்டியடிக்கப்பட்டனர்.

★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யேர்மனியில் சோலைக்கலைமாலை

சென்ற சனிக்கிழமை (22-06-1996) ஸ்ருட்காட் நகரிலும் ஞாயிற்றுக்கிழமை (23-06-1996) ஓபகௌசன் நகரிலும் சோலைக் கலைமாலை நிகழ்ச்சி மண்டபம் நிறைந்த பார்வையாளர்களுடன் நடந்தேறியது.

செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை ஆகிய காப்பகங்களின் யேர்மனிக்கிளை இதனை ஏற்பாடுசெய்து நடாத்தியது. ஸ்ருட்காட் நகரின் 'குவசால்' மண்டபத்தில் எண்ணூற்றிற்கும் அதிகமான மக்களும், ஓபகௌசன் நகரின் 'குவசால்' மண்டபத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான மக்களும் வருகை தந்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் கலை-பண்பாட்டுக்கழக யேர்மனிக்கிளையின் நடன க்கலைஞர்களின் நடன அமைப்பில் 'சுதந்திரக்கனல் நடனங்கள்' இடம் பெற்றன. 'மண்ணில் ஒரு பிடி' என்ற நடன வடிவத்திற் சிரித்துக்கொண்டே கரும்புலியாக நடனமாடிய கலைஞரைப்பார்த்துப் பல பார்வையாளர்களின் கண்கள் பனித்ததைத் காணக்கூடியதாக இருந்தது.

'தளிரிசைத்தட்டு' வேலையில் 'தமிழீழம்' இசைக்குழுவினர் பின்னணி இசை வழங்க, செல்வி சிறிதரன், செல்வன் திலீபன், புலேந்திரன், செல்வன் ஸ்ரெபான் வலன்ரையின் ஆகிய பிஞ்சுக் கலைஞர்கள் விடுதலைப் பாட்டிசைத்தனர். சிறுமி துஷ்யந்தி மனோகரன் புல்லாங்குழல், வயலின் ஆகிய இசைக்கருவிகளில் விடுதலைக் கீதம் இசைத்தார். சிறுமி கிருபாளினி மகாலிங்கம் 'எண்ணிப்பார்த்தீரா' எனக்கேட்டுப் பெரியோரை விளிப்பூட்டிப் பேசினார்.

விடுதலைப் புலிகள் கலை-பண்பாட்டுக்கழக யேர்மனிக்கிளையின் சிறப்பு நிகழ்ச்சியாக உருவான 'விலங்கை உடைத்த விலங்கு' என்ற இசைக்கோல நடனம் அனைவரையும் கவர்ந்த புதிய முயற்சியாகப் பாராட்டைப் பெற்றது.

நிகழ்ச்சியின் இடையிடையே விகடவிற்பனர் ஜசாக் இன்பராசா அவர்கள் மாறுபட்ட புதிய பாத்திரங்களிற் தோன்றி 'வெடிச்சிரிப்புவேளை'யை அலங்கரித்தார். சொற்பொழிவாற்றிய விடுதலைப் புலிகள் கலை-பண்பாட்டுக்கழக யேர்மனிக்கிளையின் பொறுப்பாளர் "காப்பகங்களில் வாழும் சோலைச் செல்வங்கள் உளவியல் அணுகுமுறையோடும் நவீன சிந்தனைகளோடும் பாசம் நிறைந்த பராமரிப்போடும் வளர்கிறார்கள். தன்னம்பிக்கை நிறைந்த ஒரு ஆரோக்கியமான பரம்பரை உருவாகின்றது" என்றார். அவர் மேலும் பேசுகையில் "இடம்பெயர்வு, பின்விளைவுகளைக் கருத்திற்கொண்ட ஒரு போர் உபாயத்தின் வெற்றி, ஆயுதங்களின் உறுமலில் மட்டுமே தங்கிய ஒன்றல்ல. ஆயுத பலத்தையும், ஆட்பலத்தையும் மட்டுமே ரத்வத்தை கணக்கெடுத்தார். தமிழீழ மக்களின் ஆன்ம பலத்தை அவர் கணக்கெடுக்கத் தவறியதே இன்றைய அவரது தோல்விக்குக் காரணம்" என்றார்.

யேர்மனிக்கிளையின் பொறுப்பாளருமான இராஜ சுந்தரமும், ஓபகௌசனில் தமிழ் மாணவர் அமைப்பின் யேர்மனிக்கிளையின் செயலாளர் நாகவண்ணனும் கையளிக்க 'உலகத்தமிழர் இயக்கம் - யேர்மனி'யின் பொறுப்பாளர் காங்கேயமூர்த்தி பெற்றார். விடுதலைப் புலிகள்



கல்வி மேம்மாட்டுக்கழகத்திற்காக மாணவர் அமைப்பு மண்டபத்திற் சேகரித்த நிதியை, ஸ்ருட்காட்டில் தமிழ் மாணவர் அமைப்பின் யேர்மனிக்கிளையின் பொறுப்பாளரும் செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை ஆகிய அமைப்புக்களின்

கலை-பண்பாட்டுக்கழக அறிவிப்பாளர் எஸ். வலன்ரையின் நிகழ்ச்சியைத் திறம்படத் தொகுத்து வழங்கினார்.

சோலைச் செல்வங்கள் சிரிக்க வழிசெய்த நிகழ்ச்சியாக இது அமைந்தது. ✷

# இத்தாலியில் கலைவிழா

கடந்த 7-7-1996 அன்று இத்தாலி பொலோனியா மாநகரில் எமிலியா-றொமானியா தமிழ்ச் சங்கத்தினரும், பொலோனியா வாழ் தமிழீழ மக்களும் இணைந்து மாபெரும் கலை விழா ஒன்றைச் சிறப்புற நடாத்தி முடித்தனர். இவ்விழாவில் பலேர்மோ, நாப்போலி, ஜெனோவா, மில்லானோ, றெஜியோ எமிலியா புளோரன்ஸ் போன்ற நகரங்களிலிருந்தும் கலைஞர்களும், மக்களும் கலந்து கொண்டனர். அத்துடன், இத்தாலிய மக்களும் அரசசார்பற்ற அமைப்பைச் சேர்ந்தவர்களும் தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலி நிருபர்களும் விழாவிற் கலந்து சிறப்பித்தனர்.

விழா, தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பிரதிநிதியால் மங்கள விளக்கேற்றி ஆரம்பிக்கப்பட்டது. தமிழீழத் தேசிய கீதத்தைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும் உயிர்நீத்த எம் தேச மக்களுக்கும் இரு நிமிட அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது.

தமிழீழத் தேசியத் தலைவரின் முத்தமிழ் விழா வாழ்த்துச் செய்தி தமிழ்ப்பெண்மணி ஒருவரால் வாசித்துக் காட்டப்பட்டது. பலேர்மோ மாலதி கலைப்பள்ளி மாணவிகள் பரதத்தினூடாக தமது அஞ்சலியைப் பக்தியுடன் அர்ப்பணித்தனர்.

இதனையடுத்து, பலேர்மோ கலை-பண்பாட்டுக் கழகக் கலைஞர்களின் 'புரட்சி கானங்கள்' இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. இந்தத் தமிழீழ இசைக் குரல்களுடன் நாப்போலி, பொலோனியா, எமிலியா, றொமானியாவின் பாடகர்களும் இணைந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



அடுத்த நிகழ்வாக "ஈழம் எங்கள் தாயகம்", "நிலவில் புதிய கவிதை", "முன்னேறிப் பாய்வதென்ன அம்மா", "ஓ தமிழா" என்ற பாடலுக்கு மாலதி கலைப்பள்ளி மாணவிகளும், "பச்சை மணிகள் முத்து மணிகள்" "மாதவம் செய்தது கண்ணடா", "வானமரர் துயர் தீர்க்க" என்ற பாடலுக்கு பொலோனியா அன்னை பூபதி கல்விக்கூட மாணவர்களும், "இந்தக் கடல் ஈழத்தமிழரின் சொந்தக்கடல்", "ஓரிரண்டு பேருக்குள்ளே" என்ற பாடலுக்கு, றெஜியோ எமிலியா அன்னை பூபதி கல்விக்கூட மாணவிகளும், "பொங்கும் கடலும் பொழியும் நிலவும்" என்ற பாடலுக்கு ஜெனோவா திலீபன் கல்வி நிலைய மாணவர்களும் அபிநயம் வழங்கினர். "விண்வரும் மேகங்கள் பாடும்" என்ற பாடலுக்குப் பொலோனியா கலைஞர்களும் இசையசைவு கொடுத்தனர்.

அடுத்த நிகழ்வாக, பொலோனியா தமிழ்ப் பெண்கள் அமைப்பினர், 'நவீன கண்ணகிகள்' எனும் வில்லிசையை அரங்கேற்றினர்.

விழாக்காண வருகை தந்திருந்த இத்தாலிய மக்களுக்கு, தமிழீழ விடுதலைப் போரின் இன்றைய நிலை குறித்தும், தமிழரின் பாரம்பரிய கலை-பண்பாடுகள், தமிழரின் வரலாறு, விழாவில் இடம்பெற்ற கலை அம்சங்கள் பற்றியும் அத்துடன் தமிழீழத் தேசியத் தலைவரின் வாழ்த்துச் செய்தியும் மொழிபெயர்த்துக் கூறப்பட்டது.

சர்வதேச அங்கீகாரம், புலம்பெயர் மண்ணில் தமிழீழ மக்களின் தொடர்ச்சியான நிதிப் பங்களிப்பு என்பன குறித்துத் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி சிறப்புரை ஆற்றினார்.

தொடர்ந்து பொலோனியாத் தமிழீழக் கலைஞர்களின் ஒருங்கிணைந்த முயற்சியில் மேடையேற்றப்பட்ட 'அவலங்கள்' தாளலய நாடகம் இடம்பெற்றது.

இறுதியாக, "புலம்பெயர் மண்ணில் தமிழர் கலாச்சாரம் பாதிக்கப்படுகிறதா? அல்லது பராமரிக்கப்படுகிறதா?" என்னும் பொருள் பற்றி றெலிடோ எமிலியா தமிழீழப் பெண்கள் அமைப்பினர் வழக்குரைமன்று நடாத்தினர்.

மேற்குறித்த நிகழ்ச்சிகளுடன் இரவு 11 மணியளவில் கலைவிழா நிறைவுற்றது. ✷

# சுவிசில்...



விடுதலைப்புலிகளின் சுவிஸ் பிரதிநிதி. ந. முரளிதரன் அவர்களை நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்த போது, மன்றின் முன் கூடிய மக்கள் அவரை விடுதலை செய்யக் கோரி குரலெழுப்புகையில்....



சுவிசில் 13-7-96 இல் உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கல்விச்சேவையினால் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலக அரங்கு

## குர்திஷ் "கர்ப்பிணிப்பெண்" ணின் தற்கொடைத் தாக்குதல்

'கர்ப்பிணிப் பெண்' போல் தன்னைக் காட்டிக்கொண்ட பெண் ஒருத்தி, துருக்கி நாட்டின் கிழக்குப் பகுதியில் நடைபெற்ற இராணுவ வைபவம் ஒன்றின்போது தற்கொடைத் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளாள். கடந்த யூன் மாதம் 30ம் திகதி நடைபெற்ற இத்தாக்குதலில், இப்பெண் உட்பட 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இப்பெண் ஒரு குர்திஷ் போராளி யாவார். கடந்த 12 வருடங்களாகச் சுயாட்சி கோரி நடைபெற்றுவரும் குர்திஷ் போராட்டத்தில் இடம்பெற்ற முதலாவது தற்கொடைக் குண்டுத் தாக்குதல் இது வென நம்பப்படுகிறது.

டன்செலி எனும் நகரின் மத்திய பகுதியில் இடம்பெற்ற இத்தாக்குதல், 'குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி' தனது போராட்டத்தைப் புதிய பாதையில் வழிநடத்திச் செல்கிறது என்பதை உணர்த்துவதாக உள்ளது.

"கர்ப்பிணிப்பெண்போல் ஆடையணிந் திருந்த ஒரு பெண், இராணுவத்தினர் குழுமியிருந்த பகுதிக்கு ஓடிச் சென்றதை யடுத்து உடனடியாகக் குண்டு வெடித் தது. இதனைத் தொடர்ந்து அப் பகுதி

> "கர்ப்பிணிப் பெண்போல் ஆடையணிந் திருந்த ஒரு பெண், இராணுவத்தினர் குழுமியிருந்த பகுதிக்கு ஓடிச் சென்றதையடுத்து உடனடியாகக் குண்டு வெடித்தது. இதனைத் தொடர்ந்து அப்பகுதி போர்க்களம் போல மாறியது"

போர்க்களம்போல மாறியது" என இச் சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்துள்ளார்.

துருக்கிய தேசிய நாயகன் ஒருவரின் உருவச் சிலைக்கு முன்னாலுள்ள கொடிக்கம்பத்தில் இருந்த சிவப்பு, வெள்ளை நிறத்திலான துருக்கியக் கொடியை வைபவ இறுதியில் கீழ் இறக்கிக்கொண்டிருந்த சம்பவத்தின்போதே இக் குண்டுத்தாக்குதல் இடம் பெற்று உள்ளது.

கொல்லப்பட்டோர் போக, 35 பேர் காயப்பட்டனர் எனவும் அவர்களில் சிலர் மோசமான நிலையில் உள்ளனர் எனவும் அறிய வருகிறது.

கடந்த ஒன்பது மாதங்களாகத் துருக்கியில் நிலவி வந்த அரசியல் குழப்ப நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் வண்ணம், இஸ்லாமிய அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டு இரு நாட்களின் பின் இச்சம்பவம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் தம்மால் பிரகடனப் படுத்தப்பட்ட போர் நிறுத்தத்திற்குத் துருக்கிய அரசு பதிலளிக்காவிட்டால் பல தற்கொடைத் தாக்குதல்களைத் தாம் நடத்தப்போவதாகக் குர்திஷ் போராளிகள் அண்மையில் எச்சரிக்கை விடுத்து இருந்தனர் என்றும், அதனால் இத் தாக்குதல் அவர் களாலேயே நடத்தப் பட்டிருக்க வேண்டும் எனவும் துருக்கிய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மொஸ்க்கோ குண்டுவெடிப்புகள்: செச்சனியர் காரணமா?

மொஸ்கோவின் சுறுசுறுப்பான வீதி யொன்றில் யூலை 12 ஆம் திகதி வெடித்த குண்டு மொஸ்கோ வாசிகளையும், யெல்ட்சின் உட்பட பல அரசியல் தலைவர்களையும் அதிர்ச்சிக் குள்ளாக்கியது.

இதுக்கு முக்கிய காரணம், இக்குண்டுவெடிப்பானது இரு நாட்களில் இடம்பெற்ற இரண்டாவது சம்பவமாக இருந்ததனாலாகும்.

யூலை 11ம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்பும், மறுநாள் இடம்பெற்ற குண்டுவெடிப்பும் ஒரேபாணியிலேயே நிகழ்த்தப்பட்டிருந்தன. அதாவது, இரு சம்பவங்களிலும் கைவிடப்பட்ட பை ஒன்றினில் இருந்த குண்டு வெடித்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், முதலாவது சம்பவத்தைப் போலன்றி, இரண்டாவது குண்டுவெடிப்பானது பஸ் வண்டியின் மத்திய பகுதியில், சுறுசுறுப்பான நேரத்தில் இடம்பெற்றதால் அதிக பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இரண்டாவது குண்டு வெடிப்பில் மட்டும் 30க்கு மேற்பட்டோர் காயமுற்றமை குறிப்பிடத் தக்கது. இரு தினங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களிலும் 36 பேர் வரை காயமடைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

மொஸ்கோ நகரமானது "பயங்கர வாதிகளால் தூவப்பட்டுள்ளது" எனக் கூறிய ரஷ்ய சனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் தனக்குத்தானே பல புதிய அதிகாரங்களை எடுத்துக்கொண்டதுடன், தலைநகரினைத் 'துப்பரவாக்க' பல கட்டமான நடவடிக்கைகளை எடுப்பேன் எனவும் சபதமிட்டுள்ளார்.

அத்துடன், உடனடியாக 1000 மேலதிக சிறப்புப் பொலிசாரை மொஸ்கோ வீதிகளைக் காவல் காக்கவும் நியமித்துள்ளார்.

> "இக்குண்டு வெடிப்புக்களுக்கு இற்றைவரை ஒருவரும் உரிமை கோராதது விநோத மான ஒன்றாக உள்ளது. ஏனைய நாடுகளில் இத்தகைய செயல் களை யார் செய்கிறார்கள் என்பதனை அறியக் கூடியதாக இருக்கும். இச்சம்பவங்களின் சூத்திரதாரிகள் யார் என்பது தெரியாத நிலையில் நாம் பயத்துடனும் குழப்பத்துடனும் வாழ வேண்டி இருக்கிறது"

"இக்குண்டு வெடிப்புக்களுக்கு இற்றைவரை ஒருவரும் உரிமை கோராதது விநோதமான ஒன்றாக உள்ளது. ஏனைய நாடுகளில் இத்தகைய செயல்களை யார் செய்கிறார்கள் என்பதனை அறியக்கூடியதாக இருக்கும். இச்சம்பவங்களின் சூத்திரதாரிகள் யார் என்பது தெரியாத நிலையில் நாம் பயத்துடனும் குழப்பத்துடனும் வாழவேண்டி இருக்கிறது" என மொஸ்கோ வாசி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். தான் இனிமேல் பஸ் வண்டிகளில் ஏறப்போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, "இக்குண்டு வெடிப்புக் களுக்குக் காரணம் செச்சனியப் போராளிகளே" என மொஸ்கோ நகரின் மேயரான யூரி லஸ்க்கோவ் தெரி வித்துள்ளார்.

"ரஷ்யாவுடனான தமது போரை மொஸ்கோவுக்குக் கொண்டுவருவோம்" என செச்செனியப் போராளிகள் முன்பு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அண்மையில், ரஷ்யப் படையினர் செச்சனியாவில் நடாத்திய தாக்குதல்களும், இதனால் பல செச்சினிய குடிமக்கள் கொல்லப்பட்டதும், செச்சனியப் போராளிகள் மொஸ்கோ மீது தாக்குதல் நடத்தக் காலாக இருந்திருக்கலாம் எனச் சில மொஸ்கோ வாசிகள் நம்புகின்றனர்.

அண்மைய குண்டு வெடிப்புக்களை அடுத்து பல குண்டுப் புரளிகள், எச்சரிக்கைகள் விடப்பட்டதாகவும் இவற்றினைச் செய்தவர்கள் செச்சனி யாவை உள்ளடக்கிய காக்கேசிய மலைப் பிரதேச பேச்சுவழக்கைக் கொண்டிருந்த தாகவும் மொஸ்கோவின் மேயர் மேலும் தெரிவித்துள்ளார்.

மொஸ்கோவில் புதிய குற்றத்தடுப்புப் பாதுகாப்புக் கவுண்சிலுக்குப் பொறுப்பான அலெக்சாண்டர் லெபெட் என்பவர் அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தார். அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் இவருக்குப் பெரும் சவாலாக விளங்குகின்றன. இதேவேளை, பயங்கரவாதத்திற்கு எதிராகத் தான் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்போவதாகப் பொரிஸ் யெல்ட்சினும் அறிவித்துள்ளார்.

வர்த்தகத் துறையினர், மற்றும் ஏனையோர் மீது தினமும் குற்றவியல் குழுக்களினால் வன்முறை பிரயோ கிக்கப்பட்டு வந்தபோதும், மொஸ் கோவானது பொதுமக்கள் மீதான தான்தோன்றித் தனமான தாக்குதல் களிலிருந்தும் தப்பியிருந்தது எனக் கூறலாம்.

எனினும் செச்சனியப் போர் ஆரம்பமானதுதொட்டு, மொஸ்கோவில் தாக்குதல் இடம்பெறலாம் எனும் அச் சத்துடன் இருந்த மொஸ் கோவாசி களுக்கும் கடந்த மாதம் இடம் பெற்ற தாக்குதல் ஒன்று அபாயமணியைத் தட்டிவிட்டிருந்தது.

நிலக்கீழ்ப் பாதையொன்றில் (சப்வே) இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 4 பேர் கொல்லப்பட்டதுடன், பலர் காய மடைந்தது குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலங்களில் ரஷ்ய விமானங்களின் தாக்குதல்களினால், செச்சனியப் போராளிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள பலர் கொல்லப் பட்டதுடன், இன்னும் பலர் காயங்களுக்கு உள்ளானார்கள். குறிப்பாக, நாலாவது நாளாக இடம்பெற்ற ஆகாயத் தாக்குதலில், ஒரு நாளில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

அண்மையில் நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தலில், செச்சனியர்களுடன் சமாதானம் ஏற்படுத்துவேன் என உறுதிமொழி கூறியதற்கு மாறாக நடாத்தப்படும் விமானத் தாக்குதல்கள் காரணமாக யெல்ட்சின்மீது செச்சனியப் போராளிகள் மிகவும் ஆத்திரத்துடன் உள்ளனர்.

இதேவேளை, ரஷ்ய றொக்கட் தாக்குதலினால் இவ்வருடம் கொல்ல ப்பட்ட செச்சனிய தலைவரான டுடாயெவ், இம்மாதிரியான குண்டுத் தாக்குதல்களில் ஈடுபடவேண்டாம் எனத் தமது போராளிகளுக்கு உத்தரவிட்டிருந்தார் எனச் செச்சன் தலைவருக்கு நெருக் கமான ஒருவர் கூறியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"போராளிகள் இவ் உத்தரவினைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும்படி எதிர் பார்க்கப்படுகிறார்கள். எனினும், தனிப்பட்ட ஒருவர் அனுமதியின்றி தன்னிச்சையாக இச்செயல்களில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதை மறுக்க முடியாது" என இவர் மேலும் தெரி வித்துள்ளார்.

மொஸ்கோ நகரில் உள்ள அகதிகள், மற்றும் சந்தைகளில் கடைகள் அமைத்துள்ள மத்திய ஆசியர்கள், காக்கசஸ் மலைப்பிரதேச மக்களை அகற்ற வேண்டுமென மொஸ்கோவின் மேயர் கடந்த சில வருடங்களாக முயன்று வருகிறார். அண்மையில் கொண்டு வரப்பட்டுள்ள பயங்கரவா தத்தினை அகற்றும் சட்டம் இவ்வாறு தேவையற்ற, விரும்பத்தகாத எவரையும் அகற்றுவதற்கான சந்தர்ப்பங்களை அளித்துள்ளது எனலாம்.

இதேவேளை இக்குண்டுத் தாக்குதல்கள், செச்சனியர் மீது நடத்தப்படும் போரினை இன்னும் தீவிரப்படுத்துவதற்கான ஒரு சாட்டாக அமைந்துவிடுமோ என பிரச்சினையைச் சமாதான வழிகளில் தீர்க்கவிரும்புபவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## பிரித்தானிய, அயர்லாந்து சமாதானப் பேச்சு வார்த்தையில் தேக்க நிலை

அண்மையில் புரட்டஸ்தாந்தவர்களால் நடத்தப்பட்ட "ஒறேஞ் பேரணி", ஐ.ஆர்.ஏ யின் குண்டுவெடிப்பு என்பவற்றால் நடந்துகொண்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தை ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன், மேன்மேலும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிக்கப்படலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்தமைக்கு மாறாக, "ஒறேஞ் பேரணி"யை யூன் 12ந் திகதி நடத்த அனுமதித்தமை வடஅயர்லாந்தின் கத்தோலிக்கரிடையே பிரித்தானிய அரசுக் கெதிராக ஆத்திரத்தையும், அவ நம்பிக்கையையும் எழுப்பியுள்ளன.

கத்தோலிக்க மன்னனான 2வது யேம்சை 1690ல் மூன்றாவது வில்லியம் வெற்றிகொண்டதை ஞாபகப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டதே, இவ் "ஒறேஞ் பேரணி"யாகும். ஆரம்பத்தில் இப்பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்ட தாயினும், புரட்டஸ்தாந்தர்கள் வன் முறையில் இறங்கப்போவதாக அச் சுறுத்தியதனை அடுத்து, அரசு அனுமதி அளித்த இப்பேரணி இடம்பெறும் வண்ணம் பெல்வாஸ்டில் கத்தோலிக்கப் பகுதிகள் மூடப்பட்டிருந்தன.

"ஒரு அரசு இவ்வாறான அழுத்தங்களுக்கு இடங்கொடுக்கக் கூடாது" எனக் கூறிய அயர்லாந்துப் பிரதம மந்திரி, பிரித்தானிய அரசின் நிலையற்ற தன்மையையும், சட்ட விதிகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள ஒருபக்க சார்பு நிலையையும் கண்டித்தார்.

இதேவேளை, "சமாதானப் பேச்சுவார்த்தைகள் சீரழிந்து போய் விட்டதை நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன்" என ஐ.ஆர்.ஏ யின் அரசியல் அமைப்பான சின்பெயின் தலைவர் யெரி அடம்ஸ் அறிவித்துள்ளார்.

இதேவேளை, பெல்பாஸ்ட் நகரில் தென்மேற்கேயுள்ள எனின் நிலன் நகரிலுள்ள விடுதியொன்றில் வைக்கப்ப ட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் கட்டிடத்தின் முன்பகுதியும் ஏராளமான கார்களும் சேதத்திற்குள்ளாகின. கடந்த இரு வருடங்களில் வடஅயர்லாந்தில் இடம்பெற்ற முதாலாவது குண்டுவெடிப்பு இதுவாகும்.

சாள்ஸ் தேவசகாயம்

உ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ நினைத்தால்

## தவசி சந்தானம்மாவுடன் ஒரு நேர்காணல்



உப்பு மாவடி. இது முல்லைமாவட்டத்தின் ஒரு சிறிய கிராமம். தவசி சந்தானம்மா தனது வாழ்க்கையை ஆனந்தம் பொங்க ஒரு கூட்டுக் குயில் போல வாழ்ந்தார். பெரிய வசதியுடன் வாழவில்லை என்றாலும், அந்த வாழ்க்கையில் நிம்மதி இருந்தது. அந்தக் குடும்பத்துக்குத்தான் இந்த நிலை ஏற்பட்டது. எங்கிருந்தோ கொடும் புயலுடன் மழை வந்ததுபோல் வந்தான் அரக்கன். அவனுக்குத் தமிழன் என்றால் எல்லோருமே 'புலிகள்"" தான். அந்த இனவெறியால் அவர்களது கூடு கலைக்கப்பட்டது. வீடு, வாசல் சொத்துக்கள் எல்லாமே தீயிட்டு எரிக்கப்பட்டு, அந்தக் கிராமத்தை விட்டு கலைக்கப்பட்டார்கள்.

இவற்றையெல்லாம் இழந்தும் மனஉறுதியை மட்டும் அவர்கள் இழக்கவில்லை. அந்தக் குடும்பத்தில் இருந்து இந்த மண்ணின் விடுதலைக்காக இருவர் போராளிகளாக வந்தார்கள்.

மீண்டும் அதே இடத்தில் வேறொரு பகுதியில் அந்தக் குடும்பம் குடியேறியது. ஒரு குடிசையமைத்து சீவியம் தொடங்கியது. ஒரு பெண் மிகுந்த துன்பத்தின் மத்தியில் குளத்துக்குப் போய் மீன் பிடித்து தனது குடும்பத்தைக் காப்பாற்றினார்.

தவசி சந்தானம்மா

தனது அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார். அவருடனான நேர்காணலை இங்கு தருகின்றோம்.

சென்றவுடனே "வணக்கம் பிள்ளையள் வாருங்கோ" என்றபடி எங்களை வரவேற்றார் ஆனந்தமாய்.

**நாம்:-** நீங்கள் இங்கு தான் நிரந்தரமாக இருக்கிறீர்களா?

**அம்மா:-** என்னுடைய தந்தையின் இடம் குருநாகல். அங்கு ஒன்பது வயதுவரை இருந்து அதன் பின்பு எனக்குப் பத்துவயதில் வன்னிக்குக் குடும்பமாக வந்து குடியமர்ந்து தொழில்செய்தோம். அங்கமாதிரி, இங்கு அப்பா என்னைத் தொழிலுக்குப் போகும்போது கூட்டிப்போகமாட்டார். நான் பெரிய பிள்ளையாகிய காரணத்தால் அப்பா மட்டுமே தொழிலுக்குப் போவார். அங்கு பெரிய குளம் இல்லை. ஆனால் இங்கு அப்படி இல்லை. பெரிய ஆழமான குளம் எல்லாம் உள்ளது. குளத்தில் தொழில் செய்து கொண்டு இங்குதான் இருக்கிறம்.

**நாம்:-** நீங்கள் எத்தனை வருடமாக இந்தத் தொழிலைச் செய்து வருகிறீர்கள்?

**அம்மா:-** நான் பதின்நான்கு வயதில் விரும்பித்தான் திருமணம் செய்தேன். என் கணவர் கண்டி- அங்கு தேயிலைத் தொழிற்சாலையில் தொழில் செய்தவர். பிறகு இங்கு வந்தவுடன் றோட்டு வேலைக்கு மேற்பார்வையாளராக இருந்தவர். அதனால் எங்களுக்கு எந்தவித கஸ்ரமும் இல்லை. இடையில் வந்த பிரச்சினையால் அவருக்கு வேலை இல்லாமல் போய் விட்டது. அதன் பின்னர் எனக்கு நான்கு பிள்ளைகள் பிறந்த பின், மீண்டும் இருபத்தியெட்டு வயதில் மீன்பிடித் தொழிலுக்குப் போகலானேன். இடைக்கிடை தொழிலுக்குப் போவதில்லை. அந்த வேளையில் வெங்காயம் நடுவதிற்கும் களைபிடுங்க, தோட்டம் கொத்த, ஓலை பின்னப்போவேன். இப்ப இத் தொழிலை எட்டு வருடங்களாகச் செய்து கொண்டு வருகிறேன்.

**நாம்:-** இத்தொழிலைச் செய்வதன் நோக்கம் என்ன?

**அம்மா:-** என் கணவருக்குத் தொழில் இல்லை. தொழில் வந்தால் மட்டுமே தொழிலுக்குப் போவார். இப்படி இரண்டு பேரும் இருந்தால் பிள்ளைகளின் நிலை என்னவாவது? அதைப் பார்த்துப்போட்டுத்தான் நான் தொழிலுக்கு வெளிக்கிட்டனான். நானாவது உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமே. கணவர் ஒன்றும் சொல்லமாட்டார். தனியத்தான் போவன். சிலாவத்தைக் குளத்தில் கழுத்துமட்டத்துக்குத் தண்ணீர் நிற்கும். அதற்குள் இறங்கித் தூண்டில் போட்டுப் பிடிப்பன். அப்ப என்னிடம் தெப்பம் (கட்டுமரம்) இல்லை. அதையும் இப்பத்தான் வாங்கினேன். ஒவ்வொரு நாளும் மீன் பிடிக்கப் போய்வரும்போது தாமரை இலை பிடுங்கி விற்ற வருமானத்திலதான் தெப்பம் வாங்கினேன்.

**- நேர்முகம்: அமுதநிலா -**

தெப்பத்தில போனால் ஆமை, நல்ல ருசியான மீன் வகைகள் கொண்டுவருவேன். அதோட ஒலுவிதை கொண்டு வந்து, ஒரு கொத்து பதினைந்து ரூபாவிற்குக் கொடுப்பேன். இப்படி உழைத்துத்தான் ஐந்து பிள்ளைக்கும் திருமணம் செய்து கொடுத்தனான். இன்னும் ஆறு பேர். அதில் இரண்டு பேர் போராளிகள். மற்றவர்களில் இரண்டு பேர் படிக்கிறார்கள். இரண்டு பிள்ளையளும் வேலை வரும்நேரம் போவாங்கள். எல்லாம் என்னுடைய கெட்டித்தனம் எண்டுதான் சொல்ல வேணும்.

**நாம்:-** நீங்கள் தனியத் தொழிலுக்குப் போவதால் பயம் ஏற்படுவதில்லையா?

**அம்மா:-** இத்தனை வருடமாய் செய்துவருகிறேன். "குளத்தில் மீன் பிடிக்கும்போது நீ விழுந்தா ஒருத்தரும் வந்து சொல்லுறதுக்கில்லை. அக்கம் பக்கத்திலும் யாரும் இல்லை. இப்படி என்னண்டு துணிந்து நிற்கிறாய் பயம் இல்லாமல்" என்று சனம் கேட்கும். எனக்கு அது பழகிப் போட்டுது. நான் விழமாட்டேன் என்கிற நம்பிக்கை எனக்கு வந்து விட்டது.

முதலையும் இருக்குது, அது வருவது தெரியாது. சம்பு, பாசி உள்ள பக்கம் நின்று பிடிப்பேன், முதலை வருவது தெரியும். அப்ப நான் விலகி நிற்பேன். அது தன்வழியே போய்விடும். தும்பு, பாசி இல்லாத இடங்களில் நின்றால் அது வருவது தெரியாது. கீழாலை வந்து இழுத்துக்கொண்டு போய்விடும். அங்காலை உள்ள முதலை ஆக்களை விழுங்கும். இது ஆக்களை விழுங்காது. வேறு யாரும் எண்டால் முதலை எண்டாலே தொழிலுக்குக் போகமாட்டினம். எனக்கு எல்லாம் பழகிப்போட்டுது.

**நாம்:-** இந்தத் தொழிலைச் செய்யும்போது நீங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் என்ன?

**அம்மா:-** என் கூடப்பிறந்த தம்பி, பிள்ளைகள் உட்பட எல்லோரும் பேசினவைகள். 'பார்' ஒரு பொம்பிளை கலியாணம் செய்து, தொழிலுக்கு ஆம்பிளைகள்மாதிரிப் போகுது என்று எத்தனை பேரின் நையாண்டிகளையும் கேட்டுக்கொண்டு இந்தத் தொழிலைச் செய்தேன். இப்ப தொடர்ச்சியாகப் போவதால் ஒன்றும் கதைப்பது கிடையாது. நான் தொழிலுக்குப் போகாட்டி வீடு தேடி வந்துவிடுவினம். தொழிலுக்குப் போகவில்லையா, மீன் கொண்டு வரவில்லையா என்று கேட்குமளவுக்கு மாற்றம் இப்ப.

**நாம்:-** இந்தத் தொழிலைப் பெண்கள் எல்லோரும் செய்வது பற்றி உங்கள் கருத்தென்ன?

**அம்மா:-** எந்தத் தொழிலையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும். அப்படி ஒரு வருத்தம் கணவருக்கு வந்துவிட்டது. அவரால் தொழிலுக்குப் போகமுடிய வில்லை என்றால், அன்று பெண் தொழிலுக்குப் போகக்கூடிய அளவுக்கு இருக்கவேண்டும். என் கணவர் தொழிலுக்குப் போகாட்டா அன்று நான் போவேன். நானும் அன்று இந்தத் தொழிலைக் கற்று வைத்திருக்க வில்லையென்றால் என் குடும்பநிலை என்னாவது? என் கணவரின் தொழிலைமட்டும் நம்பி நான் குடும்பத்தை நடத்தவில்லை. இப்படி எல்லாப் பெண்களுமே உணர்ந்தால் ஏன் குடும்பத்தில் பிரச்சினை வருகுது. இப்ப வீட்டில் இரண்டு பேரும் உழைத்தால்தான் சீவியத்துக்குக் காணும். எல்லாப் பெண்களும் உழைக்க முன்வரவேண்டும்.

**நாம்:-** இந்தத் தொழிலை ஊக்குவித்தவர் யார்?

**அம்மா:-** என்னுடைய அப்பா என்றுதான் சொல்லவேணும். அப்பா தான் தொழிலுக்குப் போகும்போது என்னையும் கூட்டிப்போவார். அப்பா மீன் பிடிக்கேக்குள்ள நான் பார்த்துக்கொண்டு நிற்பன். கையாலை நானும் பிடிப்பன். இப்ப அதுவே என்ர தொழிலாய்ப் போய்விட்டது.

**நாம்:-** இத்தொழிலைச் செய்வதனால் மேலதிக லாபம் வருமா?

**அம்மா:-** எனக்கு இப்ப நாற்பத்தொன்பது வயதாய் போகுது. தொய்வு வருத்தம் வரும். அதற்கு மருந்து வாங்கித்தான் பாவிப்பன். அதால மேலதிகமாய் வருமானம் வரும் என சொல்வதற்கில்லை. எனக்கு வியாபாரம் எனில் மாரிகாலம் மட்டும் லாபம் வரும். அப்ப கடல் தொழிலுக்கு போகமாட்டினம். மாசிக்குத்தான் போவினம். அந்த இடைவெளியில் எனக்கு கூடுதலாய் மீன், மட்டி வரும். மட்டி ஒருசுண்டு ஐந்து ரூபாவுக்குக் கொடுப்பேன். மீன் நூற்றம்பது, நூற்றியறுபது ரூபாவுக்குக் கொடுப்பன். இருந்தும் லாபத்தை எதிர்பார்த்துத் தொழில் செய்வதில்லை. பிள்ளைகளை வளர்க்க வந்தால் காணும் என்ற எண்ணம்தான் என் மனதில் எப்போதுமே.

அவரிடம் இவற்றையெல்லாம் கேட்டறிந்து, நன்றியுடன் விடைபெற்றோம். ✷

**நன்றி: சுதந்திரப் பறவைகள்**

## நுணுக்குக் காட்டி

"அரசின் தீர்வு யோசனைகள் அமுலாக வேண்டுமானால் முதலில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும் பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். அதன் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். இது நடைமுறைச் சாத்தியமான காரியமா? நிதானமாகச் சிந்திப்பவர்கள் இல்லை என்றே கூறுவார்கள்."

**– அமைச்சர் எஸ்.தொண்டமான்**
**'வீரகேசரி'– 09.06.96**

"நாற்பது ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற தமிழ் உரிமைப் போராட்டத்தை நினைவு கூரவே நாம் இங்கு கூடியிருக்கின்றோம். அன்றைய நிலையை விடத் தமிழரின் நிலை இன்று மிகவும் சிக்கலடைந்திருப்பதாகவே நாம் கருதுகிறோம்.

இந்த அரசு பதவி ஏற்றபோது தமிழ் மக்களிடம் இருந்த எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள், ஆர்வங்கள் அனைத்தும் இன்று குன்றி வருவதையே எம்மால் அவதானிக்க முடிகிறது".

**– பிரதி அமைச்சர்**
**பி.சந்திரசேகரன்**
**'வீரகேசரி' –09.06.96**

"பண்டா–செல்வா ஒப்பந்தம், டட்லி–செல்வா ஒப்பந்தம் என்று மாறிமாறிவரும் அரசுகளுடன் ஒப்பந்தங்கள் எழுதுவதும், பின்பு ஒப்பாரி வைப்பதுமே எமக்குப் பழக்கமாகி விட்டது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற மொழி உரிமைப் போராட்டங்கள் பற்றியும் சத்தியாக்கிரகத்தின் மகிமை பற்றியும் கூட்டங்கள் கூடிப் பேசுவதின் மூலமோ, பாராளுமன்றத்தில் இவை பற்றி விவாதங்கள் நடத்துவதன் மூலமோ எதையும் நாம் பெற்றுவிட முடியாது."

**அமைச்சர் எஸ்.தொண்டமான்**
**'வீரகேசரி' –09.06.96**

முட்களின் மேல் நடப்பது போலவும் வெறிச்சோடிய சூன்யத்துக்குள் இருப்பது போலவும் வினாடிகள் ஒவ்வொன்றும் ஒரு பயங்கரம் வந்து நகர்வது போலவும் ஆன வடபுல வாழ்க்கை!

ஷெல்லடித்த காயங்களில் கட்டட உடல்கள் சிதைந்து நிற்க பெண்மை பலாத்காரமாய் பறிக்கப்பட்டும் வாழ்க்கை எல்லா விதத்திலும் ஒடுக்கப்பட்டும் இன்னும்–

மனிதஉணர்வுகள் அடக்கப்பட்டும் இருக்கும். இதை விட மரணம் மேலானது என நினைக்க வைக்கும்!

**–ஆஷா 'சரிநிகர்'**
**மே 02–மே 15,1996**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நெதர்லாந்தில்

அகன்ற வெண்திரையில்

இரு தமிழீழத் திரைப்படங்கள்

ஒரு நெருப்பு மனிதன்! கடற் கரும்புலி!

கடலிலே காவியமான

எங்கள் தேசத்து வீரப்புதல்வனின் கதை

உயிர்ப்பூ

கரும்புலித் தாக்குதல்களின்

நேரடி ஒளிப்பதிவின் தொகுப்பு

காலம் :

24 - 08 - 1996

(சனிக்கிழமை) மாலை 4 மணி

இடம் :

Roosendaal

சினிமா திரையரங்கில்

CITY THEATER - ROOSENDAAL

புகையிரத நிலையத்திற்கு முன்பாக

படப்பிடிப்பு, நெறியாள்கை

கதாபாத்திரங்களின் இயற்கையான

நகர்வுகளுடன் தமிழீழத்தில்

தயாரிக்கப்பட்ட இத்திரைப்படம் சர்வதேச

சிறந்த திரைப்படங்களின் வரிசையை

நோக்கிச் செல்லத்தக்கது எனப் பல

திரைப்பட விமர்சகர்களால்

இன்னுமொரு நாடு

மாவீரன் மேஜர் கின்னியின் வீரமும் தீரமும் நிறைந்த வாழ்வை

மையமாக வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் முல்லை மாவட்டக்

கலை பண்பாட்டுக் கழகம் தயாரித்த அற்புத காவியம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் (பிரித்தானியக் கிளை)

கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும்

எழுச்சி கானங்கள் 96

17 - 08 - 1996

(சனிக்கிழமை) மாலை 6.30 மணி

| நுழைவுச் சீட்டுக்கள் : | |
|---|---|
| தனிநபர் : | £ 7.00 |
| குடும்பம்: | £20.00 |
| முன்னிருக்கைகள்: (நான்கு இருக்கைகள்) | £50.00 |

இடம் :

BRENT TOWN HALL

FORTY LANE

WEMBLEY

MIDDX.

தொடர்புக்கு: UTO ☎ 0181 - 503 4294 0181 - 545 0263 0956 - 314 370 0956 - 329 660 0956 - 970 392 0956 - 583 087

தமிழீழக் கலைஞர்களின் ....

மற்றுமோர் படைப்பு!!!

நம்பிக்கை தரும்

புதிய ஒளியை நோக்கி....

தமிழீழப் பெண்கள்!

"திசைகள் வெளிக்கும்"

(முழு நீள திரைச் சித்திரம்)

பெற்றோரும் உற்றாரும்

உறவும் ஊராரும்...

பார்க்கின்ற பார்வையிலே பேதம் !

வீட்டினுள்ளும் வீதியிலும்....

விலங்கைச் சுமக்கின்ற விதி !

சமூகத்தின் பலவீனங்களுக்கு

பலியாகும் பாவம் !!!

இந்த நியதி...

தொடர்கதையாய் தொடர்வதே விதியா??

இல்லை ! இல்லை !!

11 - 08 - 1996

(ஞாயிறு)

பிற்பகல் 5.00 மணி /

மாலை 7.00 மணி

( இரு காட்சிகள் )

"திசைகள் வெளிக்கும்"

இடம் : Le Trianon, 80, Bld. Rochechouart, 75018 Paris.

( M°: Anvers)

தமிழர் கலை பண்பாட்டுக் கழகம், பிரான்ஸ் ☎ 43 58 11 42

# எத்தனை எத்தனை வித்துக்கள்...

இன்றும் கூட இந்தியாவின் இராணுவ உதவியைப்பெற்றேனும், தமிழர்களை அடக்கவேண்டும் என்ற ஆசையே இன்னும் பலரிடம் உள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

அன்று உணவுப்பொட்டலம் போட்டபோது ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்திய சிங்களக் கத்தோலிக்க சமூகம், அன்று மட்டுமல்ல இன்றும் கூட, இதுவரையில் அரசின் பொருளாதாரத்தடையால் அனைத்து அடிப்படைத்தேவைகளையும் இழந்து சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் வடக்குக் கிழக்கு மக்களுக்காக, "தடையை நீக்கு, தாராளமாகக் கொடு" என்று அரசைநோக்கிக் குரல் எழுப்பாமல் இருப்பது ஏன்?

இன்னும் சொல்லப்போனால், ஜெரி டி சில்வா உட்பட அரசின் முப்படைகளினதும் முக்கிய உயர் அதிகாரிகள் கத்தோலிக்கரே. இவர்கள்தான், பௌத்த சிங்களப் பேரினவாதிகள் செய்விக்கும் கொலைச் செயல்களை மொத்தமாகக் குத்தகையெடுத்திருப்பவர்கள்!

இன்னுமொரு விதத்தில், சிங்கள கிறீஸ்தவ சமூகங்களும் பௌத்த சிங்கள அரசின் பார்வையில் இரண்டாந்தரப் பிரஜைகளே: ஒரு விதத்தில் சந்தேகத்துக்குரியவர்களே, அண்மையில் பேராயர் கெனத் பெர்னாண்டோவுக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்கள் இதற்குச் சான்று.

சுருங்கக் கூறுவதாயின், பௌத்த சிங்களவர் அல்லாதவர்கள் எல்லோரும், அந்தப் பெரும்பான்மைச் சமூகத்தின் முன்னால் கையாலாகாதவர்களே. இந்நிலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒலிக்கும் இந்த உதிரிக் கூச்சல்கள், அனுதாப ஒலிகள் எதுவும் தமிழர்தம் அபிலாசைகளை நிறைவேற்றிவைக்க உதவப்போவதில்லை!

எது எப்படியாயினும், 'அதி உத்தம ஜனாதிபதி' சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு, ஈழத் தமிழினம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது!

1956 ஆம் ஆண்டில், தனிச் சிங்கள மசோதா நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது, சந்திரிகா அம்மையாரின் தந்தையாகிய அன்றைய பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கு, கொல்வின் ஆர். டி. சில்வா சொன்னவார்த்தைகள், இன்றைய ஜனாதிபதிக்கும் பொருந்தும்.

"தமிழர்களைப் பிழையாக நடத்துவாயானால் – அவர்களைத் துன்புறுத்துவாயானால் – அவர்களைப் பிழையாகப் பயன்படுத்துவாயானால் – அவர்களை ஒடுக்கியும் இன்னலுக்கும் உள்ளாக்குவாயானால், அதன் காரணமாக, தனித்துவமும் வளமான மரபும் மொழியும் கொண்ட அந்த மக்கள், ஒரு தனித் தேசிய இனம் என்ற வகையில் இப்போது முன்வைத்ததை விட, அதிகம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டி வரும். ஒரு அறிவுள்ள அரசியல் தலைவனின் கடமை என்னவெனில், காலம் தாழ்த்தாது, முன்கூட்டியே தாராளமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதே"

"......நாடு பிரியக் காரணமாய் இருந்தாய் என்பதற்காக, எதிர்காலத்தில் தமிழர்கள் உனக்குச் சிலை எழுப்பி மாலை சூட்டுவார்கள்."

ஜனநாயகம், மனிதாபிமானம், இன சமத்துவம், பேச்சுவார்த்தை என்ற முகமூடியோடு பதவிக்கு வந்த சந்திரிகா, தன் முந்தையோருக்குச் சளைத்தவரல்ல என்று காட்ட, தன் முகமூடியைக் கிழித்தெறிந்து தாண்டவமாடத் தொடங்கியுள்ளார்!

விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, விடுதலை விரும்பியான எந்தத் தமிழ் மகனும் ஏற்றுக்கொள்ள முடியாத தீர்வினை–மிக அற்பச் சலுகைகளே முன்வைக்கப்பட்ட தீர்வினை–பெரும்பான்மையோரின் அபிலாசைகளுக்கொப்ப இன்னும் மாற்றங்கள் செய்யப்படவிருக்கும் தீர்வினை–சந்திரிகா அறிவித்திருந்தபோதும், அதனைக்கூட ஜீரணித்துக்கொள்ள முடியாத நிலையில் சிங்களப் பெரும்பான்மை இனம் கூச்சலிடுவதை– வெளிநாடுகளில் நின்றும் கூவித்திரிவதை– அனைத்துலகுமே கண்டுகொள்ளக்கூடிய அளவுக்கு நிலைமையைப் பகிரங்கப்படுத்தியுள்ளார் இப்படி ஒரு நிலைமையைத் தோற்றுவித்தமைக்கு நன்றி கூறுவோம்.

39 ஆண்டுகளுக்கு முன்னர் கொல்வின் ஆர்.டி.சில்வா மொழிந்த முற்சொல் இன்றைய யதார்த்தமாகியுள்ளது...... அதற்காகவே விடுதலை வித்துக்கள் இந்த மண்ணிலே விதைக்கப்படுகின்றன........ அவை மீண்டும் வீறுகொண்டு எழுந்துகொண்டே இருக்கும்.......!

**அவை எத்தனை? எத்தனை? எதுவரை?**

**தமிழீழத் தாயகம் பெறும்வரை!**

(முற்றும்) ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அரசியல் தீர்வும் அரசின் ....

இராணுவ ரீதியிலான தீர்வொன்றை நோக்கி – சந்திரிகா அரசாங்கம் செல்கின்றது.

இத்தகைய இனவாத அணுகுமுறையை அரசாங்கம் கடைப்பிடிக்கும்வரை, தீர்வு யோசனைகள் – பேச்சு வார்த்தைகள் என்பன அர்த்த மற்றவைகளாகவே இருக்கும்.

இந்த வகையில், தமிழரின் தேசியபலம் ஒன்று திரட்டப்பட்டு வலுப்படுத்தப்பட வேண்டிய அத்தியாவசிய தேவையை, எமது மக்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். தமிழரின் படைப்பல அதிகரிப்பும், நிர்ப்பந்தங்களுக்கு அடிபணியாத உறுதிப்பாடும்தான், தமிழினத்திற்குச் சுபீட்சத்தைப் பெற்றுக்கொடுக்கும் என்ற உண்மையை, எமது மக்கள் என்றும் மனதில் வைத்திருக்க வேண்டும். ✷

## சர்வதேசக் குற்றச் செயலில் ...

ஆத்திரமடைந்து உணவை ஆயுதமாகப் பயன்படுத்தும் கொடிய செயலை ஆரம்பித்துள்ளது.

18 உணவு லொறிகளை வன்னிப் பிரதேசத்திற்குள் பிரவேசிக்கவிடாது சிறிலங்கா அரசு தடுத்து வைத்துள்ளது. இதனால் வன்னிப் பகுதிக்கான உணவு நிலை மிகவும் அபாயகரமான கட்டத்திற்குச் சென்றுள்ளது. இடம்பெயர்ந்த துன்பத்துடன் உள்ள மக்கள்மீது, இவ் உணவுத் தடையும் சேர்ந்து தாங்கொணாத இன்னல்களை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் உணவின்றிப் பட்டினிநிலைக்கு உள்ளாகி உயிரிழக்கவும் நோய்வாய்ப்படவும் சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருகின்றது. இவ் அவல நிலையைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சிறிலங்கா அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோதும் தொடர்ந்தும் அரசு இதனை அசட்டை செய்து வருகிறது.

### புலம்பெயர்ந்த தமிழர்களின் கடமை

மக்கள் காட்டுப் பிரதேசங்களில் தங்கிட வசதியின்றி மர நிழல்களின் கீழ் புகலிடம் தேடிய நிலையில், குடிக்க நல்ல தண்ணீர் கூட இல்லாமல் பெரும் அவலத்துக்குள்ளாகியுள்ளனர்.

இவ்வாறான நேரத்தில், சிறிலங்கா அரசு உணவைத் தடை செய்து உணவை ஆயுதமாக்கும் போர்க்குற்றச் செயலில் இறங்கியுள்ளது.

இதனைக் கண்டித்து, சிறிலங்கா சர்வதேச போர் விதிகளை மதித்து, மக்களுக்கு உதவிகள் கிடைக்க வழிவிட வேண்டும், மக்கள் மீதான தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என சர்வதேச நாடுகள் சிறிலங்காவை வற்புறுத்தும்படி, புலம் பெயர்ந்த தமிழர்கள் நிச்சயமாகக் குரல் எழுப்ப வேண்டும்.

மக்களுக்குப் பணியாற்றி வந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் இடம் பெயர்ந்துள்ளமையினால் மக்களுக்கு உதவிகள் ஏதுமற்ற நிலை தோன்றியுள்ளது. இந்நிலையில் உலகத் தமிழர்கள் அனைவரும் புனர்வாழ்வு கழகத்திற்கான உதவிகளை அதிகரிப்பதன் மூலம் தங்களுடைய இனத்துக்குத் தாங்களே உதவி செய்ய வேண்டியவர்கள் என்பதையும், மக்கள் இடம்பெயர்ந்துள்ள இக்கட்டான சூழ்நிலையில், இவ் உதவிகள் மிக மிக அவசியமானதுடன் அவசரமானதென்பதனையும் உணரவேண்டிய நிலையில் உள்ளனர். ✷

இலண்டனில்.....

# மாபெரும் ஊர்வலம்

**காலம் : 17 - 08 - 96 சனிக்கிழமை**

**காலை 11 மணி**

**புறப்படும் இடம் : TEMPLE PLACE, WC2**

**முடிவுறும் இடம் : HYDE PARK, W2**

### தமிழீழ மக்களே!

சிறிலங்கா அரசு, முல்லை மண்ணில் பெற்ற வரலாறு காணாத இராணுவத் தோல்வியை மூடிமறைப்பதற்காகக் கிளிநொச்சியை நோக்கி, சத்ஜெய இராணுவ நடவடிக்கையைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதுடன் மக்கள் குடியிருப்புக்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு ஏவிவரும் "ஆட்டிலறி எறிகணைகள் விமானக் குண்டுகளால் உடல் சிதறிப் பலியானோர் போக, மீதியான 200,000கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பற்ற நிலையில், வீதிகளிலும் மரங்களின் கீழும் கொடுமையான பட்டினியுடன் தங்கியுள்ளனர். அவர்களுக்கு மிக அருமையாகக் கிடைத்த உணவு, மருத்துவ வசதிகளுக்கும் சிறிலங்கா அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது. மக்களை இலக்காக்கி தாக்குதல்களைச் மேற்கொண்டு, குண்டுகளை வீசியும் பட்டினி போட்டும் எம்மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்க முற்பட்டும் தமிழினத்தையே அழிக்க முடிவெடுத்திருக்கும் சிறிலங்கா அரசின் அரக்கத்தனத்தை, மனித உரிமை மீறல்களைச் சர்வதேச சமூகத்தின் முன் வெளிப்படுத்தி எம்மக்களைக் காப்பாற்றும் பெரும் பணியைச் செய்வது, புலம்பெயர்ந்துவாழும் எம்மவர் ஒவ்வொருவரதும் வரலாற்றுக் கடமையாகும்.

### தமிழீழ தேசாபிமானிகளே!

மிக அவசியமானதும் அவசரமானதுமான இவ் வரலாற்றுக் கடமையைச் செய்து, சிறிலங்கா அரசின் இனஅழிப்புக்கான முகத்திரையைக் கிழித்தெறிய சர்வதேச சமூகத்தின் முன் அதன் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்த...

**இனமான உணர்வுடன் ஒன்றிணைவோம்!**

**அணி அணியாகத் திரள்வோம்!!**

**பேரணியாகச் செல்வோம்!!!**

அருகாமையிலுள்ள TUBE நிலையம் : TEMPLE

☎ 0181-503 - 4294

## சிறிலங்காவில் அமெரிக்காவின்...

போர்வீரர்களை இழந்த நிலையில் வியட்னாம் பாணியில் இந்தியா தோல்வி கண்டு சிறிலங்காவிலிருந்து வெளியேறியது. இதனால், இந்த வரலாற்றுப் பின்னணியில் அமெரிக்க கிறீன் பெரட்ஸ் இரகசியமாக அறிவித்தலின்றி அங்கு சென்றிருக்கலாம். சமீபத்துச் செவ்வி ஒன்றில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், சிறிலங்காவில் அமெரிக்கப் படையினர் செயற்படுவதை மறுத்துள்ளார்.

உண்மையில், கூட்டுக்கட்டளைப் பயிற்சிகள் மற்றும் இராணுவப் பயிற்சிகள் என்பன அமைதியான காலங்களில் சகோதரத்துவப் படையினர்க்கு வழங்கப்படுவது என்று, இது குறித்த அமெரிக்காவின் விளக்கமாக அமையலாம்.

கொள்கையளவில், பயிற்சி பெறும் இராணுவத்தினர் பெறுமதிவாய்ந்த நுணுக்கங்களைப் பழக – அமெரிக்க இராணுவம் அந்த வெளிநாட்டு இராணுவம் எப்படிச் செயற்படுகின்றது எனும் தனது எதிர்காலப் பயன்பாட்டுக்கான அறிவைப் பெற்றுக் கொள்ளும். மற்றைய நாடுகளின் வரலாறுகளின் அடிப்படையில், அமெரிக்கா ஏற்கெனவே உள்நாட்டுப் போர்களில் தலையிடக்கூடாது எனும் பாடத்தைப் படித்துள்ளது.

### மயிலாட்டம் மாறி தமிழர்மேல் சதிராட்டம் ஆகும்

சிறிலங்காவுக்கு வந்த கிறீன் பெரட்ஸ் அணியின் தலைமை அதிகாரியான கப்டன் மக்டொனால்ட், உலங்கு வானூர்தி எப்படிச் சரியான முறையில் தரையிறங்கி மேல் எழலாம் என்ற நுணுக்கத்தை ஆனி மாதத்தில் சிறிலங்காப் படையினர்க்குக் கற்பித்துள்ளார். அவர் கூறினார், "மயில்கள் விமானப் படைத்தளத்தில் பறந்து ஆடி மகிழ்வூட்டுவதை இங்குதான் கண்டு அதிசயித்தேன்".

ஆனால், வீரவில பயிற்சி முகாமில் அவரிடம் பயிற்சி பெற்றவர்கள், மயில்களை வீரவில தளத்தில் விட்டுவிட்டு, தமிழ் மக்களுடன் போர் செய்யத் தமிழர் பிரதேசம் நோக்கிப் புறப்பட்டுவிட்டனர். ✷

## ருவண்டா, சோமாலியாவை விட...

முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் டக்லஸ் கேட்டின் (Douglas Hurd) மொழியில், தமிழீழ மக்கள் "அதிஉயர் மனிதாய உதவிகளுக்கு உரியவர்களாக" உள்ளனர்.

இத்தகைய நிலையில், ஐ.நா சபையின் 794ஆம் இலக்கத் தீர்மானப்படி "இம்மக்கள் மனிதாய உதவிகளை பெறுவதற்கான, பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய" கடமை சர்வதேச சமூகத்துக்கு உண்டு.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக உதவுவது இத்தகைய சூழ்நிலையில், நாட்டின் இறைமையை விட முக்கியமானது என்பது சர்வதேசக் கருத்து. ஆகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு – தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்மூலம் நேரடியாக உதவுவதே இந்நேரத்தில் அவர்களின் வேதனையைத் தீர்ப்பதற்கான ஒரேவழி.

அத்துடன் 1948ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை இலங்கைத்தீவில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பான – அமைதியான வாழ்வை உறுதிப்படுத்த ஆற்றலற்ற அரசாக சிறிலங்கா இருப்பதினால், ஐக்கிய நாடுகள் சபையின் சட்டப்படி "அரசின் ஆற்றலின்மை" நிரூபிக்கப்பட்ட நேரத்தில், அம்மக்களுக்கான பாதுகாப்பை – அமைதியை அம்மக்களுடனான நேரடித் தலையீட்டின் மூலம் ஏற்படுத்த வேண்டிய உரிமை ஐ.நா.வுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் உண்டு.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக போராடும் இயக்கத்தை அங்கீகரிப்பதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான ஒருவழி என்ற சர்வதேசக் கருத்தை மதித்து, தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரிப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச நாடுகள் உதவலாம். இதனை சர்வதேச மக்களுக்கு எடுத்து விளக்கி அவர்கள் மூலம் அரசுக்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு, புலம் பெயர்ந்த தமிழர்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாக உள்ளது. ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

TAMIL EELAM

வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

# பிரபாகரன் படைகள் பெரு நெருப்பு - இனி
# பகைவனுக்கு இடமில்லை, வா படைக்கு
# வந்த பகைவனை புதைத்திடுவோம் - நாளை
# வருகின்ற எதிரியை உதைத்திடுவோம் !





Printed by Observer Group Newspapers, Upton Court, Slough, Berks. Tel. (01753) 523355

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்